கலை இலக்கிய மாத சஞ்சிகை

196

பங்குனி 20.03.2023

ஆவணச்சிறப்பிதழ்

# ஜீவநதி

பிரதம ஆசிரியர் : க.பரணீதரன்

100/-

## ஈழத்துச் சாதியச் சிறுகதைகள் சிறப்பிதழ்





கே. டானியல்

தெணியான்

யோ. பெனடிக்ற் பாலன்

என்.கே.ரகுநாதன்

ஆ. இரத்தினவேலோன்

அ. தேவதாசன்

மு.அநாதரட்சகன்

இ.இராஜேஸ்கண்ணன்

க.பரணீதரன்

அனோஜன் பாலகிருஷ்ணன்

இன்பமகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீவநதி

-கலை இலக்கிய மாத சஞ்சிகை-

ஆவணச் சிறப்பிதழ்

**2023 பங்குனி இதழ் - 196**


அறிஞர் தம் இதய ஓடை
ஆழ நீர் தன்னை மொண்டு
செறி தரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றி...
புதியதோர் உலகம் செய்வோம்.!

- பாரதிதாசன்-


**பிரதம ஆசிரியர்**

க.பரணீதரன்

**துணை ஆசிரியர்கள்**

வெற்றிவேல் துஷ்யந்தன்

ப.விஷ்ணுவர்த்தினி

**பதிப்பாசிரியர்**

கலாநிதி த.கலாமணி



**தொடர்புகளுக்கு :**

கலை அகம்

சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி

அல்வாய் வடமேற்கு, அல்வாய்

இலங்கை.

**ஆலோசகர் :**

திரு.கி.நடராஜா

**தொலைபேசி :**

0775991949, 0212262225

**E-mail** : jeevanathy@yahoo.com

**வங்கித் தொடர்புகள்**

K.Bharaneetharan

Commercial Bank, Nelliady

A/C - 8108021808 - CCEYLKLY



இச்சஞ்சிகையில் இடம்பெறும் அனைத்து ஆக்கங்களின் கருத்துக்களுக்கும் அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள்.


# பொருளடக்கம்


1. ஆற்றல் மிகு கரத்தில்
 - கே.டானியல் -

2. அசல் யாழ்ப்பாணத்து மனிதன்
 - தெணியான் -

3. ஒரு நாய்ப்பயல்
 - யோ.பெனடிற்க் பாலன் -

4. நிலவினிலே பேசுவோம்
 - என்.கே.ரகுநாதன் -

5. ஒற்றைப் பனை
 - புலோலியூர் ஆ. இரத்தினவேலோன் -

6. கண்ணி
 - அ.தேவதாசன் -

7. வைராக்கியம்
 - மு.அநாதரட்சகன் -

8. அகதி அந்தஸ்து
 - இ.இராஜேஸ்கண்ணன்

9. உயிரிலும் மேலானது...
 - க.பரணீதரன் -

10. வேறையாட்கள்
 - அனோஜன் பாலகிருஷ்ணன் -

11. ஈழத்து சாதிய இலக்கியத்தின் இன்றைய நிலை
 - இன்பமகன் -


## ஈழத்து சாதியச் சிறுகதைகள் சிறப்பிதழ்

ஜீவநதியின் பங்குனி மாத ஆவணச் சிறப்பிதழ் "ஈழத்துச் சாதியச் சிறுகதைகள்" சிலவற்றை உள்ளடக்கி வெளி வருகின்றது. ஈழத்தில் சாதியப் பிரச்சினைகள் எவ்வாறு வடிவ மாற்றம் பெற்று இன்றும் அரங்கேறி வருகின்றன என்பதற்கு இவ் இதழில் உள்ள கதைகள் எடுத்துக்காட்டாக உள்ளன. சாதியப் பிரச்சினைகள் தீர்ந்து விட்டன, அவற்றைப் பேசத்தேவையில்லை எனக் கருதுவோர் சிலர் இருக்கிறார்கள். ஆனால் நீறு பூத்த நெருப்பாக சாதியப் பிரச்சினைகள் இருந்த வண்ணமே உள்ளன. பலரது மனங்களில் அழிக்க முடியாத வகையில் சாதிய மேலாண்மை இருந்து கொண்டு தான் இருக்கின்றது. சந்தர்ப்பம் வருகின்ற வேளைகளில் நஞ்சைக் கக்குபவர்களாகவே பலரும் இருக்கின்றார்கள். இன்றும் ஒருவரைக் காணுகின்ற சமயத்தில் முதல் வேலையாக அவர் வசிக்கின்ற இடத்தை வைத்துக் கொண்டு அவரை என்ன சாதி என் அறியவே பலரும் முனைவதை அவதானித்துக் கொண்டு தான் இருக்கின்றோம். வேலைத்தளங்களில் சாதியப்பிரச்சினைகள் குறைவு எனக் கருதினாலும், தாழ்த்தப்பட்ட உத்தியோகத்தரது ஒரு நிகழ்வுக்கு சக உத்தியோகத்தர்கள் செல்கின்ற சமயத்தில் சாதியப் பிரச்சினைகள் பேயாட்டம் ஆடுவதை மறுக்க முடியுமா? மனித மனங்களில் மாற்றம் ஏற்பட வேண்டும், கலப்புத் திருமணங்கள் இருபக்க சம்மதத்துடன் ஒன்றுபட்ட நிகழ்வாக இடம்பெற வேண்டும். மனிதனை மனிதனாக மதிக்கின்ற பண்பு வளர வேண்டும். திருமண விளம்பரங்களில் சாதியைக் குறிப்பிடுதல் தவிர்க்கப்பட வேண்டும். இன்று சாதிய நாவல்கள் எழுதுவதற்கும் சாதிய பிரச்சினைகளை முன்வைத்து கதைகள் எழுதுவதற்கு பலரும் பின்னிற்கிறார்கள். ஆனால் சாதியப் பிரச்சினைகள் நிகழ்ந்த வண்ணமேயிருக்கின்றன. போராட்ட காலத்தில் சட்ட ரீதியாகத் தடைசெய்யப்பட்ட இப்பிரச்சினைகள் வடிவமாற்றம் அடைந்து இன்று மெதுமெதுவாக தன் கோர முகத்தை காட்ட முனைகிறது... சாதியப் பிரச்சினைகளை முன்வைத்த கருக் கொண்ட படைப்புகள் மேலும் மேலும் வரவேண்டும் பிரச்சினைகள் பேசப்பட வேண்டும்.

- க. பரணீதரன்


08 JUN 2023

பொது நூலகம்

யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆற்றல் மிகு கரத்தில்

## கே.டானியல்

மனதிலே சகிக்க முடியாத வேதனை ஏற்படும் போதெல்லாம் வேலன் சுடலை வயிரவருக்கு முன்னால் வந்து புரண்டு புரண்டு அழுது விம்முவான். இது ஒன்றுதான் அவனுக்குத் தெரிந்த ஒரே ஒரு வழி.

சுடுகாட்டு வயிரவன் இன்னும் அவனின் மனக்குறையைத் தீர்த்து வைக்கவில்லை.

விடியும் வரை புரண்டு கண்ணீரைக் கரையவிட்டு, விடிந்ததும் எழுந்து, நலமுண்டுத் துண்டை உதறி அரையில் வரிந்து கட்டிக்கொண்டு, எந்தத் தாக்கத்திற்கும் உட்படாத மனிதனாக சுடுகாட்டைத் தாண்டிப் போய்விடுவான். இப்படி அவன் செய்து கொள்ளும் சந்தர்ப்பங்களில் அதை யாருமே பெரிது படுத்துவதில்லை. பைத்தியம் போல அவன் அடிக்கடி இப்படித்தான் ஏதாவது செய்து கொண்டிருப்பான் என்று சகலரும் வாளாவிருந்து விடுகின்றனர்.

இன்று பகற்பொழுதில் கொள்ளி வைக்கப்பட்ட மனிதக்கட்டை ஒன்று எரிந்து நீறாகி அமைதி கண்டு கொண்டிருந்தது. ஊரில் உள்ள சின்னஞ் சிறுசுகளிலிருந்து கிழடு கட்டையாகி விட்டவர்களுக்கெல்லாம் பயந்து, ஒடுங்கி, தன்னையே குறுக வைத்துக் கொள்ளும் வேலனுக்கு இந்த மயானத்து அமைதி பயத்தை வருவிப்பதில்லை.

பேய், பிசாசு என்ற ரகத்திலுள்ள எதையும் நினைத்து அவன் ஏங்கிச் செத்ததுமில்லை.

சுடலையின் இடக்கோடியில் நரிகள் ஊளையிட்டுப் பிராண்டிக் கொண்டிருந்தன. அங்கே புதைக்கப்பட்டிருந்த மாடொன்றின் துர்நாற்றம் காற்றோடு கலந்து வந்து அவனை மோதியது. ஆனாலும் வேலன் அசைவற்றுப் போய் உலகத்தையும் தன்னையும் தனக்கேற்ற விதத்தில் ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்கிறானா?

இரத்த உறவு என்ற விதத்தில் மனதிற்குத் தெரிந்த தாய் என்ற ஒரு கடமையை நினைத்துப் பார்க்கின்றான். அவள் என்றோ ஒருநாள் செத்துப் போனாள். அவளின் கட்டையில் முழிக்கவேணும்...

அவன் தாய் என்ற சின்னி சின்ன வயதிலேயே பத்து மைல்களுக்கப்பால் உள்ள கந்தப்புக் கமக்காரன் வீட்டிற்கு இவனை அடிமையாக அனுப்பி விட்டாள். அதன் பின்பு அவள் அவனைப் பார்க்க வந்ததில்லை. இவனும் தாயைப் பார்க்க முடியவில்லை.

ஒருநாள் கந்தப்புக் கமக்காரன் வீட்டிற்கு ஊரிலிருந்து இவனின் உறவினர் களான இருவர் வந்தார்கள். வேலனின் தாய் சின்னி செத்துப் போய் விட்டதாக இழவு கூறினார்கள். அப்போது கமக்காரன் நான்கு கட்டை மரவள்ளிக் கிழங்குகளையும், ஒரு நீற்றுப் பூசணிக்காயையும், அரைச்சாக்கு நெல்லையும் கொடுத்து அவர்களை அனுப்பி வைத்தார். வேலன் இன்றி அவர்கள் வெறுமனே சென்றபோது வேலன் பெருங்குரல் வைத்துக் கேட்டான். ஒரு தடவை, இரு தடவை, மூன்று தடவை வேலனை அழ வேண்டாமென்று கமக்காரன் அதட்டினார். தண்ணீரும் மூன்று தடவைதான் பொறுக்கும் என்பார்கள். அதன்படியே பொறுத்த கமக்காரன் இறுதியில் கைப்பிரம்பால் வேலனின் முதுகில் ஒன்று வைத்தார். வேலன் பதைத்துப் போய் துடிதுடித்தான். கமக்காரன் வீடே திரண்டு நின்று வேலன் துடிதுடித்துக் கதறியதை அதிசயமாகப் பார்த்து இரசித்தது.

இதன்பின் பத்து ஆண்டுகள் வரை வேலன் கமக்காரன் வீட்டு அடிமையாக இருந்தான்.

அம்மாள், வேலனின் வயிற்றுச் சதையிலே பிடித்து இழுத்து முதுகில் குத்துவாள்.

"சின்னக் கமக்காரன்" என்ற சின்னப்பயல் வேலனின் பிடரியிலே அடிப்பான்.

"சின்ன கமக்காரச்சி" என்ற சிறுக்கி வேலனின் செவிகளைப் பிடித்துத் திருகுவாள்.

பெரிய கிழட்டுக் கமக்காரன் தன் துப்பல் பணிக்கத்தை வேலன் மீது வீசுவார்.

"சின்னஞ் சிறிசுகள்" எல்லாம் வேலன் மீது எச்சில் துப்பி வேடிக்கை பார்க்கும்.

கந்தப்புக் கமக்காரனும் இடையிடையே தனது கைத்தடியை வேலன்மீது சுழற்றி வீசத் தவறமாட்டார்.

காலை பத்து மணிக்குமேல் பழங்கஞ்சியும் பனாட்டும், மதிய வேளை தாண்டினால் "தட்டுவத்தில்" சிறிதளவு சோறும் கறியும். இரவானால் எரிந்து போன பண்டங்கள், உடுபுடவை என்ற விதத்தில் அரையோடு ஒட்டிக் கிடக்கும் நலமுண்டுத்துண்டு, தலைக்கு எண்ணெய், குளிப்பு முழுக்கு என்பதெல்லாம் ஆசை அருமையாக அர்த்த ஜாமத்தில் பார்த்துக் கொள்ள வேண்டியது. அவ்வளவுதான்!

வாழ்க்கையான இந்த நரகத்திலிருந்து மீண்டு கொள்ளும் நினைப்பு அவனுக்கு வந்ததில்லை. சந்தர்ப்ப சூழ்நிலையால் ஒருநாள் அப்படி வந்துவிட்டது.

பக்கத்து ஊர் வராரிஅம்மன் கோயிலில் திருவிழா நடந்தது. அது கமக்காரனின் பேரில் நடந்தது. அதனால் வேலனை வீட்டோடு விட்டுவிட்டு எல்லோருமே போய் விட்டனர்.

விடியப்புறமாக மேற்கு வீதியில் சுவாமி வலம் வரும்போது நடக்கும் இறுதிச் சின்னமேளக் கச்சேரியும் முடிந்துதான் அவர்கள் வருவார்கள் என்பது வேலனுக்குத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரியும்.

வேலனுக்குத் திருட்டுப் புத்தி வரவே வரவில்லை. ஆனால் தன்னை அடையாளம் தெரியாமல் மூடிக் கொள்வதற்காக கமக்காரனின் மரகத நிறப்போர்வையை மட்டும் எடுத்துத் தன்னை மூடிக்கொண்டு கிளம்பிவிட்டான். நன்றாக விடிந்த போது அவன் ஒரு புதிய கிராமத்தில் நின்றான். ஊரில் எல்லோரும் அவனை மிரள மிரள நோக்கினர். இறுதியில் ஒருவன் அவனை நிதானமாகப் பார்த்து அவன் தோளிலிருந்த மரகதக் கம்பளத்தை இனங்கண்டு "டேய் நீ கந்தப்பர் வீட்டிலை... என்று வார்த்தையை முடிக்கு முன், வேலன் ஓடத் தொடங்கிவிட்டான். நான்கைந்து பேர் அவனைத் துரத்திப் பிடித்து உதைத்த பின்பு, ஊரின் கிராம அதிகாரி வீட்டில் வேலனை ஒப்படைத்தனர்.

நடுப்பகல் ஆவதற்கு முன் சதங்கைநாதம் கணீரென ஒலிக்க வில்லுவண்டியில் இராச கோலத்தில் கந்தப்புக் கமக்காரன் வருகை தந்தார். அதன்பின்...

ஒரு அடிமையைக் கட்டி வருவதுபோல வில்லு வண்டியின் வக்குக்குள் போட்டு வரப்பட்ட வேலன் வீட்டின் அடிமையாக்கப்பட்டான். சுதந்திரம் என்ற பெயரில் முன்பு தரப்பட்ட சலுகைகள் யாவும் பறிக்கப்பட்ட நிலையில் வேலனுக்கு "வாழ்வு" என்ற ஒன்று மீண்டும் கிடைத்துவிட்டது. சில நாட்கள் போயின.

வேலனின் வாழ்வில் புதிதான ஒரு திருப்பம் ஏற்படுவதற்கான ஒரு நிலை எஜமானி அம்மாளால் கிடைத்தது.

ஏதோ ஒரு முக்கிய வேலை காரணமாக கமக்காரன் வெளியூர் போயிருந்தார். போனவர் நான்கைந்து நாட்களாகியும் வீடு திரும்பவில்லை.

நடுஇரவுக்கு மேல் ஏதோ ஒருவித சலசலப்புக் காணவே மாட்டுக் கொட்டகைப்புறம் தூங்கிக் கிடந்த வேலன் எழுந்து கொல்லைப்பக்கமாக வந்தான்

அப்போது வேலியை முறித்துக் கொண்டு யாரோ ஒருவன் ஓடிச் செல்வதைப் போல

"ஐயோ கள்ளன்..." என்று வேலன் ஒருதடவைதான் கத்தினான். அந்த ஓசை சரியாக மேலெழுவதற்கிடையில் வேலனின் மோவாய்க் கட்டையை எஜமானி அம்மாள் இறுகப் பொத்திக் கொண்டாள்.

அதன்பின் அவன் மறுபடியும் படுக்கைக்கு வந்துவிட்டான். ஓடிப் போனவனையும், எஜமானி அம்மாளையும் வைத்துக் கொண்டு அவன் எதை எதை எல்லாமோ எண்ணிப் பார்த்தான். அந்த எண்ணங்கள் யாவும் மனத்துக்குக் குழுகுழுப்பையும், பயத்தையும் தந்தது. இப்படி என்றும் மனது இருந்ததில்லை. நீண்ட நேரம் எஜமானி அம்மாள் அவனை எண்ணங்களோடு சங்கமமாக விட்டு வைக்கவில்லை. அவள் அவனிடம் வந்தாள்.

"வேலன்! நீ இங்கை இருந்து ஐயாவிட்டை அடிவேண்டிச் சாகாதை: எங்கையாலும் ஓடித் தப்பு! முந்தின மாதிரி ஐயா உன்னைத் தேடிப் பிடிக்காதபடி நான் பாக்கிறன்" என்று கட்டளை போட்ட எஜமானி அம்மாள் சில்லறையாகப் பணமும் ஒரு சிறிய பொட்டலமும் கொடுத்தாள்.

வேலனுக்கு ஆச்சரியமாக இருந்தது. அம்மாள் இப்படிப் பரிவு காட்டியதும், பேசியதும் கனவு போலவும் இருந்தது. சில்லறையை ஒவ்வொன்றாக எண்ணிப் பார்த்தான். ஒவ்வொன்றும் ஒவ்வொரு ரூபாய்க் குத்தியாகப் பத்து இருந்தது. பொட்டலத்தைத் திறந்து பார்த்தான். இரண்டு சேட்டுகளும், ஒரு வேட்டியும் இருந்தது. அது சின்னக் கமக்காறனுடையதாக இருக்க வேண்டும்!

இரவோடிரவாக அம்மாள் அவனை வழியனுப்பி வைத்தாள். வேலன் காற்றாகப் பறந்துவிட்டான். பின்பு கமக்காரன் அவனைத் தேடி வரவுமில்லை; வேலன் கமக்காரன் ஊர்ப்பக்கம் போகவுமில்லை.

அம்மாள் வேலனுக்குக் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றும்படி நடந்து கொண்டு விட்டாள்.

வேலன் பிரிந்து சென்றபோது அம்மாள் பதிலுக்கு வேலனிடம் எந்த வாக்குறுதியையும் கேட்கவில்லை. வேலனை அவள் "விபரம் தெரியாதவன்" என்றுதான் எண்ணியிருக்க வேண்டும்! உண்மையும் அப்படித்தானோ என்னவோ! ஆனால் வேலனுக்கு அன்றைய நிகழ்ச்சி - வேலியை முறித்துக் கொண்டு ஓடியவனுடைய நினைப்பு மனதில் நிலையாக இருக்கவில்லை.

கையில் பணம் இருந்தமையால், பல மைல்களுக்கப்பால் உள்ள தன் சொந்தக் கிராமத்திற்கு வேலன் வந்து சேர்ந்துவிட்டான். வேலனை ஊரில் கண்ட அவனின் உறவினர்கள் பயந்து போய்விட்டனர்.

அவன் கால் நிறைய வேட்டியும், கைநிறையச் சேட்டும் அணிந்துகொண்டு வந்தமையால் அவனிடம் பேசவே அவர்கள் பயந்து நடுங்கினர்.

"கமக்காரன் வீட்டிலிருந்து இவன் இவைகளைத் திருடிவந்து விட்டான்" என்ற மாதிரியும் பலர் எண்ணினர். ஆனால் இதை அவனிடம் கேட்கக் கூசினர். அவன் வயதுக்கு மிஞ்சி வளர்ந்தும் இருந்தான்.

உறவினர்களைக் கண்டுவிட்ட பெருமகிழ்ச்சியுடன் ஊர் அந்தத்திலுள்ள சிறிய தாயார் வீட்டைத் தேடி அவன் போனபோது எதிரே இருவர் நின்று அவனை முறைத்துப் பார்த்தனர். சின்ன வயசாக இருந்தபோது அவர்களைப் பார்த்ததாக அவனுக்கு ஞாபகம்!

"டேய் நீ ஆர்?"

வந்தவனில் ஒருவன் அவனை அதட்டிக் கேட்டான். வேலனால் பேச முடியவில்லை. ஆனாலும் தட்டுத் தடுமாறி, "நான்... நான்... வேலன்..." என்று இழுத்தான்.

"டேய் நீ சின்னப்பள்ளியின்ரை மோன் என்னடா?"

மற்றவன் அதட்டிக் கேட்டான். வேலனுக்கு வாய் அடைத்துப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போய்விட்டது..

"பள்ளா கலட்டடா சேட்டை!" என்று ஒருவன் அவன் சேட்டைப்பிடித்து இழுத்தான். மற்றவன் அவன் கன்னத்திலும் முகத்திலும் அறைந்தான். மீண்டும் மீண்டும் அறைந்தான். கணவேளைக்கிடையில் வேலனின் சட்டை தாறுமாறாகக் கிழிந்து தொங்கியது. முடிவில் அவன் வேட்டியும், சேட்டும் பூமித்தாயின் நெஞ்சிலே சிதறிச் சின்னாபின்னமாகக் கிடந்தன.

சிறிய தாயாரைத் தேடிச் சென்ற வேலன் முதன் முதலில் தனது மனச்சுமையைச் சொல்ல இந்த வயிரவன் கோவிலுக்கே வந்தான்.

இந்தச் சம்பவத்திற்குப் பின் சிறிய தாயார் சின்னப் பெட்டையின் வீட்டுக்குள் வேலன் அடைந்து கிடந்தான். சிறியதாயார் சின்னப்பெட்டை வேலனுக்கு "சுடுசோத்து ஒத்தணம்" பிடித்தாள். இரத்தங் கண்ட இடங்களுக்குப் பச்சிலை மருந்து வைத்தாள். ஆனாலும் நோவும், காயமும் சுளுவில் குணமாகவில்லை.

ஊரில் சின்னப்பெட்டைக்கு சிறிது மதிப்பு. சின்னப்பெட்டையின் தாய் பொன்னி சின்னத்தம்பி விதானையார் வீட்டின் இருபது ஆண்டுகாலச் சிறைக்குட்டி. "விதானையார் வீட்டுச் சிறைக்குட்டி" என்ற அடிமைச்சின்னம் அவள்மீது பொறிக்கப் பட்டு விட்டாலும் விதானையார் வீட்டுக்கு அவள் கௌரவமான அடிமை! அவள் இல்லையெனில் விதானையார் வீட்டில் எல்லாமே நின்றேவிடும்.

மாட்டுக்கட்டைச் சாணம் எடுப்பதிலிருந்து விதானையார் அம்மாவுக்கு கால் கை உருவி விடும் வரை... பொன்னி அம்மாவின் கால்கை உருவி விடுவதில் எந்தவித ஜாதிவேறுபாடும் - தீண்டத்தகாத என்ற விதத்தில் எந்தவித அசூயையும் அம்மாள் காட்டுவதில்லை. பொன்னிக்கும் இந்தப் பெருமை மிகவும் உசத்தியானதுதான். விதானையார் வீட்டு சின்னஞ்சிறிய ஓட்டை ஓடிசல்களிலிருந்து விதானையாரம்மா வின் பென்னம் பெரிய வாழ்க்கை இரகசியங்கள் வரை பொன்னிக்கு அப்பாற் பட்டவையல்ல. இதனால் பொன்னி விதானையார் வீட்டுக்கு மிகவும் கௌரவமான அடிமை.

பொன்னி சின்னப்பெட்டைக்குத் தாயானதால் சின்னப்பெட்டைக்கு அவளைச் சூழ்ந்த வட்டாரத்தில் மதிப்பு.

"எது எப்படி இருந்தாலும் வேலனை இவர்கள் இப்படி அடித்திருக்கக் கூடாது" என்ற வரையில் சின்னப்பெட்டை மிகவும் ஆத்திரப்பட்டாள். வேலனின் நோவு விரைவில் குணப்படா திருக்கவே பொன்னியையும் இழுத்துக் கொண்டு அவள் விதானையார் வீட்டுக்கு நியாயம் கேட்கப் போய்விட்டாள்.

சின்னத்தம்பி விதானையார் சகலத்தையும் ஆதியோடந்தமாய் கேட்டுவிட்டு "முலைவிழுந்தால் வயிறுதானே தாங்கவேணும் சின்னப்பெட்டை... நீ பேந்தொருக்கா வேலனையும் கூட்டிக்கொண்டு வா. வயதுபோன நேரத்திலே பொன்னியை அலைக்களியாதை!" என்று "பொடி வைத்து"ப் பேசி அனுப்பிவிட்டார்.

வேலன் விதானையார் வீட்டுக்குப் போக மறுத்தான். உரோசத்தினால் அல்ல; பயத்தினால்! ஆனாலும் பொழுது கருகியதும், வேலனையும் கூட்டிக் கொண்டு சின்னப்பெட்டை விதானையார் வீட்டுக்குப் போனாள்.

கொல்லைப்புறக் கொட்டிலுக்குள் வேலனை மட்டும் தனியே அழைத்துச் சென்ற விதானையார் அவனிடம் அமைதியாகப் பேசினார். பேச்சு அதிகம் வெளியே கேட்கவில்லை. பேச்சு முடிந்ததும் விதானையார் வெளியே வந்து "சின்னப்பெட்டை, வேலனுக்கு எல்லாஞ் சொல்லியிருக்கிறேன். நீ ஒண்டுக்கும் பயப்பிடாதை. நான் இருக்கிறேன். அவனுக்கு இனி ஒண்டும் வராது" என்று மொட்டையாகச் சொல்லிக் கொண்டே, சட்டை இல்லாமல், குறுக்குக் கட்டுக்குள் இறுகிப் பிதுங்கிய அவள் நெஞ்சுக்கு மேல் பார்வையை வீசிக் கண்களைச் சுழற்றினார். ஒருகண நேரம் சின்னப்பெட்டை நிலத்தோடு பார்வையைப் புதைய வைத்தாள்.

வேலனுடன் வீடு திரும்பிய போது, "விதானையார் என்ன தம்பி சொன்னார்?" என்ற கேள்வியை அவள் வேலனிடம் கேட்டாள். அவன் பேசாமலேயே வந்தான். பின்பு அவன் இதைத்தான் சொன்னான்.

"விதானையார் சொன்னதெல்லாஞ் சரிதான். அவர் எங்க பக்கந்தான் குஞ்சியாச்சி! ஊர் ஓடுகில் ஒத்தோட வேணும்; ஒருவன் ஓடுகில் கேட்டோடவேணும்."

நோவும், இரத்தக் கசிவும் ஓரளவுக்கு மாறிப் போனபின் வேலன் வெளியில் உலாவலானான். கால்நிறைய வேட்டியும் இல்லை, மேலே சேட்டுமில்லை. நாலுமுழத் துண்டொன்றை உயரக் கட்டிக் கொண்டு, அதற்கும் மேலாக ஒரு நலமுண்டுத் துண்டையும் வரிந்து கொண்டுதான் உலாவினான்.

கமக்காரிச்சி தந்த பத்து ரூபாயில் பாதி முடிந்துவிட்டது. மிகுதியை வைத்துக் கொண்டு வயிற்றுக்காக ஏதாவது செய்ய நினைத்தான். ஊருக்குள் செய்வதற்கு என்ன இருக்கிறது? சந்தைக்குப் போய் ஏதாவது காய் பிஞ்சு வாங்கி பட்டணக்கரைப் பக்கமாக விற்கலாம் என்ற முடிவுடன் சந்தையை நோக்கி நடையைக் கட்டினான். சந்தையை அடைந்தபோது மிகவும் தாகமெடுத்தது. சந்தைக்கரையோடு இருந்த கடையில் ஒரு கோப்பி தரும்படி கேட்டான். அந்தக் கடை மிகவும் சமீபத்தில்தான திறக்கப் பட்டிருந்தது. கோவிந்தக்குட்டி என்ற மலையாளம்தான் கடையை நடத்திற்று. மனிதன் மிகவும் வஞ்சகம் தெரியாத பிறவி, வேலன் கோப்பி கேட்டதும் மினுமினுப்பான பித்தளைப் பேணியில் காப்பி கிடைத்தது. கடைக்காரனின் பேச்சைப் பார்த்து மலையாளம் என்று எண்ணிய வேலன் "மலையாளத்தார் சாதி பார்ப்பதில்லை" என்று கேள்விப்பட்டதை மனதில் வைத்துக் கொண்டு மிகவும் பிரியத்துடன் காப்பியைப் பருகினான்; வந்தது நாசம்! நான்கு பேர் நாலு சயிக்களில் வாழைக்குலைகளைக் கட்டிக் கொண்டு வந்தனர். வந்ததும் வராததுமாக வேலனை அவர்கள் முறைத்துப் பார்த்தனர்.

"இவன் செம்பாட்டுப் பள்ளன்" என்று ஒருவன் சொன்னான்.

மற்றவன் மலையாளத்திடம் வினவினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்தவன் அவன் பிடரியில் குத்தினான்.

அந்தக் குத்தின் வேகம் மண்டையை விறைக்க வைக்க, புரைக்கேற நான்காமவன் அவன் குடித்த கோப்பையைப் பிடுங்கி “பள்ளா பித்தளைப் பேணியிலை யேடா குடிக்கிறாய்” என்று அந்தப் பேணியைக் காலுக்குள் போட்டு மிதித்தான்.

வேலனைச் சுற்றி ஒரு பெருங்கூட்டமே கூடிவிட்டது.

“அவன் தெரியாமல் செய்து போட்டான்; தம்பியவை இனி அவனுக்கு அடியாதைங்கோ; அன்பாலை வெல்லுங்கோ” என்று ஒரு கதர்சட்டை மனிதர் காந்தியப் பச்சாதாபம் காட்டினார்.

“அவனிலை என்ன பிழை, பித்தளைப் பேணியில் குடுத்த இந்த எழிய - இந்தியாக்காரனை எல்லோ துரத்தவேணும்” என்று பக்கத்துக் கடைக்காரர் ஒருவர் தேசியம் பேசினார்.

இத்தனைக்கும் கோவிந்துக்குட்டி செய்வதறியாது மலைத்துப் போய் நின்றான். வேலன் கோவிந்துக்குட்டியை மிகவும் பரிதாபமாக நோக்கினான். தனக்குப் பித்தளைப்பேணியில் கோப்பி தரும்படி அவன் கேட்கவில்லை.

சில நாட்களுக்குப் பின் வராரிஅம்மன் கோயில் திருவிழா வந்தது. நான்காம் திருவிழாவென்றால் ஊரெல்லாம் திரண்டு வந்து விடும். சுருட்டுக்காரரின் திருவிழாவென்றால் அப்படித்தான். பெரிய மேளம், சின்னமேளம், சிகரம், சப்பரம், வாணவிளையாட்டு, சீனடி, சிலம்படி, பந்தவீச்சு என்ற விதத்தில் ஒன்றுக்குப்பின் ஒன்றாகப் பல நிகழ்ச்சிகள்.

இரவு பன்னிரெண்டு மணிக்கு மேல், “சின்னமேளம்“ என்ற நடனக் கச்சேரி தொடங்கும் வேளை, கோவில் முகப்போரம் மிகவும் பரபரப்பாயிருந்தது. யாரோ ஒருவனை நான்கைந்து பேர் மிகவும் நையப்புடைத்துக் கொண்டிருந்தனர். விசேஷமாக வரவழைக்கப் பட்டிருந்த பறங்கியர் இனத்தைச் சேர்ந்த இரண்டு பொலிசார் கூட்டத்தை விலக்கிக் கொண்டு நையப்புடைக்கப்பட்ட மனிதனை மிகச்சிரமத்துடண் மீண்டெடுத்தனர்.

அவன் வேலன்!

அவன் கடைவாயிலிருந்து இரத்தம் வடிந்து கொண்டிருந்தது.

பஞ்சமருக்கெனக் கட்டப்பட்டிருந்த கயிற்று எல்லைக்கப்பால் அவன் போயிட்டான். அதற்காக அவனுக்குத் தண்டனை கிடைத்து விட்டது. “பள்ளனுக்கு அவ்வளவு துணிவோ?” இப்படி விழாவின் பிரதம அமைப்பாளர் பூக்கண்டு கந்தையா சால்வையை உதறிக் கொண்டே கத்தினார்.

“அடேய் பள்ளன், ஏண்டா உள்ளுக்குப் போனது?” என்று கேட்டுக் கொண்டே பொலிஸ்காரப் பறங்கியரும் வேலனை உதைத்து உதைத்து இழுத்துச் சென்றர். இரண்டு நாட்கள் பொலிசாரின் விருந்தாளியாக இருந்தான். அந்த இரண்டு நாட்களிலும் பொலிஸ் நிலையத்தில் அவனுக்கு நடந்த நடப்புகள் சொல்ல முடியாதவை! மூன்றாவது நாள் அவனை அவர்கள் வெளியே அனுப்பிவிட்டனர்.

ஒட்டி உலர்ந்துபோய் அவன் வந்தான். வெளியே வரும்போது ஒருவிதமான மனத் தெளிவற்ற நிலையில் இருந்தான். யாருடனும் பேசுவதற்கு அவனுக்கு முடியாமல் இருந்தது. ஏங்கிப் போய் இருந்தான்.

எதைக் கண்டாலும் பயந்து வெகுண்டான்.

எங்காவது பலமான பேச்சுக்குரல் கேட்டாலும் திடுக்குற்றுப் போவான். யாரைக் கண்டாலும் வெருட்சியுடன் ஒதுங்கி ஓடுவான்.

“வேலனுக்கு ஒருவித விசர்” என்று பலரும் பேசினர். வேடிக்கைக்காக அவனை எல்லோரும் பயங்காட்டினர். அவனை அறியாமல் அவனுக்குப் பின்னால் வந்து “டேய்!” என்று சத்தமிடுவார்கள். அப்போதெல்லாம் வேலன் ஒருவித அவலக்குரலுடன் ஒதுங்கி விடுவான். பெரிய இடத்துச் சிறுவர்கள் அவன்மீது குரும்பெட்டிகளை வீசி எறிந்து வேடிக்கை பார்ப்பர்.

சிலர் அவன்மீது நாயை ஏவிவிடுவர். அவன் வெகுண்டு குரல் வைப்பது அவர்களுக்கு வேடிக்கையாக இருக்கும்.

நீண்ட பத்தாண்டுகள்.

இப்போது அவனுக்கு வயது முப்பத்தைந்து.

உடல் சுருங்கி, சொறிபிடித்து விட்டது.

கண்கள் பஞ்சடைந்து விட்டன.

அரையிலே நாலு முழவேட்டியும் அதைச் சுற்றி ஒரு நலமுண்டுத் துண்டுந்தான்.

உறவினர்கள் என்ற விதத்தில் இருந்த சின்னப்பெட்டையும் பொன்னியும் போய்விட்டனர்.

வயிற்றுப்பாட்டுக்காக நாற்று நடுகை, புல்லுப்பிடுங்கல், அரிவி வெட்டல், வேலியடைத்தல் என்ற சில்லறை வேலையால் கிடைப்பதைப் பெற்றுக் கொள்வது; மற்றப்படிக்கு எங்காவது தெருத்திண்ணைகளில் ஒதுங்கிக் கொள்வது; அவ்வளவுதான் அவனுக்கு வாழ்வு!

இல்லற சுகம் என்றமட்டிலோ, உடலின் வியவஸ்தைகள் என்ற விதத்திலோ ஏதாவது இருந்ததாக ஆதாரங்களில்லை.

வாரத்தில் ஒரு தடவையேனும் எப்படியாவது, யாரிடமாவது உதை வாங்கிக் கொள்வான். அப்போதெல்லாம் இந்தச் சுடலை வயிரவருக்கு முன்னால் வந்து படுத்து உருண்டு மனச்சுமையை இறக்கிக் கொள்வான்.

நேற்றுச் சாயங்காலம்... இராப்போல - பூக்கண்டு கந்தையாவின் மருமகள் அன்னமுத்து கொள்ளியால் வேலனை அடித்து முகத்திலும் காறி உமிழ்ந்து விட்டாள். வழமையாக வேலனுக்கு யாராவது அடித்தால் உதைத்தால் எவரும் விபரங்களை அறிய முற்படுவதில்லை. அன்னமுத்து அடித்து, காறி உமிழ்ந்து விட்டதை யாரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசாரிக்கவில்லை.

வேலனும், ஒரு சிறு பையனுமாகச் சேர்ந்து பூக்கண்டு கந்தையா வீட்டுக்கு வேலிகட்டச் சென்றிருந்தனர்.

பூக்கண்டரின் மருமகள் அன்னமுத்து விதவை. வயதும் அதிகம் இல்லை.

பொழுது கருகியபோது வேலையை நிறுத்திவிட்டுத் திரும்பிய வேலன் இருட்டியதும் பார்த்தான். அரையில் சுற்றிக் கிடக்கும் நல முண்டுத் துண்டைக் காணவில்லை. வேலை செய்து குறையாக இருக்கும் வேலியில் போட்டதாக ஞாபகம் வரவே, பூக்கண்டர் வீட்டை நோக்கிச் சென்று, முறைப்படி வாயிலால் போகாமல், மறுநாள் வேலைக்காகப் பிடுங்கப்பட்டிருந்த கொல்லைப்புற வேலியால் உள்ளே போனான்.

ஆளை ஆள் முகந்தெரியாத மெல்லிய பசை இருட்டு. அவனுக்கு முன்னால் யாரோ ஓடிச் சென்றனர். அந்த வேளை கலகலத்துக் கிலுங்கியதை நிதானித்தபோது, மரஞ் சீவுவதற்காக அரையில் கட்டியிருக்கும் இயனக்கூட்டோடு ஒருவன் ஓடுவதை நிதானிக்க முடிந்தது. அது அந்த வளவில் மரஞ்சீவும் முத்தனாகத்தான் இருப்பதாக நிச்சயப்படுத்திக் கொண்டு எந்தவித சிந்தனையுமற்று, "எங்கை முத்தண்ணை ஓடுகிறாய்?" என்று வேலன் கேட்டுவிட்டான்.

பதிலுக்கு அவனுக்குக் கொள்ளிக்கட்டை அடிதான் கிடைத்தது. "பள்ளா, பெண் பிடிக்கவோடா வந்தனீ?" என்று கேட்டுக் கொண்டே அன்னமுத்து அடித்தாள்.

சற்று வேளைக்குள், குட்டிகள் குழந்தைகளுமாக வேலனைச் சூழ்ந்து கொண்டனர்.

பூக்கண்டர் எதை நினைத்துக் கொண்டாரோ, "சத்தம் போடாதையுங்கோடி" என்று இரைந்து கொண்டே வேலனைக் கையைப் பிடித்து இழுத்துச் சென்று முற்றத்துப் பலா மரத்தில் கட்டி வைக்க முற்பட்டபோது,

"ஐயோ நானில்லை. முத்தன் தான் ஓடினவன்" என்று வேலன் கத்தினான். பூக்கண்டர் அவன் வாயைப் பொத்தினார்.

அவனை வெளியே இழுத்து படலைக்கப்பால் வெகுதூரம் வரை கொண்டு சென்றபோது அவன் காதுக்குள் "முத்தனை பற்றி ஆரிட்டையும் சொன்னியோ கொண்டு போடுவேன். போடா" என்று எச்சரித்துவிட்டு வந்தார்.

வாழ்நாளெல்லாம் உதைபட்டு உதைபட்டு தாங்கி வந்த வேலனுக்கு இதை மட்டும் தாங்கிக் கொள்ள முடியாத மனக்கிளர்ச்சி ஏற்பட்டிருக்க வேண்டும்!

அன்னமுத்துவின் கொள்ளிக்கட்டைத் தாக்குதலும், அவள் உமிழ்ந்த எச்சிலும் அவன் மனதைப் பிழிந்து கொண்டிருந்தனவா?

நினைவுகளையெல்லாம் ஒருமைப்படுத்தி தனக்குக் கிடைத்த வாழ்வு பற்றிய சம்பவங்களை அவன் கோர்வைப்படுத்திப் பார்க்கிறானா?

காலை வெய்யில் வேலனின் நெஞ்சைச் சுட்டது. வழமைக்கு மாறாக அவசர அவசரமாக எழுந்து சுடலையை விட்டு வெளியே வந்தான், நிமிர்ந்து நடந்தான்.

உடம்பில் கூனல் தெரியவில்லை.

வழமையாக அவன் அரையைச் சுற்றி நிற்கும் நலமுண்டுத் துண்டு அவனின் தலையில் ஏறித் தலைப்பாகையாகக் கெம்பீரத்துடன் நின்றது.

சுடுகாட்டைத் தாண்டி அவன் ஊரின் முனைக்கு வந்தபோது பூக்கண்டரின் இளையமகன் சண்முகமும் வேறொருவனும் எதிர்பட்டனர்.

"அங்கை பாற்றா! வேலன் தலைப்பாக்கட்டோடை வாறான்" என்றான் சண்முகம்.

"ஓமடா, தலைப்பாவைக் கழட்டான் போலை கிடக்கு!" என்றான் மற்றொருவன்.

"டேய்... பள்ளபயலே, கழட்டடா தலைப்பாவை!"

சண்முகம் அதட்டினான். எப்போதும்போல வேலன் வெருளவில்லை; வேலியோடு ஒதுங்கவில்லை!

சண்முகம் அவனை நோக்கிக் கையை வீசினான்; மற்றவன் வேலனைச் சுற்றிப் பிடித்தான்.

கண வேளைக்குள் வேலன் கொதித்தெழுந்து கையைத் தாறுமாறாக வீசினான். அந்த வீச்சுகளுக்கு முன்னால் நிற்க முடியாமல் சண்முகம் பின்வாங்கவே, மற்றவன் சண்முகத்தையும் முந்திக்கொண்டு ஓடினான்.

வேலன் நிதானமாக மேலே நடந்து கொண்டிருந்தான்.

அதன்பின்... அதன்பின்....

எத்தனையோ நடந்துவிட்டன.

வேலன் இப்போது யாருக்கும் பயந்தவனில்லை.

அவனை யாரும் அதட்டுவதில்லை, அடிப்பதில்லை.

எப்போதும் அவன் தலையிலே தலைப்பாகை கெம்பீரமாகக் கொலுவிருக்கும். அதற்குப் பொருத்தமாக அவன் நிமிர்ந்துவிட்டான்.

அவன் பாதைக்கு யாரும் வருவதில்லை. வந்தாலும் தலையைத் தாழ்த்திக் கொண்டு ஒதுங்கிப் போய்விடுவர்.

எப்போதும் அவன் இடுப்பிலே பாளைக்கத்தி சொருகியிருக்கும்; கையிலே கட்டுமஸ்தான தடி இருக்கும்.

ஊரிலும், ஊரைச் சுற்றியுமுள்ள குறைந்த சாதி இளவட்டங்களும், வேறு சிலரும் சேர்ந்து சாதி முறை ஒழிப்புக்கான சங்கமொன்று அமைக்கப் போவதாகப் பலரும் குசுகுசுத்துக் கொண்டனர்.

ஒருநாள் அவர்களில் சிலர் வேலனைத் தேடி வந்தனர்; வேலனிடம் ஆலோசனை கேட்டனர்.

இந்த அளவுக்கு வேலன் தன்னை உயர்த்திக் கொண்டான்.

●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அசல் யாழ்ப்பாணத்து மனிதன்

## தெணியான்

வீதியில் விரைந்து வந்துகொண்டிருக்கின்றேன். இந்த விரைவு ஓட்டமா? அல்லது வேகநடையா? எதுவென்று சொல்வதற்கு இயலாத கடுகதிப் பாய்ச்சல் மனோவேகம் என்பார்களே அத்தகைய பறப்பு. ஏழு மணியாவதற்கு முன்னர் கொழும்பு போய்ச் சேர்ந்து, குடும்பத்துடன் கொட்டாஞ்சேனையில் வாழும் நண்பன் வீட்டை அடைந்தாக வேண்டும். இரவு ஏழு மணிக்கு முன் வீடு வந்து சேரவேண்டும் என்னும் நிபந்தனையுடன் தான் அங்கு தங்குவதற்கு அவன் இடந் தந்தான். அவன் நிபந்தனை விதித்தான் என்று சொல்வதெல்லாம் போலியாக என் கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்கான பேச்சு. அவன் எனக்கிட்டது உண்மையில் ஒரு கட்டளை.

அவனைச் சொல்லிக் குற்றமில்லை. நடுஇரவு வேளையில் வீடு புகுந்து சோதனை செய்வது, கைது செய்து போவது, தடுத்து வைப்பது என்று ஒரே கெடுபிடியாக இருக்கும்போது அவனுந்தான் என்ன செய்வான்! முதலில் என்னை அழைத்துச் சென்று பொலீஸில் பதிவு செய்து வைத்தான். அவனுக்கும் என்னைத் தவிர்த்து விடுவதற்கு இயலவில்லை. அவன் உத்தியோகமாகிக் கொழும்பு வந்த புதிதில் என்னுடைய அறையில் தங்குவதற்கு நான் இடங் கொடுத்தேன். இரண்டு ஆண்டுகள் ஒன்றாகவே வாழ்ந்தான். இப்போது எனக்கு உதவி செய்வது அவனுக்குரிய சந்தர்ப்பம்.

எனக்கு மாத்திரந்தானா இங்கு அவசரம்? இப்போது யாருக்கு அவசரமில்லை. வீதியில் பார்த்தால் தெரிகிறது எல்லோருடைய அவசரமும் விமான நிலையம் சென்று பகலவனை விமானத்தில் ஏற்றி, நீண்ட பயணம் அனுப்பி விட்டு பிரிவுத் துயரத்துடன் வீடு நோக்கி ஓடிக்கொண்டிருக்கின்றவர்கள் போல எல்லோருக்கும் ஒரு வேகம். எனக்கு இலக்கு பஸ் நிலையம். கொழும்பு பஸ்ஸைப் பிடித்தாக வேண்டும். என் பின்னால் வந்துகொண்டிருக்கும் ஒருவர்தானும் இதுவரை என்னை முந்திப் போவதற்கு முடியவில்லை. அப்படியொரு மின்னல் வேகம்!

எதிரில் வத்துகொண்டிருக்கும் எவர் மீதும் முட்டி மோதி விடாது நிதானமாக விலகி விலகி முன்னேறிக்கொண்டிருக்கிறேன். இன்னும் சில மீற்றர்கள் தூரம். பஸ் நிலையம் நெருங்க நெருங்க போக்குவரத்து நெரிசலும் அதிகரித்துக் கொண்டு வருகிறது. என்னுடைய அசுர வேகம் எனக்கெதிரில் வருகின்றவர்களையும் மெல்ல விலகிப் போகச் செய்கின்றது.

போக வேண்டும். நான் அஞ்சுவதாக இவன் கண்டு கொண்டால் ஆளை விழுங்கிவிட்டுப் போய்விடுவான். பதினைந்து ஆண்டுகள் முன்னர் கொழும்பில் வாழ்ந்த அனுபவம். இந்தத் தெருப்பொறுக்கிகள் பற்றி நன்றாக தெரியும். என்னைச் சுதாகரித்துக் கொள்கிறேன். அவனைப் பொருட்படுத்தாமல் விலகிச் செல்ல எத்தனிக்கிறேன். அவன் என்னை விடுவதாக இல்லை. மீண்டும் குறுக்கே வந்து நடுத்து நிற்கின்றான்.

"என்னையா ஓடுகிறியள்?" அவன்தான் கேட்கின்றான்.

"சும்மா போ…" முறைத்துக்கொண்டு முன்னேறப் பார்க்கின்றேன்.

"ஐயா, நீங்க யேசுநாயகம் தானே!" அவன் சாதாரணமாக மீண்டும் கேட்கிறான்.

எனக்கு அதிசயமாக இருக்கிறது. அதிகரித்த இதயத்துடிப்பு சற்றுத் தணிகிறது. எனக்குள்ள வேகமும் கொஞ்சம் அடங்குகிறது. ஒரு விநாடி தரிக்கின்றேன். எதிரில் நிற்கும் அவனை ஏறிட்டுப் பார்க்கின்றேன். பல நாட்கள் சிரைக்கப்படாத மயிர் அடர்ந்த முகம். அக்கறையாகச் சீவி விடப்படாது கலைந்து கிடக்கும் கேசம். அழுக்கடைந்து கசங்கிக் கிடக்கும் வெள்ளை நிற அரைக்கைச் சட்டை. கட்டம் போட்ட சாரம். சோகம் சுமந்த விழிகளுடன் தோன்றும் இளைத்துப்போன ஒரு மனிதன். செழித்த மரம் ஒன்று ஷெல் விழுந்து கருகிச் சிதைந்து போனதுபோல என் எதிரில் நிற்கின்றான்.

இவன் யாராக இருக்கக் கூடும்? இந்த நீர்கொழும்பு வீதியில் என்னைப் பெயர் சொல்லித் தடுத்து நிறுத்தி விசாரிக்கின்றான். என் பழைய நண்பர்களுள் ஒருவனாக இருக்குமோ? அப்படி ஒருவனாகத் தெரியவில்லை. நீர்கொழும்பு இப்பொழுது குட்டி யாழ்ப்பாணம். இவன் யாழ்ப்பாணத்து மனிதனாகவும் தோன்றவில்லை. அப்ப யாராக இருக்கும்? எனக்கு நினைவுகூர இயலவில்லை முன்னர் நினைவில் இருந்திருந்தால். அல்லவா பின்னர் நினைவு கூற இயலும். குழம்பிக் கொண்டே வீதியோரமாக நகருகிறேன். இவனும் ஒரு அடி நகர்ந்து எதிரில் நிற்கிறான். உரிமையுடன் என்னை நோக்கி மெல்லச் சிரிக்கிறான்.

"இன்னுமா தெரியேல்ல?"

முகம் நோக்கிக் குழம்பித் தெளிவற்று நான் நிற்கிறேன்.

"பத்து வருசமாகிப் போச்சு… எங்களையெல்லாம் மறந்து போனீங்க"

என்ன கணக்குச் சொல்லுகிறான். பத்து வருசம் என்கிறான். நான் மேலும் குழம்புகிறேன்.

"ஐயாவுக்கு உண்மையில் என்னைத் தெரியவில்லைதான்"

மௌனமாக அவன் முகத்தை உற்று உற்றுப் பார்க்கின்றேன்.

"காதர்…"

எந்தக் காதர்? எனக்குள்ளே தோண்டித் தோண்டித் தேடுகின்றேன்.

"சின்னக்கடையில் இறைச்சிக்கடை வைச்சிருந்த காதர்"

"ஓ… காதரா…?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் கரங்களை அவக்கென்று வாஞ்சையுடன் பற்றிக் கொள்கின்றேன்.

யாழ்ப்பாணம் சின்னக்கடை எனக்குள் விரிகிறது. சிவப்பு வண்ணம் பூசிய கடைகள் வரிசையாகத் தோன்றுகின்றன. ஆட்டிறைச்சிக் கடைகள் மூன்று ஒருபுறம். மறுபுறம் மாட்டிறைச்சிக் கடைகளுள் நட்ட நடுவே உள்ள கடையின் உள்ளே காதர் நின்று கொண்டிருக்கின்றான். உரித்த மாட்டுத் தொடைகள் கடையினுள்ளே இரு ஓரங்களிலும் தொங்கிக் கொண்டிருக்கின்றன. இவற்றிற்கு மத்தியில் சிறிய ஒரு மேசை. அந்த மேசையின் மீது ஒரு மரக்குற்றி. மரக்குற்றியில் வைத்து இறைச்சி வெட்டிக்கொண்டு நிற்கின்றான் காதர். மரக்குற்றியிலும் மேசையிலும் இரத்தமும் தசையும் சிதறிக் கிடக்கின்றன. காதர் சிரித்துச் சிரித்து இறைச்சியை வெட்டி வெட்டி தராசில் போட்டு நிறுக்கின்றான். தசை நார்கள் உருண்டு திரண்டு கிடக்கும் கட்டுடல். அவன் வெற்றிலை போட்டு சிவந்த உதடுகள் எப்பொழுதும் சிரித்துக் கிடக்கும் செந்தளிப்பான முகம். வாடிக்கையாளர் கூட்டம் என்றும் அங்கு நிறைந்து நிற்கும். அவன் உபசரிப்பு ஒரு தனி ரகம். யார் யாரை எப்படி உபசரிக்க வேண்டும் என்று நாடி பிடித்து நடக்கத் தெரிந்தவன் அவன். அவனுடைய வாடிக்கையாளர் ஒவ்வொருவரும் அவன் தன்னைத்தான் மிகுந்த அக்கறையுடன் கவனிக்கின்றான் என்று எண்ணத் தகுந்த வண்ணம் நடந்து கொள்வது எப்படி என்று அறிந்தவன்.

அவனா இவன்! சிரித்த அவன் வதனத்தை எங்கோ தொலைத்து விட்டு வந்து நிற்கின்றான். முறுக்கேறிக் கிடந்த அவன் கட்டுடல்... எங்கே? நம்ப முடியவில்லை. முற்றாக அவன் மாறித்தான் போனான்.

இவன் கரங்களைப் பற்றிய வண்ணம் தலைகுனிந்து மௌனமாக நின்று கொண்டிருக்கின்றேன். நான் தலை நிமிர்ந்து எப்படி இவனைப் பார்க்க முடியும்? இவனை இனங் காண முடியாமல் போனவன் நான். பேசுவதற்கு எனக்கு நா எழவில்லை. இவனும் மௌனமாகக் கண் கலங்கி நிற்கின்றான்.

உணர்ச்சிகளின் கொந்தளிப்பில் இருவரும் மௌனித்துப் போகின்றோம். கணங்கள் நீளுகின்றன. உணர்ச்சிகள் வடிகால் ஆதடுகின்றன. வடிகாலில் வடிந்து போவதற்கும் எனக்கு முடியவில்லை. மனித மனங்களை நாடி பிடித்துப் பார்ப்பதில் வல்லவனல்லவா அவன். சங்கடமான என் நிலையை அவன் புரிந்து கொண்டிருக்க வேண்டும். இருவருக்குமிடையே இறுகிப்போன மௌனத்தை அவன் மெல்லக் கலைக்கிறான்.

"எப்படி ஐயா இருக்கிறியள்?"

என்ன சொல்லலாம். இவனுக்கு நான் என்ன சொல்லலாம்? சுகமாக இருக்கிறேன் என்று சும்மாவேனும் சொல்ல முடியவில்லை.

"ஏதோ இருக்கிறம்" மொட்டையாக சொல்லிக் கொள்கிறேன்.

"குடும்பம்...?"

"ஒரு மாதிரி இருக்கினம்"

"நீங்களும் வன்னிக்குப் போனீங்களா?"

"தென்மராட்சி வரைக்கும்... ஆறுமாதம் நல்லாக் கஷ்டப்பட்டு விட்டம்."

"நாங்கள் பத்து வருஷம்..."

"நீங்கள் இப்ப எங்கே இருக்கிறியள்?" நான் கேட்கிறேன்.

"புத்தளம் அகதி முகாமில"

"குடும்பமெல்லாம் எப்படி?"

"அதை ஏனையா கேக்கிறியள். மூத்தது மூண்டும் குமராக இருக்கு. அதுகளுக்குக் கீழே ஆணும் பெண்ணுமாக நாலு. அவங்க உம்மாவும் மவுத்தாப் போச்சு. எனக்கு தொழில் இல்ல. அதுசரி.... நீங்கள் இஞ்சை எங்கே?"

"கொழும்புக்கு கந்தோர் அலுவல் நாளைக்குப் புறப்படுகிறன். மச்சான் குடும்பம் இஞ்சை இருக்கு பாத்திட்டு வாறன்"

"சிவன் சுகமா இருக்கிறாரா?"

"ஆர் அருளா?"

"ஓமோம் உங்கட அருள்..."

"அவர் சுகமாத்தான் இருக்கிறார். அவரை இன்னும் மறக்க யில்லை"

"அவரை மறக்கேலாது"

காதர் சிரிக்கிறான். எனக்கும் அடக்க முடியவில்லை. மன இறுக்கம் சற்றுத் தளர்ந்து நானும் மனம் விட்டுச் சிரிக்கிறேன்.

சிவனும் நானும் ஒரே கந்தோரில் வேலை செய்கின்றோம். சிவனருள் பெயருக்கேற்றாற்போல் சிவப்பழம். அவர் நெற்றியில் எப்பொழுதும் நீறும், நடுவே சந்தனத் திலகமுமாகத் தோன்றுவார். சனிக்கிழமை பிறந்து விட்டால் "சனி நீராடு" என்று சொல்லிக்கொண்டு சொட்டச் சொட்டத் தலையில் எண்ணைய் தேய்த்துக் கொள்வார். அதன்பின் என்னைத் தேடி நல்லூரிலிருந்து கொழும்புத்துறை வந்து சேருவார். அவர் எங்கள் வீட்டில் தங்கியிருக்க நான் அவருடைய பங்குக்கும் இறைச்சி வாங்கி வருவேன். "வீட்டு நாய்க்குத்தான் இந்த இறைச்சி" என்று சொல்லிக்கொண்டு போவார். ஒவ்வொரு வாரமும் அவர் இப்படிச் சொல்லிக்கொண்டு போவது எங்களுக்கு ஒரு வேடிக்கை சில காலம் செல்ல, தான் மட்டும் சாப்பிடுவதாகச் சொல்லிக் கொண்டார். பிறகு குடும்பத்தில் எல்லோரும் விரும்பி உண்பதாக உண்மையை ஒளிக்காமல் ஒப்புவித்து விட்டார்.

பின்னர் வீட்டில் தங்கியிருப்பதை விட்டு என்னுடன் சேர்ந்து வருவதற்கு ஆரம்பித்தார். சின்னக்கடைவரை வந்து தூர நின்று கொள்வார். சில காலம் செல்ல காதர் கடைக்கு நேரில் வரத் தொடங்கினார். காலப்போக்கில் நான் அவருக்குத் தேவைப்படாமல் போனேன். ஈரல்கறி என்றால் அவருக்கு உயிர். "ஈரல்கறி தின்னாதவன் மனிதப்பிறவி எடுத்து என்ன பயன்?" என்று இப்பொழுதெல்லாம் வாய் ஊறிச் சொல்லிக் கொண்டிருக்கின்றார்.

அவருடைய இயல்புகளைக் காதர் சரியாகக் கணக்கிட்டு வைத்திருக்கின்றான். அவரைக் கண்டுவிட்டால் காதருக்குக் குஷி பிறந்து விடும். அவரை வரவேற்கும் போது

**(தொடர்ச்சி 13 ஆம் பக்கத்தில்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு நாய்ப் பயல்

## யோ.பெனடிற்க் பாலன்

கொழும்பு கோட்டைப் புகையிரத ஸ்தானத்துக்குள் ஓடி வந்த ஆறுமுகம் பிள்ளை, அவதியாக காங்கேசன்துறை நோக்கிக் காலை புறப்படும் யாழ்தேவியில் மூன்றாம் வகுப்புப் பெட்டி ஒன்றில் ஏறி ஒரு மூலை சீட்டில் உட்கார்ந்தார். தன் கையில் வைத்திருந்த பார்சலைத் தனக்குப் பக்கத்தில் வைத்து விட்டார்.

"கொழும்பிலும் மனுஷன் சீவிக்க முடியுமா" என்று மனதுக்குள் எரிந்து கொண்டார். புகையிரதத்தில் ஏறியதும் யாழ்ப்பாணம் வந்து விட்டது போன்ற நிம்மதி.

அவருக்குக் கொழும்பு வாழ்க்கை மிக அருவருப்பாகவும் வெறுப்பாகவும் இருக்கின்றது. யாழ்ப்பாண த்திலிருந்து மாற்றலாகி கொழும்புக்கு வந்து ஒரு வருடம் கூட ஆகவில்லை. ஒவ்வொரு கிழமையும் யாழ்ப்பாணம் போயே தீருவார். திரும்பவும் யாழ்ப்பாணத்துக்கு மாற்றம் பெற்றுச் செல்வதற்குத் தமிழ் எம்பிக்களின் பின்னால் பலமுறை அலைந்து முயற்சித்துப் பார்த்தார். காரியம் முடியவில்லை.

வேறொன்றுமில்லை. யாழ்ப்பாணத்தில் உள்ள வாழ்க்கை அமைப்பும் ஒழுங்கும் கொழும்பில் எந்த மூலையிலும் இல்லை. தொழிலாளியும் சரி பெரிய உத்தியோகத்தரும் சரி, மேற் சாதிகாரனும், கீழ்ச்சாதிகாரனும் சரி எல்லோரும் பொது இடங்களில் ஒன்றாகக் கணிக்கப்படுகிறார்கள். கடைகளிலோ காரியாலயங்களிலோ, கோயில்களிலோ எங்கும் யாழ்ப்பாணத்திற் போல் சாதி, அந்தஸ்துப் பார்த்து அவரவரை அவரவர் இடங்களில் வைத்து நடத்தாமல் ஒன்றாகச் சமமாக கணிக்கப் படுகிறார்கள். அதைப்பற்றி யாரும் கவலைப்படுவதாகவும் தெரியவில்லை. அதனால் அவருக்கு அங்கு மதிப்பாக, கௌரவமாக வாழ முடியவில்லையே என்ற கவலை.

அவர் இருக்கிற போர்டிங்கிலும், அவர் சாப்பிடுகிற சைவக் கடையிலும் அவருக்குத் தெரிந்த, யாழ்ப்பாணத்தில் உள்ள கீழ்ச்சாதிப் பள்ளர், பறையர், நளவர்களும் அவரோடு சமமாகவே இருக்கிறார்கள். அது அவருக்குப் பெரும் தலை யிடி. படித்து லோங்சும், கோட்டும் போட்டு தான் பார்க்கும் உத்தியோகம் செய்தா லும் கீழ்ச்சாதி கீழ்ச்சாதிதான் என்பது அவருடைய அசைக்க முடியாத கொள்கை.

தன் எண்ணங்களைக் கொழும்பில் வெளிப்படையாகக் காட்டிக் கொள்ளாவிட்டாலும் மனதுக்குள் எரிச்சல் தான்.

அவர் கொள்கையோடு ஒத்துப் போகும் நண்பர்கள் இருவர் வெள்ளவத்தை யில் இருக்கிறார்கள். மாலை நேரங்களில் அவர்களைச் சந்தித்து தனது வயிற்றெரிச்சலை அவர்களோடு கலந்து கொண்டால் அவருக்குப் பெரும் ஆறுதல்.

இன்று அவர் மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் கொடியேற்றத்துக்காகப் போகின்றார். அப்போது அங்கு அவர் இருப்பது அவசியம் என்று "சைவப் பெரியோர்கள்" கடிதம் எழுதியுள்ளார்கள்.

"என்னடா இது புறப்படுகிதில்லையே" என்று தன் கைமணிக்கூட்டைப் பார்த்துக் கொண்டார்: தான் ஏறியதும் யாழ்தேவி புறப்பட்டிருக்க வேண்டுமென்பது அவருடைய ஆசை.

தான் இருக்கும் பெட்டியில் ஏறுபவர்களின் முகங்களை வெறுப்போடு நோக்கியவாறு இருந்தார். தன் அருகில் யாரும் அமர வந்தால் "ஆள் இருக்கு" என்று தான் வைத்த பார்சலைக் காட்டிவிடுவார். ஆனால் பலர் அப்பெட்டியில் ஏறிக் கொண்டேயிருந்தார்கள். புகையிரதம் புறப்படுவதற்குச் சற்று முன்னதாக வந்த இளைஞன் அவர் வைத்த பார்சலை எடுத்துக் கீழே வைத்து விட்டு அதில் அமர்ந்தான். "ஆள் இருக்கு" என்று அவனுக்குக் கூறினார். ஆள் வந்தால் பார்ப்போம் என்று அவன் கூறிவிட்டான். அவருக்கு ஒன்றும் கூற முடியவில்லை. முகம் கடுத்தவாறு பார்சலைத் தூக்கி மடியில் வைத்துக் கொண்டார்.

புகையிரதம் புறப்பட்டது.

அவர் இருந்த "சீட்டில்" அந்த இளைஞனும், ஒருகிழவனும், கிழவியும் இன்னும் ஒருவரும் இருந்தனர். முன் "சீட்டின்" மூலையில் ஒரு கறுத்த இளைஞன் புத்தகம் வாசித்துக் கொண்டிருந்தான். இன்னும் மூன்றுபேர் அதில் இருந்தனர்.

அவர் நிமிர்ந்து எல்லோரையும் ஒரு நோட்டம் விட்டார். கண்ணுக்கெட்டிய தூரம்வரை ஒரு சிங்களவரையும் காணாததால் சிறு திருப்தி. சிங்களவரை அவருக்குக் கண்ணிலும் காட்டக் கூடாது. ஏனென்றால் அவர்கள் தான் கொழும்பில் உள்ள சமத்துவத்துக்குக் காரணம் என்பது அவர் முடிவு.

"இதற்குள்ளும் கீழ்ச்சாதிகள் இருக்கும்" என்று உள்ளே எண்ணிக் கொண்டு, தன்னைச் சுற்றி அமர்ந்திருந்த ஒவ்வொருவரையும் காலிலிருந்து தலை வரை அவதானித்தார். ஒவ்வொருவரின் உடுப்பு, உடுத்தியிருக்கும் பாணி, தமிழ்பேசும் முறை, முகத்தில் உள்ள செழிப்பு, சகலவற்றையும் கணக்குப் போட்டார்.

அவரால் யாரையும் இலேசாக இனங் கண்டு கொள்ள முடியவில்லை. அவரின் சொந்த ஊரான மாவிட்ட புரத்தில் என்றால், ஒவ்வொருவரையும் எந்தச் சாதி, என்ன பேர் எந்தக் குறிச்சி என்றெல்லாம் சொல்லி விடுவார். அங்கு யாரைக் கண்டாலும், விசாரித்து ஆளைக் கண்டு பிடித்து விடுவார்.

அவர் நெஞ்சு நிமிர்த்திவாழ்வது அங்குதான். சைவ சமயத்தையும், அதன் உயர்வையும், புனிதத்தையும் கட்டிக்காத்து வரும் உயர் வேளாளர் மரபில் வந்தவராம். அவருடைய தகப்பன் கதிரேசம் பிள்ளை பெரிய நிலப்பிரபு. அவர்நிலத்தில், அவருடைய குடும்பப் பரம்பரைக்கு அடிமை, குடிசைத் தொழில் செய்து வாழும் கீழ்சாதிப் பஞ்சமர்கள் எவ்வளவோ பேர் இருக்கிறார்களாம். அவர்கள் சொன்ன இடத்தில் சொன்னபடி நிற்பார்களாம்.

தான் சும்மா இருந்து சாப்பிடக் கூடிய நிலப்பிரபுவாக இருந்தாலும் உத்தியோகம் பார்ப்பது ஒரு கௌரவத்துக்காக என்று அடிக்கடி கூறிக் கொள்வார்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யாழ்தேவி பொல்காவளையைத் தாண்டிப் போய்க்கொண்டிருந்தது.

அவருக்குப் பேசாமல் சும்மா இருக்க முடியவில்லை. பக்கத்தில் உள்ளவர்களோடு பேசி அவர்களின் ஊர், சாதி என்பவற்றை அறிய விருப்பமாகத் தான் இருந்தது. ஆனால், அவர்கள் அவரோடு பேசும் சூழ் நிலையில் இல்லை. அதனால் முன்னால் இருந்த இளைஞனிடம் இருந்த தமிழ்த் தினசரி ஒன்றைக் கேட்டு வாங்கிப் படிக்கத் தொடங்கினார்.

பத்திரிகையின் முன்பக்கத்தில் சிறுபான்மைத் தமிழர்கள் மாவிட்டபுரம் கந்தசாமிக் கோவிலுக்குள் செல்வதற்கு ஆயத்தமாகிறார்கள் என்ற செய்தி இருந்தது. அவசரப் பட்டு முழுவதையும் வாசித்து முடிந்த அவருக்கு சிறுபான்மைத் தமிழரைப் பிடித்துத்தின்கின்ற ஆத்திரம் உள்ளே.

"என்ன பேந்தும் இவை கோயிலுக்கை போகத்திட்டம் போடினை போல யிருக்கு" என்று சொன்னார். மற்றவர்களுக்குக் கேட்கவில்லை. இன்னும் சத்தமாகக் கூறினார்.

"ஓம், ஓம் அவங்களும் ஏதோ உள்ளே போறதெண்டுதான் நிற்கிறாங்கள்" என்றார் அதே சீட்டிலிருந்த கிழவர். ஆறுமுகம்பிள்ளைக்கு அதைக் கேட்டதும் உற்சாகமாகப் போய்விட்டது.

"இந்தமுறையும் உந்தப் பஞ்ச மற்றை இது சரிவராது, அங்கை பெரிய தொண்டர் படை ஆயத்தமாக இருக்கு. இவைக்கேன் உந்த ஆசை, இவ்வளவு காலமும் செய்த மாதிரி வெளியில் நின்று கும்பிட்டா என்ன" என்றார்.

"அதுதானே அவைக்கி என்ன குறைஞ்சிடப் போகுது? இப்ப பாருங்கோ கடைசியா இவங்கள் தமிழனுக்கு அவமானம் ஏற்படுத்தினது தான் மிச்சம்"!

முன்சீட்டில் இருந்த லோங்ஸ் அணிந்த, தலைநரைத்தவர் கூறினார்.

மூலையில் இருந்த இளைஞன் கண்களை நிமிர்த்தி அவர்களைப் பார்த்து விட்டு இருந்தான்.

"சிங்களவர் எங்களை இருக்க விடுகிறாங்களில்லைப் பாருங்கோ! கேலி பண்றாங்கள்" என்றார் ஆறுமுகம்பிள்ளை மனவருத்தத்தோடு.

"இவங்களுக்கு உந்த உஷார் எப்படி வந்ததென்று தெரியேல்லை?"

"வேறை ஆர்? சிங்களவர் கொடுத்ததுதான். அதோட இந்த கொம்யூனிஸ்டு களும்தான். சீனக் கொம்யூனிஸ்டுகள்; பொல்லாத ராஸ் கல்ஸ்". கிழவர் கேட்டதற்குப் பதில் கூறினார் ஆறுமுகம்பிள்ளை.

"அவையிடை கோலமும், அசிங்கமான உடுப்பு, ஊத்தை நாத்தம். அதுக்குள்ளே மற்றவர்களோட சமமா கோயிலுக்குள்ளையும் போக வேணுமாம்" அவர் தொடர்ந்து தனக்குள்ளே புறுபுறுத்துக் கொண்டிருந்தார்.

மூலையில் இருந்த இளைஞன் அவர் முகத்தைக் குறிப்பாகப் பார்த்துவிட்டு இருந்தான்.

"கடவுளை வணங்குகிற இடத்தில உதெல்லாம் பாக்கக்கூடாது, காலம் மாறிக்கொண்டு போகும்போது நாங்களும் மாறவேணும். அவர்களையும் உள்ளுக்கு விட்டா அதில் என்ன வந்துட்டுது"

முன் சீட்டில் இருந்த ஒருவர் மிக ஆறுதலாகக் கூறினார். ஆறுமுகம் பிள்ளை சட்டெனத் திரும்பி அவரைப் பார்த்தார்.

"நீங்கள் என்ன புதுக்கதை பேசுறீங்க. காலங்காலமா கீழ்ச்சாதிகளை கோயிலுக்கிள்ளை விடாமல் தடுத்து வைத்தவர்களெல்லாரும் மடையர்களே! அது அவங்களை விடப்படாது. விட்டா காலகதியில எங்கடை பிள்ளையளை கலியாணம் முடிக்கவும் கேட்பாங்கள். கோயில் கடவுள் இருக்கிற புனிதமான இடம். உந்த நாய்களை அங்கு விடப்படாது, என்று வெடுவெடுப்பாகக் கூறி முடித்தார்.

"அவர்களைத் தடுத்து வைத்தவர்கள் மடையர்கள். சாதி வெறி பிடித்த பிற் போக்குவாதிகள். அவர்களை உள்ளே விட்டால் என்ன?"

இதுவரையும் மௌனமாக மூலையில் உட்கார்ந்திருந்த இளைஞன் நிமிர்ந்திருந்து கொண்டு கூறினான்.

ஆறுமுகம்பிள்ளை அவனுடைய முகத்தை அவதானமாகப் பார்த்தார். இளைஞன் அவரைப் பார்த்துச் சொன்னான்,

"அவர்களை உள்ளை விடுகிறதினால் கடவுள் பாதிக்கப்படுவாரா? அல்லது கடவுள் கோபித்துக் கொள்வாரா?" ஆறுமுகம் பிள்ளைக்கு ஒன்றும் கூறமுடியவில்லை. அவனுடைய முகத்தைப் பார்க்கக் கொஞ்சம் உள்ளூரப் பயமாகவும் இருந்தது.

"நல்லூர்க் கந்தசாமிக் கோயிலைத் திறந்து விட்டு எல்லோரும் உள்ளே போய்க் கும்பிடுகிறார்கள். கடவுள் ஓடிவிட்டாரா? அல்லது கோயில் இடிந்துவிட்டதா? அல்லது உயர் ஜாதி மக்கள் எதிர்த்துக் கிளம்பினார்களா?"

"தம்பி சொல்வதில் நியாயம் இருக்குத்தான்" அவன் இருக்கும் சீட்டில் இருந்த ஒருவர் சொன்னார்.

"கீழ்ச் சாதி என்று கூறப்படுகிற மக்கள் கோயிலுக்குள்ள போவதைக் கடவுளும் எதிர்க்கவில்லை, மக்களும் எதிர்க்கவில்லை. அவர்களை உள்ளே விடுவதால் காலங் காலமாகத் தங்களுக்கு இருந்த போலிக்கௌரவம், மதிப்புப் போய்விடும் என்று எண்ணுகின்ற சாதி வெறிபிடித்த சில படு பிற் போக்கு வாதிகள் தான் எதிர்க்கிறார்கள். அவர்களால்தான் தமிழ் மக்களுக்கு அவமானம். அவர்களைச் சமூகத்திலிருந்து அடித்து, உதைத்து விரட்ட வேணும்" என்று கூறிய இளைஞன் ஆறுமுகம் பிள்ளை யைப் பார்த்தான். அவர் கேட்காதவர் போல் வெளியில் பார்த்துக்கொண்டு இருந்தார்.

ஒருவரும் ஒன்றும் பேசவில்லை.

புகையிரதம் மாகோவில் வந்து நின்றது. அந்தப் பெட்டியில் மூன்று சிங்களவர்கள் ஏற வந்தார்கள். ஆறுமுகம்பிள்ளை அவர்களைப்பார்த்து விட்டுச் சற்று இடமும் கொடுக்கக் கூடாது என்ற எண்ணத்தில் கால்களைச் சற்று அகட்டி இடம் பிடித்து இருந்து கொண்டார்.

அனுராதபுரத்தைப் புகையிரதம் தாண்டும் மட்டும் அவர் மௌனமாகவே இருந்தார். அவருக்கு அந்த இன்ளூன் மேல் சந்தேகம். கட்டாயம் அவன் கீழ்ச்சாதியாக இருப்பான் என்ற முடிவு - எப்படியும் அவனை அறிய வேண்டுமென்ற ஆசை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனைப் பார்த்துக்கொண்டிருந்து அவன் அவரைப் பார்க்கும் போது சிரித்தார். அவனும் உதட்டில் சிரிப்பைக் காட்டினான்.

புகையிரதம் வேகமாகப் போய்க் கொண்டிருந்தது.

"தம்பி யாழ்ப்பாணத்தில எந்த ஊர்?"

"நான் சாவகச்சேரி!"

"சாவகச்சேரி எண்டால் சரசாலையோ?"

"இல்லை; மட்டுவில்!"

"மட்டுவிலா, மட்டுவிலில, என்ரை சொந்தக்காரர் இருக்கிறார்கள். பழைய விதானையார் சுப்பிரமணியத்தைத் தெரியுமோ?"

"இல்லை"

"அவைதம்பி, மட்டுவில் தெற்கு? நீங்கள்?"

"நான் மட்டுவில் வடக்கு"

"மட்டுவில் வடக்கென்றால் எனக்குத் தெரியும். நான் அந்தப்பக்கம் நல்லாப் புழங்கியிருக்கிறன்!"

"நான் இருக்கிறது மானாவளை!"

மானாவளை என்றதும் அவருக்கு உள்ளே தன் விசாரணை பலன் கொடுப்பதாக எண்ணிக் கொண்டார்.

"தம்பி உங்களுடைய தகப்பன் பேர் என்னதம்பி?"

"கந்தன்!"

"கந்தனோ! முழுப்பேர்?"

அரைகுறைப் பெயர்கள் கீழ்ச்சாதி மக்களுக்குத் தான் உண்டு. உயர்சாதி நிலப்பிரபுக்கள், அவர்களின் பெயர்களைக் கந்தன், பூதன், பட்டன் என்று அரையாக்கித்தான் வழங்கி வந்தார்கள்.

"கந்தன் தான்!"

ஆறுமுகம் பிள்ளைக்கு அவன் இருக்கும் குறிச்சியும், அவனுடைய சாதியும் நன்றாகப் புரிந்து விட்டது.

"அட அப்ப......"

அவனுக்குச் சுற்றி வளைத்து விசாரிப்பது என்னத்துக்கு என்று நன்றாகத் தெரியும்.

"ஏன் நீங்கள் சுற்றி வளைக்கிறீங்கள். நானே சொல்றேன். நான் பறையர்என்று கூறப்படுகிற சாதியைச் சேர்ந்தவன். என்ரை தகப்பன் மேளம் அடித்தவர்!"

ஆறுமுகம் பிள்ளைக்கு ஒரு மாதிரியாகப் போய்விட்டது.

"சீச்சீ, நான் அதுக்காகக் கேக்கவில்லை" என்றார். மற்றவர்களும் அவனை அதிசயமாகப் பார்த்தார்கள். அவன் தைரியமாக இருந்தான்.

புகையிரதம் இரைந்து கொண்டிருந்தது. ஆறுமுகம்பிள்ளை தான் உயர் வேளாளன் என்ற திமிருடன் நிமிர்ந்திருந்தார். அந்த இளைஞன் பற்றிய அபிப்பிராயம் அவர் மனதில் நன்றாகக் குறைந்துவிட்டது.

சற்றுநேரத்தின் பின் அவர் மீண்டும் அவனுடன் பேசினார்.

"உன்ரை பேர் என்ன?"

அவர் கேட்ட முறை அவனுக்குப் பிடிக்கவில்லை. பொல்லாத கோபம். என்றாலும் அடக்கிக்கொண்டான்.

"என் பெயர் முத்துக்குமார்"

"நீ இங்கை கொழும்பிலை எங்கே..."

திடீரென எழுந்த அவன் ஆறுமுகம் பிள்ளையின் கன்னத்தில் பளார், பளாரென ஆத்திரத்தோடு அடித்தான்.

அந்தச் "சீட்"டுகளில் இருந்தவர்கள் திகைத்து விட்டார்கள். மற்ற சீட்டுகளில் இருந்தவர்களும் அடிச்சத்தம் கேட்டு எழுந்து பார்த்தார்கள்.

"ஏன் தம்பி அடிச்சனீர்?" என்று அதே சீட்டில் இருந்த கிழவர் கேட்டார்.

"அடிக்கிறதில்லை, இவனை உதைக்க வேணும்! இவ்வளவு நேரமும் என்னோடை "நீங்கள்", தம்பி என்று மரியாதையாகப் பேசிக்கொண்டு வந்தவன், நான் என்ரை சாதியைக் கூறின உடனே "நீ" என்று மரியாதை இல்லாமல் பேசுறான். ஆனால் நான் மரியாதையாகத்தான் இவனோடை பேசினான். இவனுக்கு நான் என்னத்தில குறைஞ்சனான். நானும் மனிதன்தான், இவனும் மனிதன் தான்"

"எண்டாலும் தம்பி......"

"என்னங்கோ எண்டாலும்... இவ்வளவு நேரமும் இவன் என்னத்தைப்பற்றிப் பேசிக் கொண்டு வந்தான் எண்டு உங்களுக்குத் தெரியும். இது ஒரு பொது இடம். இங்கே எல்லாரும் வருவார்கள். இந்த இடத்திலயே சாதித்திமிரிலதான் பேசிக் கொண்டு வந்தவன். இவன் ஒரு சாதி வெறி பிடித்த நாய்ப்பயல் சமயஞ் சொல்லுது, படிச்ச படிப்பு சொல்லுது. பெரியார்கள் சொல்கிறார்கள் சாதிபேசக்கூடாது என்று. அதற்குப் பிறகும் திருந்தாத இவனுக்கு நான் அடிச்சதில என்ன பிழை! மனிதனை மனிதனாக மதிக்கத் தெரிய வேணும்."

அவன் உட்கார்ந்து கொண்டான்.

"தம்பி செய்தது சரிதான்"!

அந்தக் கிழவரே கூறினார்.

"இவருக்குக் குடுக்கத்தான் வேணும்" என்று ஆறுமுகம்பிள்ளைக்குப் பக்கத்தில் இருந்த இளைஞன் கூறினான்.

ஒருவரும் அடித்ததற்காக அவனைக் குற்றம் சொல்லவில்லை. பலர் நாம் ஏன் பிறர் விஷயத்தில் வீணாகத் தலையிட வேணும், என்ற வழக்கமான யாழ்ப்பாணத் தமிழர் பண்பாட்டு உணர்வோடு அபிப்பிராயம் கூறாது மௌனம் சாதித்தனர்.

ஆறுமுகம்பிள்ளை அவமானத்தால் முகத்தை நிமிர்த்தமுடியாமல் தலை குனிந்தவாறு இருந்தார். ஒருவர் தானும், முதலில் தன்னோடு ஆதரவாகப் பேசியவர்களும் கூட தனக்குச் சார்பாக ஒரு வார்த்தையும் கூறவில்லையே என்று மனதுக்குள் எரிந்து வெடித்துக் கொண்டிருந்தார்.

புகையிரதம் மிக வேகமாகச் சென்று கொண்டிருந்தது. இளைஞன் ஆறுமுகம் பிள்ளையை நோக்கியவாறு உட்கார்ந்திருந்தான். ●

பொது நூலகம் யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிலவிலே பேசுவோம்

## என்.கே.ரகுநாதன்

மாலையிலே மது ஒழிப்புக் கூட்டம் நடைபெற்றது! ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டிருந்த அந்த மாபெருங் கூட்டத்திலே ஆண் சிங்கம்போலத் தோன்றி, மதுவினால் ஏற்படும் தீமைகளையும், அது ஒழிக்கப்பட வேண்டிய அவசியத்தையும், அதற்கான வழி வகைகளையும் அள்ளி விளாசி, இடையிடையே காந்தியத்தைப் பூசி, அழகு தமிழிலே அனல் பறக்கப் பேசிவிட்டுச் சற்று முன்புதான் வந்திருந்தார் ஸ்ரீமான் சிவப்பிரகாசம் அவர்கள்.

அப்போது மணி எட்டு இருக்கும். அவருக்குப் பசி: அத்துடன் கூட்டத்திற் பேசிய களைப்பு வேறு.

சாப்பிட்டு முடிந்ததும், அறுசுவையுண்டியின் ருசியில் நாவைத் திளைக்க விட்டபடியே, உள்ளே இருந்த "ஓர் குலம்" பத்திரிகையைக் கையில் எடுத்துக்கொண்டு வெளியே வந்தார். விறாந்தையின் மூலையொன்றில் கிடந்த சாய்வு நாற்காலியில் சாய்ந்துகொண்டு ஜகஜ் ஜோதியாகப் பிரகாசித்துக்கொண்டிருந்த மின்விளக்கின் ஒளியில் பத்திரிகையைப் புரட்டிப் படிக்கத் தொடங்கினார்.

ஒரு பத்திகூட வாசித்திருக்கமாட்டார். வெளியே, வாசற்பக்கமாகச் சிலர் பேசுவது கேட்டது. பத்திரிகையில் படிந்திருந்த பார்வையைத் திருப்பி அங்கே நோக்கினார்.

யாரோ பத்துப் பன்னிரண்டு பேர்கள் - நசித்துப் போன கூட்டம் - அதாவது "உழைத்தாற்றான் உணவு" என்ற நிலையிலிருக்கும் உழைப்பாளி வர்க்கம்! அவர்களில் ஒருவன், தயங்கித் தயங்கி இவரண்டை வந்தான். மற்றவர்கள் அங்கேயே நின்று விட்டார்கள். சிவப்பிரகாசம் எழுந்து இரண்டடி முன்னே நடந்து, வந்தவனை உற்றுப் பார்த்தார்.

"அடடே! நீயா கந்தா! என்ன சேதி?" என்றார்.

"உங்களைக் காணவேண்டுமென்று வந்தோம். இந்த மதுவிலக்கு சம்பந்தமாக..." என்று தயக்கத்துடன் சொன்னான்.

"ஆகா! அதற்கென்ன, நல்லாய்ப் பேசலாமே!" என்று சொன்னார் சிவப்பிரகாசம்.

"இன்னும் சிலர் வந்திருக்கிறார்கள். அப்படியானால் அவர்களையும் கூப்பிட்டு..." வார்த்தையை முடிக்காமல் வாசற் பக்கம் திரும்பி, அங்கே உள்ளவர்களைக் கூப்பிட எத்தனித்தான் அவன்.

சிவப்பிரகாசம் ஒரு கணம் திக்குமுக்காடினார். மனதிலே ஒரு பரபரப்பு - தடுமாற்றம்! தலையைச் சொறிந்து, நெற்றிப் புருவங்களை உயர்த்தி ஏதோ யோசனை செய்தவர், திடீரென்று ஒரு முடிவுக்கு வந்தார்.

"வேண்டாம் கந்தா, கூப்பிடாதே! இதெல்லாம் இரண்டாம் பேர் அறியக் கூடாத விஷயங்கள். மனைவி மக்களென்றாலும் இந்தக் காலத்தில் ஜாக்கிரதையாய் இருக்கவேண்டும். எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்கிறதென்று யாருக்குத் தெரியும்? அதோ பார்! வெளியே நல்ல நிலவு! அத்துடன் பால்போன்ற மணல். அங்கே போய்ப் பேசிக்கொள்ளலாம்; வா!" என்று அவன் பதிலை எதிரபாராமலே, கீழே இறங்கி நடந்தார். அவன் பின் தொடர்ந்தான்.

பின், வாசலில் நின்றவர்களையும் அழைத்துக் கொண்டு, சற்றுத் தூரம் போய் ஒரு நல்ல இடத்தில் அமர்ந்து பேசினார்கள்.

வந்தவர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள். கள் சேர்ப்பது அவர்கள் தொழில். ஊர் முழுவதும் "மது ஒழிக!" என்ற கூச்சல். இந்த நிலையிலே அவர்கள் கதி...?

மது ஒழிப்புக் கூட்டத்திலே, சிவப்பிரகாசம் கார சாரமாகப் பேசியதை அவர்களும் கேட்டார்கள். எனவே, அவரிடமே வந்து சேர்ந்தார்கள். தமது ஜீவப் பிரச்னைக்கு ஆலோசனை கேட்பதற்கு.

"...நாங்களும் மதுவிலக்குக்கு ஆதரவு தருகிறோம். மதுவினால் உலகத்துக்கே ஆபத்து என்பது நமக்குத் தெரியும். நமக்குக்கூட அது ஒரு மகிழ்ச்சியான தொழிலல்ல; ஊர் மக்களிடம் வசை கேட்கிறோம்; "எக்ஸைஸ்" உத்தியோகத்தர்களுக்கு சம்பளத்துக்குமேலே "கிம்பளம்" கொடுத்தும் ஒளித்தோடுகிறோம்... அது மட்டுமா? ஒவ்வொரு நொடிப்பொழுதும் உயிரைப் பணயம் வைத்துத் தான் நாம் வாழ வேண்டியிருக்கிறது. ஆகாயத்தை அளாவி நிற்கும் மரங்களில் இருக்கும்போது, நமது நிலைமையை எண்ணிப் பாருங்கள். மிகப் பயங்கரமான தொழில்தான்! என்றாலும்..." என்று இழுத்தான். அங்கு வந்திருந்த ஒரு வாலிபன்.

"ஏன் இழுக்கிறாய்? சொல்லு தம்பி" என்று வற்புறுத்தினார் சிவப்பிரகாசம்.

"நமக்கு வேறு தொழில் வேண்டுமே!"

சிவப்பிரகாசம் சிரித்தார். "இதென்ன பிரமாதம்? இந்தப் பரந்த உலகத்தில் தொழிலுக்கா பஞ்சம்?" என்றார்.

"எத்தனையோ தொழில்கள் இருக்கின்றனதான்; என்றாலும் நாம் செய்வது சாத்தியமா?"

"ஏன்?"

"ஒரு தேனீர்க் கடை வைத்தால் யாராவது நம்மிடம் வந்து தேனீர் குடிப்பார் களா? அல்லது ஒரு பலசரக்குக் கடை வைத்தாற்கூட நம்மிடம் வந்து சாமான் வாங்கு வார்களென்பது என்ன நிச்சயம்? ஏன் ஒரு இரும்புக் கடையில்கூட நம்மவர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ள மாட்டார்களே; இரும்புப் பொருட்களில் தீட்டு ஒட்டிக் கொள்ளுமென்று! அதிகம் வேண்டாம்; என்னை நீங்கள் உங்கள் வீட்டில் ஒரு கூலியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்துக்கொள்ளுங்கள் என்றால் சம்மதிப்பீர்களா? இந்த நிலைமையில்..." என்று அந்த வாலிபன் மிகவும் உணர்ச்சியுடன் பேசிவிட்டு அவர் முகத்தைப் பார்த்தான். அப்போதும் அவர் சிரித்தார்.

"அப்படிச் சொல்லாதே தம்பி! அதெல்லாம் வேறு விஷயம். இவைதான் தொழில்களா? வேறு கைத் தொழில் செய்கிறது!"

வாலிபன் பேச வாயெடுத்தான். அவனைத் தடை செய்துவிட்டு இதுவரை மௌனமாக இருந்த ஒரு நடுத்தர வயதினன் கோபத்துடன் கேட்டான்:

"ஆமாம்! அதெல்லாம் வேறு விஷயங்கள். உங்களுக்கென்ன எத்தனையோ சொல்வீர்கள். இதோ பாருங்கள்! நான் இருக்கிறேன். எனக்கு இப்போது ஐம்பது வயதாகிறது. இந்த வயதில் நான் வேறு புதுத் தொழில் பழகித் தேர்ச்சியடைவதற்கும் காலன் வந்து என் கழுத்தில் கயிறு போடுவதற்கும் சரியாயிருக்கும். தொழில் பழகுகிற காலத்திலே நல்ல ஊதியம் கிடைக்குமா? அவ்வளவும் நானும் என் பெண்டாட்டி பிள்ளைகளும் பட்டினி கிடக்கவேண்டியதுதான்! அப்படித்தானே உங்கள் திட்டம்?"

சிவப்பிரகாசம் ஆபத்தான கட்டத்தில் அகப்பட்டுக் கொண்டார். எனினும் சமாளித்துக்கொண்டு, "ஆத்திரப்படாதீர்கள்! நீங்கள் ஒருங்கே திரண்டு உங்கள் தேவைகளை அரசாங்கத்திடம் கேளுங்கள். நீங்கள் கள்ளுச் சேர்க்க வேண்டாம். கருப்ப நீர் இறக்குங்கள், ஒரு சீனித் தொழிற்சாலை நிறுவித் தரும்படி உங்கள் தொழில் அமைச்சரைக் கேளுங்கள். கவனிக்காமல் விட்டுவிடப் போகிறார்களா?" என்று நொண்டிச் சமாதானம் கூறினார்.

கூட்டத்திலிருந்து ஒரு புதிய எழுச்சிக் குரல் கேட்டது.

"அதொன்றும் வேண்டாம். மதுவினால் நன்மையோ! தீமையோ! நமது சாதி கொஞ்சம் முன்னேறி வருகிறது. அது உங்களுக்குப் பிடிக்கவில்லை. ஆனபடியால்த் தான் மதுவிலக்கு வேண்டுமென்கிறீர்கள். நீங்கள் மதுவை ஒழியுங்கள். காந்தி மகாத்மாவின் பெயரைச் சொல்லிக் கொண்டே எங்கள் வாழ்வைப் பறியுங்கள். நாங்கள் பசி கிடந்து சாகிறோம். தீண்டாமை ஒழிய வேண்டுமென்று மகாத்மா காந்தி சொன்னாரல்லவா? நாம் ஒழிந்துவிட்டால் தீண்டாமையும் கொஞ்சம் ஒழிந்துவிடும். உங்களுக்கு ஒரு கல்லில் இரண்டு மாங்காய். அதே நேரத்தில் "ஜின்"னும், "பிரண்டி"யும் மருந்துக் கடைகளில் விலைப் படட்டும், மருந்து என்ற பெயரில்!"

"சைச்சை! இது தவறான வாதம்! அப்படி எண்ணவே கூடாது!"

"பின் எப்படி எண்ணுவது? காந்தியின் பெயரைச் சொல்லி மது ஒழிக்கக் கிளம்பிவிட்டீர்களே. முதலில் தீண்டாமையை ஒழிக்க வேண்டாமா?" என்றது அந்தக் குரல்.

சிவப்பிரகாசம் சிலையாய்விட்டார். இப்படிப் பேசுவார்கள் என்று அவர் எதிர்பார்க்கவேயில்லை.

வந்தவர்கள் எழுந்தார்கள்.

"நாங்கள் போய் வருகிறோம். சிந்தித்து நல்லதைச் செய்யுங்கள். "மதுவிலக்கு அவசியம் வேண்டும்!" அதே நேரத்தில் நாம் மகிழ்வுடன் வாழவேண்டும். இந்த அடிப்படையிலே தொண்டாற்றுங்கள். உங்களுடன் நாமும் சேர்ந்துகொள்கிறோம்" என்று சொல்லிவிட்டு நடந்தார்கள்.

"வெளியே நல்ல நிலவு - அங்கே போய்ப் பேசிக் கொள்ளலாம்!" என்று சிவப்பிரகாசம் சொன்னதன் அர்த்தத்தைப் புரிந்துகொள்ள அவர்களுக்கு அதிக நேரம் செல்லவில்லை. ●

---

**தெணியானின் "அசல் யாழ்ப்பாணத்து மனிதன்" 8 ஆம் பக்க தொடர்ச்சி...**

காதரின் ஆரவாரம் வெளிப்படும். அவர் வெகு ஆசாரம் என்பதும் காதர் அறிவான். அதற்குத் தகுந்த விதமாக வெகு பக்குவமாக இறைச்சி வெட்டி நிறுத்து ஒழுங்காக அவர் கையில் கொடுத்து அனுப்புவான்.

நாங்கள் எல்லோரும் அவரை அருள் என்றுதான் அழைப்போம். ஆனால் காதர் மாத்திரம் சிவன் என்று சொல்லுவான். அவன் ஏன் அப்படி அழைக்கின்றான் என்று நான் ஒருதினம் காதரிடம் கேட்டேன்.

"சிவனுக்கு எருது மாடு.. நாம்பன் மாடு என்றால் ரொம்பப் பிரியம் தானே!" என்று சொல்லி ஆர்ப்பாட்டமாகக் காதர் சிரித்தான்.

அவரை மறக்காமல் காதர் இப்பொழுது விசாரிக்கிறான்.

"அவர் சுகமாக இருக்கிறார்... காதர்"

"சின்னக்கடைப் பக்கம் போறதில்லையா?"

"விடுவாரா... சனியும் புதனும் தவறாமல் போகிறார்."

"காதர் சந்திச்சது சந்தோசம். நான் இப்பிடிச் சந்திப்பேன் என்று எதிர்பார்க்கவில்லை. வேறை என்ன..."

"வேறை என்னையா..."

காதருக்கு நான் என்ன செய்யலாம். ஒருநூறு இருநூறு என்று ஏதாவது கையில் கொடுத்துவிட்டுப் போகலாம். நான் கொடுத்தாலும் அவன் வாங்கிக்கொள்ள வேண்டுமல்லவா? தன்னை அலமதிப்பதாக அவன் கருத மாட்டானா? அவனுக்கு இப்பொழுதுள்ள தேவை என்ன? அவன் தேவைகளை என்னால் எப்படித் தீர்த்து வைக்க இயலும்? நான் முழுவதும் குழம்பித் தடுமாறிக்கொண்டு நிற்கின்றேன்.

"ஐயாவுக்கு அவசரம்... பஸ்ஸைப் பிடிக்க வேணும்"

"ஓம் காதர்"

"அதுசரி ஐயா... நீங்கள் எங்களைக் கலைச்சுப்போட்டு இப்ப யாழ்ப்பாணத்து எளிய சாதியள்... பறையர்... நளவர் அடிச்சுத் தார இறைச்சியைத்தானே வாங்கித் தின்னுறியள்"

எனக்கிருக்கும் வேகம் அவசரம் எல்லாம் அடங்கிப் போக அவன் முகத்தைக் கூர்ந்து நோக்கிய வண்ணம் நான் மௌனித்து நிற்கின்றேன். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒற்றைப் பனை

## புலோலியூர் ஆ. இரத்தினவேலோன்

மாணிக்கனது மனம் இன்று ஒரு நிலையில் இல்லை. மலர்விழி சொல்லப் போகும் அந்தப் பதிலில் தான் அவனது வாழ்வே தங்கியுள்ளது. நல்லதொரு பதிலை அவள் சொல்வாளா?

நெஞ்சில் முட்டிமோதும் நினைவலைகள் மத்தியில் படலையைத் திறந்து, கொட்டிலடிக்கு வந்தவன், இடுப்பில் முட்டி மோதிய முட்டிகள் இரண்டினையும் சுழற்றி, அருகிலிருந்த வடலியில் கொழுவிவிட்டு, உள்ளிருந்த பனங்கொட்டிலில் குந்திக் கொண்டான்.

இடுப்பில் கனத்த இயனக்கூடு அவனுக்குப் பெரிதாகத் தெரியவில்லை. காலில் அணிந்திருந்த காதோலையையும், மார்பை வியாபித்திருந்த மாதோலையை யும் கழற்றியவன், வெறுமையாகக் கிடந்த வானத்தை நெடுமூச்சுடன் நோக்குகிறான்.

தலையை அலங்கரித்த தடநாரை எடுத்து அருகே வைத்தவன் இடுப்பை ஆக்கிரமித்திருந்த இயனக் கூட்டையும், ஏறுபட்டியையும், அவிழ்த்துப் படிப்படியாக... இறக்கி வைக்கிறான்.

கடந்த ஆண்டு வயலூரிற்கு வட்ட விதானையார் தறைக்கு வெங்காய வைப்புக்குச் சென்ற போதுதான் அது நிகழ்ந்தது!

வயலூரில் வாழைத்தறையில் வெங்காய வைப்பென்றால் வட்ட விதானையார் கிராமத்தின் கிழக்கேயுள்ள திடலைச் சார்ந்த "சம்பள காரரைக்" கொண்டுதான் முன்னர் செய்விப்பது வழக்கம். தனது நண்பர்களுடன் தறையில் இறங்கிய மாணிக்கன், மத்தியானச் சாப்பாட்டு வேளையில் தான், கொத்திற்கு வந்திருந்த வடலித் திடலாரைவிட, வெங்காய வைப்பிற்கெனச் செம்பாட்டுத் திடல் "பெண்டுகள்" வந்திருப்பதையும் அவதானித்தான்.

வடலித் திடலில் ஆண்கள் சீவல் தொழில் செய்த மீதி நேரத்திற்கு இப்படித் தறைகொத்துப் போன்ற பகுதிநேர வேலைகளுக்கும் செல்வது முன்னர் வழக்கத்தி லிருந்தது. ஆனால், அயலூரான செம்பாட்டுத் திடலில் நிலைமை முற்றிலும் மாறு பட்டிருந்தது. அப்பகுதி ஆண்கள் செருப்புக் கட்டுவதையும், விறகு கொத்துவதையும் தொழிலாகக் கொண்டிருந்தார்கள். பெண்களே இப்படி வெங்காய வைப்பிற் கென்றும், களை பிடுங்குவதற்கென்றும் சம்பளத்திற்காகப் பக்கத்தூரான வயலூரிற் குச் சென்று வந்தார்கள்.

பலரையும் இனங்கண்டுவந்த மாணிக்கனின் கண்கள் ஓர் இடத்தில் நிலைத்தன. வடலிப் பருவம்.... குருத்தோலை மென்மை.....சார்வு நிறம்...... பாளைச் சிரிப்புதிர்த்துப்..... பாரிப்பதற்குப் புதிதாக வார்த்த பனாட்டுத் தட்டாகப் பளபளப்புடன் காட்சியளித்த அவள், தன்னையே வைத்த கண் வாங்காமல்.....?

"மச்சான் பங்கார் பாரடா!"-பரந்த மார்பில் நிறைந்து வழிந்த வியர்வையைத் துவாய்த் துண்டால் துடைத்தவாறே, பக்கத்தில் நின்ற வீரனுக்குத் தட்டிக் காட்டினான் மாணிக்கன்.

"ஆர் வல்லியாற்றை மோளைச் சொல்லுறியே?"

"எந்த வல்லியாற்றை மோள்?"

"அதுதான் மச்சான்..... சிலம்படி வல்லியாரெண்டு முடப்பனை முடக்கிலை இருக்குதுகள்..."

"என்ன பூராயக்கதை உது? அவருக்கு உப்பிடி ஒரு லட்சணமான பொடிச்சியோ?"

மத்தியானச் சாப்பாடு முடிந்து பின்னேர வேலை ஆரம்பமாகியது. மூன்று மணியிருக்கும். வானமே இருண்டது. தறையில் நிற்க முடியாதளவிற்குப் பலத்த மழை. சம்பளகாரர் யாவரும் குடிலை நோக்கி ஓடி வந்தனர்.

தலையில் தலைப்பாகையாகச் சுற்றியிருந்த துவாய்த் துண்டை எடுத்து, முகத்தைத் துடைத்தவாறே திரும்பிய மாணிக்கனுக்கு, உச்சிப் பனையிலிருந்து சறுக்கியதைப் போன்ற ஒரு பிரமை. அந்த "வல்லியாற்றை" மகள்... அதே ஏக்கப் பார்வையுடன்! அருகில் நின்ற வீரனை அழைத்தவாறே, அவளை அணுகுகிறான்.

"உங்கடை பகுதிக்கு என்ன மாதிரி விதானையார் சம்பளம் தாறார்?" அவளது பக்கத்தில் நின்ற சின்னிக்கிழவியை மாணிக்கன் வினவினான்.

"ஏன் மோனை அந்தச் சீத்துவக்கேட்டைக் கேக்கிறாய்? நாள் முழுக்க உழைச்சதுக்கு ஐம்பது ரூபாதான் கூலி" - இருமிக் களைத்த கிழவி குடில்க் கப்பைப் பக்கபலமாய்ப் பிடித்தவாறே கூறுகிறாள்.

"என்னணை பெத்தாத்தை, அநியாயக் கதை இது? ஏன் கூட்டித் தரச் சொல்லிக் கேக்கிறதுதானே?"

"கேட்டாப்போலை கிடைச்சிடுமா?" ஓ! ஒலித்தது குயிலா? அன்றி அவள் குரலா? அந்த வல்லி மகள் மலர்விழிதான் கூறினாள்.

நிலத்திலிருந்து கொண்டெழும்பிய காற்று நெடும்பனைக் காவோலைகளைச் "சரசர"க்க வைத்துவிட்டு, குருத்தோலைகளுக்குத் தாவியது.

"நாளுக்கு எழுபது கேளுங்கோ! இல்லாட்டி வைப்புக்கு வரேலாது எண்டு சொல்லுங்கோ!"

"உங்களுக்கு என்ன மாதிரி?"

"எங்களுக்குக் கொத்து வேலை எண்டபடியாலையாக்கும் நூறு தாறார்."

"ம்.... ம்.... மழைதான் விட்டுட்டுதே, பிறகு மென்ன மெனக்கேடு?"- வட்ட விதானையார் தறையில் நின்று சத்தமிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றைய... அந்த... சந்திப்பின் விளைவு? வயலூருக்கு... சீவலுக்குச் சென்று வரும் வழியில் செம்பாட்டுத் திடலில் வல்லி வளவுக்கையும் வடலிப் பருவப் பனையொன்றை மாணிக்கன் பார்த்துக் கொண்டான்.

"முன்னை உங்கடை பகுதியார் எங்களோடை வலு வாரப்பாடு தம்பி. அந்த நாளையிலை உன்ரை கொப்பு கோத்தை கூட வயலூருக்குப் போகக்குள்ளை மைமல் பொழுதெண்டாலும், இந்தப் படலையையும் ஒருக்கால் திறுந்து தான் போவினம்."

ஆரம்ப காலங்களில் செம்பாட்டுத் திடலைப் போலவே வடலித் திடலும் பொருளாதாரத்தில் இருந்ததையும், காலஞ் செல்லச்செல்லப் படிப்பறிவாலும் தொழில் துறையாலும் வடலித் திடலார் மேம்பட்டுச் செம்பாட்டுத் திடலாருடன் இருந்த தொடர்பைத் துண்டித்ததோடு சம்மந்தம் வைத்துக் கொள்வதையும் நிற்பாட்டியதையுமே சுட்டிக்காட்ட வல்லி அதைச் சூசகமாகக் கூறினார் என்பதை மாணிக்கன் நன்குணர்ந்து எதையுமே கூறமுடியாதவனாக மௌனியாகி விட்டான்.

"அந்த நாளையிலை, நான் ஆடு மாடு வளர்த்த காலங்களிலை அதுகளுக்கு தீனுக்காக சேர்வை சீவுறதுக்கு நொங்கு பொறுக்கவெண்டு கருக்கலோடையே நித்திரைப்பாயை விட்டு எழும்பிப் போடுவன். நொங்கு பொறுக்காலை வந்த பிறகுதான் நான் விறகு கொத்துக்குப் போறது."

"இரண்டு பனை ஏறி இறங்கவே எங்களுக்கு நாரி சந்தெல்லாம் உழையுது. எப்பிடி அம்மான் இந்த வயதிலையும் உப்பிடி உசாரா விறகு கொத்திறியள்?"

"அப்பிடிக் கேள் மோனை. இந்த நாளையில் கூப்பன் மா புட்டிலும், மிச்சாட்டு அரிசியிலும் என்ன சத்துக் கிடக்கு? அந்த நாளையிலை ஒடியல் புட்டையும், பாணிப் பினாட்டையும் திண்டு கூழையும் குடிச்சுத்தான் எங்கடை தேகத்தை வளத்து இப்பிடி வலுவாக்கினம். அந்த அத்திவாரத்தாலைதான் இந்த வயதிலையும் இப்பிடித் தொழில் செய்ய முடியுது. இப்பவும் வாற போற ஆக்களுக்கு குடுக்கிறதே தவிர, உந்தக் கோப்பி தேத்தண்ணியளை நான் பாவிக்கிறது கிடையாது கண்டியோ? காலம்பற வெள்ளன முகங்கழுவின உடனை நான் இப்பவும் குடிக்கிறது பழந்தண்ணிதான் மோனை."

வல்லியுடன் கதை கொடுத்தாலும், மாணிக்கனின் கண்கள் அடுப்படியிலேயே நிலைத்திருக்கும். தேத்தண்ணிச் சிரட்டையுடனும் பனங்கட்டிக் குட்டானுடனும் அவள் வந்து "தரிசனம்" கொடுக்கும் அந்த ஐந்து நிமிடத்துக்காக அவன் மணிக்கணக்கில் காத்திருந்த நாட்கள் ஏராளம்.

அன்றும் வழக்கம் போலச் சீவலை முடித்தவாறே மால் பக்கம் வந்தவன், ஒரு முறை உள்ளே எட்டிப் பார்த்தான். எவருமே இல்லை. ஆனால், அடுப்படிப் பக்கத்திலிருந்து ஒரு முனகல் சத்தம் மட்டுமே வெளி வந்தது. கையோடு கையாகக் குசினிப் படலையையும் திறந்தவனுக்கு ஒரு பேரதிர்ச்சி காத்திருந்தது.

முழங்கால்கள் இரண்டிற்குள்ளும் முகத்தைப் புதைத்தவாறே மலர்விழிதான் முனகிக் கொண்டிருந்தாள். அவசர அவசரமாக உள்ளே நுழைந்தவன், அவளை அணுகியபோது, தாங்க முடியாத வயிற்று வலியால் அவள் நிலை தடுமாறுவது அவனுக்குப் புரிந்தது.

வயலூர் சென்று ஆயுர்வேதப் பரியாரியாரை அழைத்து வந்து வைத்தியம் பார்த்து, அவளைத் தூக்கிச் சென்று மாலுக்குள் வாங்கிலில் படுக்க வைத்து, காவோலை வெட்டிக் கொக்காரை, பன்னாடை பொறுக்கி வந்து சூட்டடுப்பை மூட்டி, "தேத்தண்ணி" போட்டுக்கொண்டு வந்து, பரியாரியாரின் தூளைப் பாணி கலந்து தீத்தி, பின்னர் தேநீரைக் குடிக்கக் கொடுத்த போதுதான் நாவைக் கூட்டி அவள் கதைக்க ஆரம்பித்தாள்

"இந்தக் கல்லடைசல் குத்து இடைக்கிடை எனக்கு வாறது. அந்த நேரங்களிலை ஒண்டுமே எனக்குத் தெரியாது. தலைக்கை ஒரேயடியா அம்மிப்போடும். இண்டைக்கெண்டு பாத்து நறுவிலி வைரவர் கோயிலிலை வேள்வியெண்டு சிலம்படிக்கு அப்ப போனவர்தான்... அப்புவை இன்னும் காணேலை! நல்லவேளை கடவுள் போலை ஆபத்துக்கு வந்து உதவினியள்..." - என அவள் மால் கப்பில் சாய்ந்திருந்தவாறே கூறியதும்...

அன்றைய அந்த நெருக்கம்... படிப்படியாகக் கூடிக்கொண்டு வந்தது. அச்சமயத்தில் தான் மாணிக்கன் தனது எண்ணத்தை முடிவாக்கி அதை அவளிடம் கூற, ஒரு நல்ல நாளை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

வயலூர் பிள்ளையார் கோவிலில் மூன்றாந் திருவிழாவிலன்று வடக்கு வீதியில் வல்லியின் சிலம்படியே விசேட நிகழ்ச்சி என வீரன் மூலம் கேள்விப்பட்ட வேளையில் தான் "அதைச் சொல்ல" அன்றே நல்ல நாள் என்று அடுக்கெடுத்த மாணிக்கன் மைமல் பொழுதாக மலர்விழி வளவு மாலிற்குள் நுழைகிறான்.

"மலர்! உன்னோடை ஒரு சங்கதி பறைய வேணும்."

"என்ன... அப்பிடி... புதுநாணயமா இண்டைக்கு?"

"அப்பிடி ஒண்டுமில்லை மலர்! நான்... உன்னைக் கலியாணங் கட்ட விரும்புறன்."

அதைக் கேட்டதும் அவள் எதுவுமே பேசாது பேயறைந்தவள் போல... "ஏன் இவளுக்கு "இதில்" பிரியமே இல்லையா?"

"என்ன மலர்... நான் சொல்லுறன், நீ ஒண்டும் பறையாமல்..."

"நான்... நான் எப்பிடி?"

"என்ன மலர், என்ன சொல்லுறாய் நீ?"

"எனக்கு எப்பவோ கலியாணம் நடந்திட்டுது" உச்சிப்பனையில் இருந்த போது புயல் காற்று வீசியதைப் போல இருந்தது மாணிக்கனுக்கு

"என்ன,.... நீ..... என்ன பூராயம் பிடிக்கிறாய்?"

"எனக்குக் கலியாண எழுத்து முடிஞ்சது. அதுக்குப் பிறகு அவரர் தங்கடை ஊரிலையிருந்து அதுதான் கிளைப்பனையடியிலை யிருந்து இஞ்சை அடிக்கடி வந்து போறவர். நல்ல நாளாய்ப் பாத்து இரண்டு பேருக்கும் சோத்தைக் குடுப்பிச்சு விடுவம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்டு அப்பு சொல்லிக் கொண்டிருந்தார். ஆனால் அதுக்கிடையிலை வெளி நாட்டிலை வேலை கிடைச்சு.... அவர் போட்டார். போட்டு வந்து உனக்குத் தங்கத் தாலியே கட்டுறன் பார் எண்டு சொல்லிப்போட்டுப் போனார். போனவர் போனது தான். போய் ரண்டு வருசமாச்சு... இன்னும் ஒரு கடதாசி கூடப் போடேல்லை".

"அப்ப இந்தச் சங்கதியை இவ்வளவு நாளும் நீயோ அல்லது உன்ரை கொப்புவோ ஏன் எனக்குச் சொல்லேல்லை"

"அவற்றை பகுதியிலை ஒரு சின்னப் பிசகு இருந்ததாலை அருளாமல் தான் கொப்பி போட்டு கலியாண எழுத்தும் நடந்தது. பிறகு வெளிநாட்டுக் கெண்டு போயும் ஒரு மறுமொழிகூடப் போடாதபடியாலை ஒருநாள் யோசிச்சுப் போட்டு அப்புதான் சொன்னார். "எனக்கெண்டால் அவன் திரும்பி, எங்கடை வளவுக்கு வருவான் எண்ட நம்பிக்கை ஒல்லுப் போலையும் இல்லைப் பிள்ளை. எங்களுக்கெண்டு இப்பிடி ஒரு சீலக்கேடு வருமெண்டு நான் கனவிலைகூட நினைக்கேல்லை. பேசாமல்... அந்தக் கதையையே விட்டுடுவம்..." எண்டு. அதுதான் அதைப்பற்றி நான் மூச்சுக்கூட விடேலை."

"கலியாண எழுத்து முடிஞ்சளவிலை தானோ?"

"இல்லை! மூண்டாம் வருஷம் வயலூர் பிள்ளையார் கோவில் திருவிழாவுக்கெண்டு வந்து இரவிலை இஞ்சை தான் பத்து நாளும் தங்கியிருந்தவர்."

"எட... உப்பிடி எல்லாம் நடந்தவனுக்கு ஒரு கடதாசி கூடப் போட...?"

"அதுதான் நாங்களும் யோசிக்கிறம்."

அன்றைய சம்பவத்திற்குப் பிறகு ஏழெட்டு நாட்களாக மாணிக்கன் வல்லிவளவுப் படலையைத் திறக்கவில்லை.

பத்தாம் நாள் மைமலுக்குள் மால் வாசலில் நெடும்பனையாக நின்ற அந்த உருவத்தைப் பார்த்து அவள் நிமிருகிறாள்.

"அண்டைக்குப் பறைஞ்ச விசயத்தைப் பற்றி ஒரு முடிவுக்கு வந்திருப்பாய் எண்டு நம்புறன்." - எரிந்து கொண்டிருக்கும் கைவிளக்கின் சுவாலையைப் பார்த்தவாறே மாணிக்கன் கூறுகிறான்.

"..........."

"இப்படியெல்லாம் உன்னை மறந்திருக்கிறவன் ஊருக்கு வந்தாலும் உன்னட்டை வருவான் எண்டு நானும் ஒல்லுப்போலையும் நம்பேல்லை. அதனாலை நான் கேட்டமாதிரி ஒரு முடிவுக்கு வாறதுதான் நல்லதெண்டு நம்புறன்."

"பத்து நாளா யோசிச்சு நானும் ஒரு முடிவுக்கு வந்திட்டன். எதுக்கும் அப்புவோடை யோசிச்சுப் போட்டு மறுமொழி சொல்லுறன்."

வல்லியின் அந்த முடிவை ஆவலோடு எதிர்பார்த்து இருந்த நாட்களில்... ஒரு நாள் நடந்த சம்பவம் அது.

அன்று ஒரு பௌர்ணமி தினம். வயலூர் பிள்ளையார் கோவிலிற்கு காத்தான் கூத்துப் பார்க்கவென இரவுச் சாப்பாடு முடிந்த கையோடு வல்லி சென்றுவிட்டார். கூத்துப் பார்க்கவென தனது வளவிலிருந்து கிளம்பி வந்த மாணிக்கன் ஒருக்கால் மலர் விழியினது வளவையும் எட்டிப்பார்த்துக் கொண்டு போவம் என்ற எண்ணத்துடன் படலையைத் திறந்து உள்ளே நுழைந்தான்

மாலிற்குள் குந்தியிருந்தவாறே கிழிந்த பாயொன்றிற்கு பொத்தல் போட்டுக்கொண்டு இருந்தாள் மலர். மாணிக்கனின் வரவால் அவளின் முகம் சார்வோலையாக மலர்ந்தது.

"வாருங்கோ. என்ன இந்த நேரத்திலை..."

"காத்தான் கூத்துப் பார்க்கப் போறன். அதுதான் ஒருக்கால்..."

"கூத்து, பிள்ளையார் கோவிலிலை."

"அப்ப நான் போட்டு வாறன்."

"நீங்கள் கூத்துப் பார்க்க போறியளோ? இல்லாட்டி கூத்தாடப் போறியளோ?"

"ஏன் மலர் அப்பிடிக் கேக்கிறாய்?"

"இல்லை, முகமெல்லாம் ஒரே பூசல் மாவாக் கிடக்கு."

"வேர்வையோடை போட்டது. சுண்ணாம்பு போலைப் படிஞ்சு போச்சுது போலைக் கிடக்கு. அது சரி நீ கூத்துப் பார்க்க வரேலையோ?"

"ஏன் காத்தான் கதை உங்களுக்கு இவ்வளவு நாளும் தெரியாதோ? அதுபோக, இப்ப நீங்களும் பெரிய பெரிய சங்கதிகள் எல்லாம் செய்யிறியளாம்.

"என்னத்தைச் சொல்லுறாய் மலர்?" முற்றத்து ஒற்றைப் பனையின் கீழ் குவிந்திருந்த வெண் மணலில் குந்தியவாறே மாணிக்கன் கேட்கிறான்.

"வயலூர் சித்திரத்தேர் வெள்ளோட்ட விழாவிலண்டு உங்களுக்கும் வட்டவிதானையாருக்கும் பெரிய போராமே?"

"எட! அதைச் சொல்லுறியே? உனக்கார் சொன்னது?"

"அப்புதான் சொல்லிப் புழகினார். மாணிக்கன் மட்டும் அண்டைக்கு இல்லாட்டில் வயலூரார் எங்களையெல்லாம் ஏறி மிதிச்சிருப்பாங்களெண்டு."

"பின்னையென்ன மலர்? நாங்களும் தேர் வடம் பிடிக்கப் போறம் எண்டு கேட்டம். "காவோலை கட்டி இழுத்தவைக்கு வடம் பிடிச்சு தேர் இழுக்கக் கேக்குதோ?" எண்டு விதானையார் நிண்டார். "ஓகோ அப்பிடியோ சங்கதி? அப்ப இண்டு மேற்பட்டு நாங்கள் ஒருதரும் குடிமைத் தொழில் செய்யிறதில்லை" எண்டு சொல்லிப் போட்டு எல்லாரும் வந்திட்டம்."

"உப்பிடிக் குடிமைத் தொழிலை விட்டுட்டு எத்தினை நாளைக் கெண்டு சீவிக்கிறது?"

"இது தான் இனி முடிவு மலர். ஆரம்பத்திலை கொஞ்ச நாளைக்கு கஷ்ரமாகத்தான் இருக்கும். போகப் போக எல்லாம் பழகீடும். இந்த இரண்டு கிழமைக்கை நடந்த சங்கதியளை நீ கேக்கேல்லை...! இப்ப நாங்கள் சீவிற கள்ளு, கருப்பணியள் எல்லாம் கோப்பிறேசனுக்குத்தான் நேரை போகுது. முன்னைய மாதிரி வீடு வீடாக கொண்டு திரிஞ்சு குடுக்கிறதில்லை. அத்தோடை இனி வெங்காய வைப்பு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களை புடுங்கல் எண்டு எங்கடை பகுதிப் பெண்டுகள் எங்கையும் அலையத் தேவையில்லை. மூடல், குட்டான், பாய், இழைக்கிற வேலையோ அல்லது பனங் கட்டி, பாணிப்பனாட்டு, புழுக்கொடியல் போடுற வேலையோ எதுவெண்டாலும் இனி அவையள் எல்லாரும் எங்கடை பனம்பொருள் நிலையத்திலையே வந்து வேலை செய்யலாம். அதே மாதிரித்தான் சலவைத் தொழிலாளிகளையும், சாய்ப்புக்காரர் களையும் குடிமைத் தொழில் செய்ய வேண்டாமெண்டு அறிவிச்சிருக்கிறம். ஆரும் அப்பிடி இசகுபிசகா நடந்தால், எங்கடை சங்கத்தாலை தண்டனை குடுக்கிறதாகவும் முடிவெடுத்திருக்கிறம். இப்ப என்னெண்டால் வயலூரிலை ரகசியமா வீட்டிலை வைச்சுக் கள்ளுக் குடிச்சவைக்கு வயித்திலையடி. இப்ப மையல் பட்டதுக்கு பிறகுதான் ஒளிச்சொளிச்சு எல்லாரும் கோப்பிரேசனுக்குப் போயினம். கிழடுகட்டைகள் எல்லாரையும் முகச்சலாஞ் செய்யுறதுக்குக் கூட சைக்கிளிலை ஏத்திக் கொண்டு சாய்ப்புக்குப் போயினம். துடக்குத் துணியளையும் அழுக்குத் துணியளையும் அவையவையே பொட்டழி கட்டிக் கொண்டு லோன்றிக்குப் போயினம். அதைவிட முசுப்பாத்தி, வயலூரிலை ஆரும் செத்தாலும் பிரேதம் காவுறது, சவம் எரிக்கிறது எல்லாம் வெள்ளாமாக்கள்தான். எப்பிடி நாங்கள் தொடங்கியிருக்கிற வேள்வி?

"பெரிய ஆள் தான் நீங்கள்" என மலர் சொன்னதும், தொடர்ந்தும் அன்று நள்ளிரவு வரை அவளுடன் அங்கிருந்து விட்டு பின்னர் கூத்தே பாராது திரும்பியதும்... எண்ணங்கள் கருப்பனீராக இனித்தன.

இவை நடந்த சில நாட்களின் பின்னர் தான்... எவருமே எதிர்பார்த்திராத... அது கனவுபோல் நடந்து முடிந்தது!

வெளிநாட்டிலிருந்து திரும்பிய மலரது கணவன் நேராகச் செம்பாட்டுத் திடலிற்கே ஓடோடிவந்து சேர்ந்தது. விரக்தியின் விளிம்பிலிருந்த வல்லி வாயெல்லாம் பல்லாக மாணிக்கன் பகுதிக்குக் கூட அழைப்பு விடுத்து பெரும் "டீங்காக" மகளின் சடங்கை முடித்தது.

ஆறு மாதங்கள் கழிந்தன. இப்போதெல்லாம் வல்லியின் வளவுப் படலையையே மாணிக்கன் திறப்பதில்லை. கள்ளும் காய்வெட்டிக் கள்ளாகி விட்டதால் அங்கு சீவலையும் அப்போதே அவன் நிறுத்தி விட்டான்.

அண்மையில்தான் அதிர்ச்சி தரும் அந்தச் சம்பவம் நிகழ்ந்தது. திடீரென்று "ஹாட் அற்றாக்"கால் பாதிக்கப்பட்ட மலர்விழியின் கணவனை கிராமத்து ஆஸ்பத்திரியில் "டாக்குத்தர்" மார் கைவிரிக்கவே யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்கு ஏற்றினார்கள். பெரிய "டாக்குத்தர்" பரிசோதித்து விட்டுச் சொன்ன பதில் பேரதிர்ச்சியாகவே இருந்தது. ஏற்கனவே இருமுறை இந்நோய்க்கு ஆளாகியிருக் கிறானம் அவன். இது இறுதி முறை. "எங்கடை கையிலை ஒண்டுமில்லை. இனிக் கடவுள் விட்ட வழி!"

"நறுவிலி வைரவா!" மலர்விழி தன் குலதெய்வத்தை வேண்டிக் கொண்டாள்." வேண்டியபடியா விடயங்கள் நடக்கின்றன?

ஆறு மாதங்கள்... அவளை வாழவைத்தவன், அதுவே போது மென்ற ஆறுதலுடன்....!

"ஐயோ என்ரை ராசா! என்னை விட்டுப் போட்டியோ?" மலர்விழி ஒப்பாரி வைத்து ஓலமிட்டாள். நெஞ்சு நெஞ்சாக இடித்தாள்.

அயலவர்கள் கூடி வந்து பலவாறும் தேற்றினர்.

"உனக்கெண்டு உது நடந்ததே பிள்ளை? என்ரை நடுவிலாளுக்கும் உன்னோட்டை வயது தானே? அவளின்ரை புருஷனும் சீவலுக்கு பனை ஏறக்குள்ளை, கைதவறி விழுந்து மோசம் போகேல்லையே?" நடந்த கதைகளைச் சிலர் உதாரணம் காட்டினர்.

"உங்கை இளவட்டனுகள் என்னமாதிரி அம்பாளிக்குதுகள். என்ரை பிள்ளைக்கெண்டு இந்த வாழ்மானம்?" - வல்லி தலைதலையாக இடித்தார்.

"உதுகளெல்லாம் எங்கடை கையிலேயே அம்மான்? இன்னும் அதுகளையே யோசிச்சுக் கொண்டிருந்தால், மற்ற அலுவல்களை ஆர் நிண்டு பாக்கிறது?" - வல்லியின் ஒன்றுவிட்ட தங்கைமகன் தெய்வேந்திரன் ஆறுதல் வார்த்தை கூறினான்.

அது நடந்து ஒரு மாதத்தின் பின்பு... அந்தியேட்டி வளவிற்கென்று சென்றபோதுதான் மாணிக்கன் அவளைச் சந்தித்து அனுதாபம் கூற முற்பட்டான்.

மணிக்கணக்காக... வல்லியின் புலம்பலைக் கேட்டுச் சகித்த மாணிக்கன் நேரஞ் சென்றும் அவன் வராததைக் கண்டு "பழைய வளவுக்கை சீவலுக்குப் பனை பாத்துக்கொண்டு வாறன்" என்று கூறிச் சென்று அடுப்படிப் பக்கம் தலை நீட்டியும் அவள் வெளிவராது போகவே... "பாளை இன்னும் வெளிப்படேல்லை!" என்று வல்லிக்குக் கூறிவிட்டு மெல்லென மாறிவிட்டான்

மலர்விழியின் இளமைக்கால விதவைக் கோலத்தைப் பற்றி வடலித்திடலில் கூட பலரும் பரிவாகக் கதைக்க ஆரம்பித்ததன் பின்னர் தான் "அவளுக்கு நான் வாழ்வளித்தால் என்ன?" என்ற எண்ணம் மாணிக்கன் மனதில் தளிர்ப்பு எய்தியது.

திக்கற்றிருக்கும் அவளது வாழ்வில் மாறுதல்களை ஏற்படுத்தி அவள் வாழ்வில் புத்தொளி வீச, மனதில் வழிவகுத்து அந்த அங்கலாய்ப்பில் அதற்கு அவளது விருப்பறிய வீரனைத் தூதாக மாணிக்கன் அனுப்பிய போதுதான் "உத்தரத்து வேள்வியண்டைக்கு வரச்சொல்லுங்கோ மறுமொழி சொல்லுறன்" என்று சொல்லி அனுப்பினாள் அவள்.

அந்தப் பதிலை... எதிர்ப்பார்த்துத்தான் இப்போது மாணிக்கன் ஆவலோடு காத்திருக்கிறான்!

"என்ன மறுமொழி அவள் சொல்வாள்?" சருகு பத்திப்போன காவோலை களைப் பிய்தெறிந்து கொண்டு நெடுப்பனையிலிருந்து மிக வேகமாக விழுந்த ஒரு பனங்காய் உருண்டு வந்து மாணிக்கனின் முன்றலில் நின்றது.

நறுவிலி வைரவர் கோவிலில் வேள்விப் பறையும்... மேலாக சிலம்படி ஓசையும் ஒலிப்பது மாணிக்கனுக்கு இப்போது தெளிவாகவே கேட்கிறது.

பனங்கொட்டினின்றும் துள்ளி எழுந்தவன்... கிணற்றடி சென்று கால்முகங்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கழுவித் தன்னை அலங்கரித்து... செம்பாட்டுத்திடலை நோக்கி நடக்க ஆரம்பிக்கிறான்.

எப்படி நடந்தானோ தெரியாது. படலையைத் திறந்து கொண்டு மாலிற்குள் புகுந்தான் மாணிக்கன்.

"எண்டாலும் ஒல்லுப்போலை கொட்டுப்பட்டுத் தான் போனாள்!" - நீண்ட நாட்களின் பின் அவளைக் கண்ட மாணிக்கன் முதலில் மனதில் எண்ணிக் கொண்டது இது.

"என்ன அப்பிடி யோசனை? நான் ஒருத்தன் வந்ததையும் கவனிக்காமல்."

"ஓ! வாருங்கோ இப்பிடி இந்தக் குந்திலை இருங்கோ." மலரின் முகம் சீக்காயாக இறுகியிருந்தது.

"வீரன் அண்டைக்கு விசயம் எல்லாம் சொல்லியிருப்பான் எண்டு நம்புறன்."

"ம்!..." நீண்ட பெருமூச்சு ஒன்று மட்டுமே பதிலாக வந்தது.

"நடக்கக் கூடாதது நடந்து போச்சு. இன்னும் அதையே நினைச்சுக் கொண்டிருந்தால்..."

"அதுக்கு. இப்பிடி நடக்குமெண்டு ஆர்தான் எண்ணியிருந்தது" - நா தடுமாறியது. குரல் "தள, தள"த்தது.

"அதுக்கு இப்ப என்ன செய்யிறது மலர்? இது தான் நியதி எண்டால் ஆராலைதான் மாற்றமுடியும்? இந்த நேரத்திலை... இதை... சொல்லுறதும் சரியில்லை! ஆனால் உன்ரை நிலவரத்தைப் பார்த்துச் சொல்லாமல் இருக்கவும் முடியேல்லை! உனக்குச் சம்மதமெண்டால்... உன்னை நான் கலியாணங் கட்டுறன்."

"மாணிக்கன்!" - என்றுமே தன் பெயரைச் சொல்லாதவள் இன்று இப்படிப் பேயறைந்தவளாகக் கத்தியது, மாணிக்கனுக்குப் பேரதிர்ச்சியாகவே இருந்தது.

"என்ரை வாழ்க்கை முடிஞ்சுபோச்சு. அவருக்குப் பெண்சாதியாக வாழ்ந்த அந்த ஆறு மாதங்களுமே என்ரை வாழ்க்கையிலை பாளை பூத்த நாட்கள். மலர்... மலர்... எண்டு வாய்க்கு நூறுதரம் சொல்லுவியளே உங்கடை, அந்த மலர் இப்ப பூத்து உதிர்ந்து போச்சு."

"மலர்! உனக்கென்ன பைத்தியமே?"

"இல்லை. பைத்தியம் தெளிஞ்சு போச்சு. கலியாணம் கட்டியிருந்தும் இளமை உணர்ச்சிகளுக்கு அடிமைப்பிட்டு, உங்களிலை விருப்பப்பட்டு, கண்காணாத தேசத்திலை இருந்த புருசனுக்குத் துரோகஞ் செய்தனே...? ஒரு கடதாசி கூடப்போட முடியாமல் நோயாலை துன்பப்பட்டுக் கொண்டிருந்த அவற்றை வருத்தங்களைக் கூட நினைக்காமல், என்ரை ஆசையளைப் பெரிசா நினைச்சுக் கொண்டு திமிர் பிடிச்சுத்திரிஞ்சனே... அவர் திரும்பி வந்து என்னோடை வாழ்ந்த அந்த ஆறு மாதங்களிலைதான் என்னாலை எல்லாத்தையுமே உணர முடிஞ்சுது. வெறும் உடம்பாலை மட்டுமில்லை, நோயோ நொடியோ... வருத்தமோ துன்பமோ... ஒரு நாளெண்டாலும் புருஷனும் பெண்சாதியும் ஒற்றுமையா வாழ்ந்தால் அதுதான் உயர்ந்த வாழ்க்கை எண்டது இப்பத்தான் எனக்குப் புரியுது."

"மலர்! அப்பிடியான ஒரு வாழ்வைத் தான் உனக்கு நான் தாறன்."

"பட்டுப்போன பனையிலை பாளையைப் பாத்துக் கொண்டு நிக்கிறியளே...? விட்டுப்போட்டு நானிப்ப சொல்லுறதைக் கேளுங்கோ."

"மலர், ஏனிப்பிடி எல்லாம் பறையிறாய்? உனக்கென்ன நடந்தது?"

"உங்கடை நல்ல மனசுக்கு ஒண்டும் நடக்கக்கூடாது. என்னாலை நீங்கள் ஏமாந்து போனதாகவும் இருக்கப்பிடாது. அதுக்காகத்தான் இதெல்லாத்தையும் சொல்லுறன். சலனமற்ற குளமாயிருந்த உங்களின்ரை வாழ்க்கையிலை இளமை உணர்ச்சிக்கு இடமளிச்சு ஒரு கல்லைப் போலை நான் வந்து விழுந்தன். ஆனால் உங்களோடையும் வாழ முடியாமல், அவரோடை கடைசி மட்டும் வாழுற பாக்கியமும் இல்லாமல் ஒரேயடியா வாழ்க்கையிலை விழுந்து போயிருக்கிறன். நான் அவருக்குச் செய்த நம்பிக்கைத் துரோகத்துக்கு நறுவிலி வைரவராப் பாத்துத் தந்த தண்டனை இது. இப்பிடியான ஒரு வாழ்க்கை வேறை எந்தப் பெண்ணாய் பிறந்தவளுக்குமே வரக்கூடாது!"

"அதுதானே மலர் சொல்லுறன். உன்னைக் கண் கலங்காமல் கடைசிமட்டிலை நான் காப்பாத்திறன்."

"கட்டினவன் விட்டுட்டுப் போட்டான் எண்டெண்ணித் தான் உங்களின்ரை நிழலிலை நான் வாழ நினைச்சன். ஆனால், கண்கண்ட கடவுளா அவரே திரும்பி வந்து எனக்கு வாழுறதுக்கு ஒரு வழியை அமைச்சுச் தந்து, தன்ரை வாரிசா என்ரை வயித்திலை ஒரு சீவனையுந் தந்திட்டுப் போகக்குள்ளை, இன்னொரு வாழ்க்கைத் துணையை எனக்காக நான் தேடிக்கொள்ளுறது எந்த வகையிலை நியாயம்? அதுதான் நான் சொல்லுறன். உங்களை ஏமாத்தினதா என்னை இந்த ஊர் பழி சொல்லாமல் இருக்கவேணு மெண்டால்... நீங்கள் என்மேலை வைச்சிருந்தது... வைச்சிருக்கிறது உண்மையான அன்பாயிருந்தால் நான் சொல்லுறபடி கேளுங்கோ. இன்னும் உங்கடை வாழ்க்கையைச் சீரழிக்காமல் உங்களுக்கெண்டொரு துணையைத் தேடிக்கொண்டு நீங்கள் நலமா இருக்க வேணும். இதுதான் உங்கடை மலருக்கு நீங்கள் செய்யிற பேருதவி."

"மலர்... உதுதான் உன்ரை முடிவாயிருந்தால்... என்ரை முடிவையும் நான் சொல்லுறன். இன்னொரு துணையைத் தேடிக்கொள்ளுறதெண்டது இனி என்ரை வாழ்க்கையிலை ஒருநாளும் நடக்காதது. எண்டைக்காவது ஒரு நாள் நீ மனம் மாறுவாய் எண்டுதான் நான் நம்புறன். அப்ப சொல்லியனுப்பு நான் உன்ரை வளவுக்கு உன்ரை புருஷனாக, உன்ரை பிள்ளைக்கு தகப்பனாக வாறன். அது வரையிலை ஒற்றைப் பனையாகத்தான் நான் இருப்பன். இப்ப நான் போட்டுவாறன்."

நறுவிலி வைரவர் கோவிலில் வேள்வி முடிந்து, ஒலிபெருக்கில் ஒலிக்கும் இனிய கானம் காற்றோடு கலந்து கொண்டிருந்தது. ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணி

அ.தேவதாசன்

1

பன்னிரெண்டு வருடங்களுக்கு முன்பு உடுத்த துணியோடு வீட்டை விட்டுப் புறப்பட்டு திரும்பவும் உடுத்த துணியோடு விட்டுக்குப் புறப்பட்ட சிந்தாமணி வன்னிக் காட்டிலும் வவுனியாச் சிறையிலும் படுத்து எழும்பி நெருப்புக் காய்ச்சலும் வாந்திபேதியும் உடம்பின் சொத்தாகி எலும்பும் தோலுமாய் யாழ்ப்பாணத்துக்குள் வந்துவிட்டாள்.

பன்னிரெண்டு வருடங்களுக்குப் பிறகு யாழ்ப்பாணத்தைப் பார்க்கையில் உண்மையில் பெரிதாக எந்த மாற்றமும் தெரியவில்லை. சண்டை முடிந்து கோடு, கச்சேரி எல்லாம் சீராக நடப்பதுபோல் ஒரு தோற்றம். யாழ்ப்பாணத்தை ஒருமுறை சுற்றிப்பார்க்க வேண்டும் என்கிற ஆசை சிந்தாமணிக்கு அறவே எழவேயில்லை.

எழுபத்தாறாம் இலக்க பஸ்ஸைத் தேடிப்பிடித்து ஒரு ஓரமாக அமர்ந்து கொண்டாள். "டிக்கட் எடுக்காத ஆக்கள் டிக்கற்றை எடுத்துக் கொள்ளுங்கோ" என்றவாறு கொண்டக்டர் மணியைப் பிடித்து இழுக்க அருண்ட சிந்தாமணி "வேலணைத் துறைக்கு ஒண்டு தாருங்கோ" என்று கேட்டு வாங்கி டிக்கட்டை நெஞ்சுச் சட்டைக்குள் செருகிக் கொண்டாள். பஸ் குறிகட்டுவானை நோக்கிப் புறப்பட்டது.

இடிக்கப்பட்ட கட்டடங்கள், அழிக்கப்பட்ட கோட்டை இவைகளைக் கடந்து பஸ் சென்று கொண்டிருந்தது. கடற்காற்று முகத்தில் பட சிந்தாமணி சற்றுக் கண்ணயர்ந்து விட்டாள். திடுக்குற்றவளாய் விழித்துப் பார்க்கும் போது அராலிச் சந்தியைக் கடந்து பஸ் ஓடிக்கொண்டிருந்தது. பல வீடுகள் கூரையின்றியும் பல வீடுகள் முற்றாக அழிந்தும் கிடந்தன. வங்களாவடிச் சந்திவரை சன நடமாட்டம் ஏதுமின்றி காய்ந்தே கிடந்தது அந்தப் பூமி. வங்களாவடிச் சந்தி கழிந்த பின்புதான் சன நடமாட்டம் தென்பட்டது. சில கடைகள் திறந்திருந்தன. பள்ளிச் சிறுவர்கள் அங்கும் இங்குமாகச் சென்றுகொண்டிருந்தனர். நடந்து செல்பவர்களும் அதிகமாகவே காணப்பட்டனர். பஸ் கொம்பனியடி கழிய சிந்தாமணி தன்னை பஸ்ஸை விட்டு இறங்குவதற்கு தயார்படுத்திக் கொண்டாள். பஸ் பழைய சர்வோதயத்திற்கு முன்னால் நிற்கையில் சிந்தாமணி இறங்கிக் கொண்டாள். பஸ்ஸை விட்டு இறங்கிய சிந்தாமணி தான் இறங்கிய இடம் சரிதானா என நாலு பக்கமும் பார்வையை எறிந்தாள்.

சர்வோதயக் கட்டடம் பாறி விழுந்து கிடந்தது. அங்கிருந்து அவள் வீட்டுக்குப் போகும் ஒழுங்கையயைப் பிடித்து நடந்தாள். ஒழுங்கை முன்னர் தார் பூசி கல்லொழுங்கையாய்க் கிடந்தது. இப்போது குண்டும் குழியுமாய்த் தூர்ந்து போய்க் கிடக்கிறது.

கதிரன் கடை இன்னமும் இருக்கிறது. ஆனால் கதிரன்தான் இல்லை. கடைக்குள் புதியவன் ஒருவன் இருந்தான். "தம்பி ஒரு உப்புச் சோடா தாருங்கோ" என்று கேட்டவள் பின் "கதிரன் இல்லையோ?" எனக் கேட்டாள். "அவர் இந்தியா போய் பத்து வரியத்துக்கு மேல, இப்ப நான்தான் கடை நடத்திறன்" என்று பதில் வந்தது. சோடாவை வாங்கி இரண்டு மிடறுகள் குடித்தவள் மீதியைத் தனது சிறிய பையுக்குள் வைத்துக் கொண்டு நடந்தாள். அவளுக்கு முன்னால் ஒரு சைக்கிள் வந்து "கால் பிரேக்" அடித்து நின்றது.

"சிந்தாமணி அக்கா, எப்ப வந்தது?"

"தம்பியை எனக்கெண்டா விளங்கயில்ல..."

"நான்தானக்கா சூசை."

"அட தம்பி, நானெண்டா மட்டுக்கட்டயில்ல..."

முன்னர் கருகருவென்று தலைமு, மீசையோடு இருந்த சூசை எல்லாமே வெள்ளையாகி வெளிறிப்போய் இருந்தான்.

"நீயும்தானக்கா சரியா உடைஞ்சு போனாய், இவ்வளவு காலமும் எங்க போய்க் கிடந்தனி?"

"என்ர பரிசு கேட்டை உனக்கேன், இப்பயும் கள்ளுத்தான் சீவிறியோ?"

"ஓம்... ஓம்..."

"சங்கத்துக்குப் போற உன்னை மினக்கெடுத்திறன் போல..."

"சீவல் எல்லாம் வெள்ளன முடிஞ்சுது. இப்ப சாட்டிக்கு தண்ணியள்ளப் போறன்"

"பேந்து ஏன் மினக்கடுகிற... நான் ஆறுதலாய் வீட்டுப் பக்கம் வாறன்."

இப்பொழுது ஒழுங்கை தானாகவே சிந்தாமணியின் கால்களை வீட்டுக்குக் கூட்டிப் போனது. வீட்டைச் சுற்றிப் போட்டிருந்த சீமைக் கிளுவைகள் மரங்களாகிப் பட்டுக் கிடந்தன. வேலிகளை மூடி பற்றைகள் பற்றிக் கிடந்தன. முற்றமே தெரியாத அளவுக்கு அது பனை, தென்னை ஓலைகளாலும் மட்டைகளாலும் மூடிக் கிடந்தது. வீட்டு வாசலில் ஒரு நாய் செத்து மக்கிக் கிடந்தது. வீட்டுக்குள் போனால் பாம்பு, பூச்சி களிடம் கடிபட நேருமென நினைத்த சிந்தாமணி ஒழுங்கையிலேயே குந்திக் கொண்டு வீட்டை வெறித்துப் பார்த்தவாறே இருந்தாள்.

இருந்த கொஞ்ச நஞ்சச் சொந்தக்காரரும் யுத்த சூறாவளியால் அள்ளி வீசப் பட்டு செத்தவர் சாக மிகுதிப்பேர் ஓடிப்போன, போன இடங்களிலேயே "செட்டில்" ஆகிவிட்டனர். சிந்தாமணியின் மூத்த சகோதரி இந்தியாவுக்குக் குடும்பத்தோடு ஓடிவிட்டாள். இயக்கத்தில் இருந்த தம்பி இன்னொரு இயக்கத்தால் புதைக்கப்பட, மற்ற சகோதரி கொழும்புக்கு ஓடி விட்டாள்.

சிந்தாமணி கொழும்புத் தங்கையிடம் தான் தனித்து விட்டதாகவும் தன்னோடு

பொது நூலகம் யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளை வேலணைக்கு வருமாறும் கேட்டாள். தங்கை வரமாட்டேன் என்பதற்கு பல காரணங்களை அடுக்கினாள். "வேலணைக்கு வந்து மைல் கணக்கில் நடந்து தண்ணி சுமக்க என்னால ஏலாது என்பது அதிலொரு முக்கிய காரணம்" என்றாள்.

இந்தியாவில் இருந்த தங்கையோ "இப்ப பிள்ளைகள் நல்லா இங்கிலிஷ் படிக்குதுகள். ஒரு சோலி சுறட்டு இல்ல. என்ன, காசிருந்தால்தான் வாழ்க்கை! ஆத்தில தண்ணி வருது. அந்த உப்புத் தண்ணிக் காட்டுக்குள்ள வந்து நான் என்னத்தைச் செய்ய" என்று கடிதம் போட்டாள்.

சூசை இன்னமும் தண்ணிக்கு சைக்கிள் மிதித்துக் கொண்டு சாட்டிக்குத் தானே போய்க்கொண்டிருக்கிறான். "தங்கச்சிமார் சொன்னதும் சரிதான்" என்று சிந்தாமணி நினைத்துக் கொண்டாள். ஆனால் தான் தனித்து விட்டோமென்ற உண்மை அவளைச் சுட்டுக்கொண்டேயிருந்தது.

இந்த வீட்டையும் காணியையும் என்னால் திருத்த இயலாது. யாரையும் கூலிக்கு பிடித்துத்தான் திருத்த வேண்டும். இனி நல்ல தண்ணிக்கும் அலைய வேண்டும். ஆனாலும் என் அப்பனும் ஆத்தையும் வாழ்ந்து செத்த வீடு இது. இதைவிட்டு எங்கே போக? நானும் இங்கேயே சாக வேண்டியதுதான் என்ற எண்ணத்தோடு இடுப்பைத் தடவினாள். இடுப்பில் கொழும்புத் தங்கை கைச் செலவுக்கு அனுப்பிய கொஞ்சக் காசு பவுத்திரமாக முடிந்து வைக்கப்பட்டிருந்தது.

சிந்தாமணி ஊருக்குள் வந்த செய்தி சூசை மூலமாக ஊருக்குள் பரவிவிட ஒரு அரை மணித்தியாலத்துக்குள்ளாகவே சிந்தாமணியைத் தேடி ஆட்கள் வந்து சுகம் விசாரிக்கத் தொடங்கினர். சிந்தாமணியை வாட்ட சாட்டமான, ஒரு கம்பீரமான பெண்ணாய்ப் பார்த்திருந்த சனங்கள் இப்பொழுது அவளின் உருக்குலைவைப் பார்த்து வருத்தமாகப் பேசினார்கள்.

இந்த வேலணை ஆறாம் வட்டாரத்தில் வெள்ளாளர், கோவியர், முக்கியர், பள்ளர், நளவர் என்று சனங்களைப் பிரித்து நிலங்களையும் பிரித்தும், ஒதுக்கியும், எட்டவும் வைச்சிருந்தாலும் நளவர், பள்ளர் குடியிருப்புக்களை தண்ணீர் இல்லாத உப்பு நிலங்களுக்குள்ளே ஒதுக்கி விட்டிருந்தார்கள். அநேகமாக எல்லா நல்ல தண்ணீர்க் காணிகளும் வெள்ளாளர்களிடமே இருந்தன. ஒன்று பாதி கோவியர் களிடமும் விவசாயக் காணிகளும் நல்ல தண்ணீர்க் கிணறுகளும் இருக்கின்றன. மற்றவர்கள் குளிப்பதற்குக் கூட இரண்டு மைல் தூரம் நடக்க வேண்டும். வீட்டுக் கிணறுகள் குண்டி கழுவ மட்டுமே உதவும். மாரிக் காலங்களில் மட்டும் கிணற்றுக்குள் நிறைந்திருக்கும் மழைநீர் வற்றும்வரை குளிக்கலாம்.

சிந்தாமணி இளம் வயதாய் இருக்கையில் ஓடி ஓடி நல்ல தண்ணீர் அள்ளி வருவதிலேயே அவள் காலத்தின் பெரும்பகுதி போனது. அப்பொழுதெல்லாம் சிந்தா மணி பம்பரம்தான். அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு இவற்றில் எதுவும் அறியாதவள். ஆண்களுக்குக்கூட அவளிடம் வாய் கொடுக்கப் பயம். இன சனத்துக்குள் ஏதாவது சண்டை சச்சரவு தொடங்கினால் நியாயம் கேட்க முன்னுக்கு நிற்பவள் சிந்தாமணிதான். அவள் கழுத்து நரம்புகள் புடைக்க கத்திப்பேசும்போது ஆண்களின் குரல்கூட அந்தப் "பேரோசை"யில் அமிழ்ந்து விடும். சற்றேனும் ஏறுமாறாக எவரும் அவளின் அபிப்பிராயங்களோடு முண்டினால் அவள் வலு சரளமாக வீசும் தூசண வார்த்தைகளால் எதிராளியைத் தோல்வியடையச் செய்வாள். அறமிஞ்சினால் அடிக்கவும் தயங்க மாட்டாள்.

2

மதியம் இரண்டு மணியாகிவிட்டது. காலை ஒன்பது மணிக்கு வந்து மாப்பிள்ளைக்கு, மாப்பிள்ளைத் தோழன் பால் ஊற்றி, முழுக்காட்டி பெண் வீட்டுக்கு அழைத்துச் சென்றிருக்க வேண்டும். பெண் வீட்டில் இருந்து இதுவரை யாரும் வர வில்லை. மாப்பிள்ளை அதிகாலையில் இருந்து தயாராகிப் பெண் வீட்டார் வருகைக் காகக் காத்திருந்து களைத்து விட்டான். அவனின் முகத்தில் ஏமாற்றமும் கோபமும் கவலையும் மண்டிக்கிடந்தது. உறவினர்கள் மூலைக்கு மூலை நின்று என்ன செய்வ தென்று அறியாமல் குழம்பிக் கொண்டிருந்தனர். மாப்பிள்ளையின் தகப்பனோ "எங்கள மரியாதை கெடுத்திப் போட்டாங்கள். இனிச் சும்மாவிட ஏலாது. ஒரு காரைப் பிடிச்சுக் கொண்டு இணுவிலுக்குப் போய் அவங்கள் நாலு கேள்வி கேட்டு விழுத்திப் போட்டு மிதிக்காட்டி என்ர மனமும் கேளாது, நான் கணவதியின்ர மேனும் இல்ல..." என்று வீர முழக்கமிட்டுத் துள்ளினார். கொஞ்சப் பேர் "அதுதான் சரியான வழி, நாங்களும் வாறம்" என்று உசார் கூட்ட, "அது சரியில்ல அங்க என்ன பிரச்சினையோ தெரியா, போய்க் கதைப்பம்..." என்று கொஞ்சப் பேர். சொல்ல, பெண்கள் கூட்டம் மூலைக்கு மூலை சிணுங்கி கதைத்து நிற்க இவைகளையெல்லாம் அந்தச் சிந்தாமணி சற்றுத் தூரத்தில் இருந்து அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்துவிட்டு இப்பொழுது எழுந்தாள்.

"என்ன ஆம்பிளயள் நீங்க, புள்ள குடுக்கிறதத் தவிர வேற ஒரு பூளலும் உங்களுக்கு விளங்காதா?" என்ற கேள்வியுடன் தொடங்கி, மாப்பிள்ளையைப் பார்த்து "டேய் தம்பி நீ வெளிக்கிடு, பொம்புளைக்கு குடுக்கிற சீலையும் கொண்டு வா, வாற ஆக்கள் வாங்கோ" என்று முடித்து மாப்பிள்ளையையும் காரில் ஏற்றிக் கொண்டு புறப்பட்டாள். அந்த இரண்டு வாடகைக் கார்களும் இணுவிலுக்குப் போயின.

அங்கும் சிறு தறப்பாள் பந்தல் போடப்பட்டிருந்தது. எல்லாமாக சிறுவர்கள யும் பெரியவர்களையும் கூட்டிப் பார்த்தால் அங்கு பத்துப் பேர்கூட இருக்க மாட்டார்கள். வந்த இனசனங்களைக் கல்யாணம் நடக்காது எனச் சொல்லி திருப்பி அனுப்பி விட்டனராம். அந்த வீடு கல்யாணக்களை இழந்து செத்த வீட்டுக் கோலம் கொண்டு கிடந்தது.

மாப்பிள்ளை வீட்டார் கார்களை விட்டு இறங்கினர். சிந்தாமணி உறுதியாகச் சொன்னாள், "ஒருத்தரும் தேவையில்லாமலுக்குக் கதைக்கக் கூடாது." விறுவிறுவென வீட்டுக்குள் உள்ளிட்டாள். தலை குனிந்தே செல்ல வேண்டிய வாசல் கொண்ட அந்தச் சிறிய வீட்டின் ஒரு மூலையில் கல்யாணப் பெண் சுருண்டு படுத்துக் கிடந்தாள். உள்ளே வந்த சிந்தாமணி "எடி பொட்ட, உனக்கு இந்தக் கலியாணத்தில விருப்பம்தானே?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று நேரடியாக விசயத்துக்கு வந்தாள். அவள் "ஓமெ"னத் தலையசைத்தாள். "எங்கயடி ஆத்த உன்ர கொப்பன்?" என்று சிந்தாமணி அடுத்த கேள்வியைக் கேட்டாள். பெண்ணின் தகப்பன் தலையைக் குனிந்தபடிக்கு பதுங்கிப் பதுங்கி வந்தார்.

"நீயெல்லாம் ஒரு மனிசனாடா? உனக்கொரு மீசை, ஒரு வேட்டி, த்தூநாயே..." என்று ஆரம்பித்து அய்ந்து நிமிடங்கள் சிந்தாமணி பேசி ஓய கல்யாணப் பெண்ணின் சிறிய தகப்பன் "சிந்தாமணி ஒரு பிழை நடந்து போச்சு, கலியாணத்துக்கு தாற காசு அய்யாயிரத்தையும் ஓராள் கடனாத் தாறன் எண்டு சொன்னது. நாங்களும் காசு வரும் வருமெண்டு மத்தியானம் வரைக்கும் பார்த்துக் கொண்டிருந்தம். கடைசியில ஆள் கையை விரிச்சிப் போட்டுது." என்று தலையைச் சொறிந்தார்.

"அப்பிடியெண்டால் மாப்பிள்ளை வீட்டை வந்து உண்மையைச் சொல்ல வேண்டியதுதானே..."

"நாங்களும் அப்பிடித்தான் யோசிச்சனாங்கள். ஆனால் புறோக்கர் காசில்லாட்டால் தான் வரமாட்டன் எண்டு போட்டு கோவிச்சுக் கொண்டு போயிட்டார்... நாங்களும் பயத்தில..."

சிந்தாமணி கையால் முகத்தைத் தேய்த்தாள். பின் மாப்பிள்ளையைப் பார்த்து "டேய் தம்பி, பொம்பிளையிட்ட கொண்டு வந்த சீலையைக் குடு. எடி பிள்ள நீ "டக்"கெண்டு சீலையை கட்டிக் கொண்டு வா" என்றாள்.

மாப்பிள்ளையின் தகப்பன் நைசாக சிந்தாமணியை ஒரு மூலைக்குள் தள்ளிக் கொண்டு போனார். "சிந்தாமணி உனக்கென்ன விசரே? இந்தக் காசை நம்பித்தான் கலியாண அலுவலுக்கு கடன் வாங்கி செலவழிச்சனான். கடைக்காரனுக்கு விடிஞ்சால் காசு எண்ணி வைக்கவேணும்" என்று இரகசியம் பேசினார்.

"அண்ண கலியாணத்தை முடிப்பம். வாற பிரச்சினையை அதுக்குப் பிறகு யோசிப்பம்."

எல்லாக் காரியங்களும் முடிந்து கல்யாணப் பெண்ணை வேலணைக்கும் அழைத்து வந்தாகி விட்டது. எண்ணி ஆறே மாதத்தில் வெள்ளாளரின் தோட்டக் கிணற்றில் புதுப்பெண் திருட்டுத் தனமாய் தண்ணீர் அள்ளினாள் என்று சொல்லி பொலிஸில் விதானையால் பிடித்துக் கொடுக்கப்பட்டாள். சிந்தாமணிதான் பொலிஸ் நிலையத்துக்குப் போய் லஞ்சம் கொடுத்துப் புதுப் பெண்ணை விடுவித்தாள். அத்தோடு உடனடியாகக் "கள்ள அருணாசல"னைக் கொண்டு விதானைக்குச் செய்வினை செய்வித்து இரவோடு இரவாய்ப் போய் விதானையின் முற்றத்தில் செய்வினைத் தகட்டைப் புதைத்தாள்.

*3*

அந்தத் துணிந்த கட்டையும், கையாடி வாயாடியுமான சிந்தாமணி இப்போது எலும்பும் தோலுமாய், ஒரு போக்காய் பேசுவதைக் கண்டு சனங்களுக்குக் கவலை. சிந்தாமணியின் தகப்பனுக்கு முதுசொமாக பறையன் தோட்டம் என்ற பெயரில் எட்டரைப் பரப்புக் காணியும், அம்பட்டன் கூடல் என்ற பெயரில் பதினொரு பரப்புக் காணியும் இருந்தது. அவரின் இனசனங்களுக்குள் இவ்வளவு பெரிய சொத்தை வைத்திருந்தது அவர் மட்டும்தான். சிந்தாமணிக்கு நல்ல மாப்பிள்ளையாக, அதுவும் கள்ளுச் சீவாத மாப்பிள்ளையாகத் தேட வேண்டும் என்று ஆசைப்பட்ட சிந்தாமணியின் தகப்பன் சபாபதி ஆனைக் கோட்டையில் "டக்ஸி" ஓடும் ஒரு மாப்பிள்ளையைப் பிடித்துப் பறையன் தோட்டக்காணி எட்டரைப் பரப்பையும் சீதனமாகக் கொடுத்து கல்யாணம் செய்து வைத்தார். அம்பட்டன் கூடல் காணி இரண்டாகப் பிரிக்கப்பட்டு மற்றைய இரு பெண்களுக்கும் கொடுக்கப்பட்டது.

சிந்தாமணியின் புருசன் முதலில் கொஞ்ச நாட்கள் நல்ல மாதிரி இருந்தான். பின் "தண்ணியில்லாத இந்த வேலணைக் காட்டுக்குள்ள மனுசன் இருப்பானா? நீயும் யாழ்ப்பாணம் வா" என்றான். அவனுக்கு சீதனமாகக் கொடுத்த காணியை விற்று ஆனைக் கோட்டையில் காணி வாங்க சிந்தாமணி சம்மதித்தாள். அவனோ காணி வாங்குகிறேன்... காணி வாங்குகிறேன் என்று சொல்லிச் சொல்லியே காணி விற்ற காசு எல்லாவற்றையும் செலவழித்துத் தொலைத்து விட்டு "நீ கொண்டு வந்த சீதனம் போதாதடி" என்று நாளும் பொழுதும் நச்சரிக்க ஆரம்பித்தான். ஒரு நாள் "தண்ணியில்லாக் காட்டுக்குள்ள என்னைக் கொண்டு வந்து அமத்திற்றாய்" என்று சிந்தாமணியின் தகப்பனின் கழுத்தைப் பிடித்தான். அன்று கையில் விளக்குமாறை சிந்தாமணி எடுத்தாள். அதோடு அவளின் கல்யாண வாழ்க்கை முடிந்தது. புருசன்காரனுக்கு விழுந்த அடியின் வேகத்தைப் பார்த்து ஊரே திகைத்து நின்றது.

அந்தச் சிந்தாமணிக்கு இப்பொழுதெல்லாம் தளும்பாமல் நடக்கவே முடியவில்லை. மூளை இயங்க மாட்டேன் என்று மறுக்குமாப் போல் அவள் தடுமாறினாள். மெல்ல மெல்ல சூசையையும் உதவிக்கு வைத்துக்கொண்டு கூட்டிக் குவித்து வீட்டை ஒருவாறு துப்புரவு செய்து முடித்தாள். அதற்கே ஒரு கிழமையானது. அயலட்டம் இந்த ஒருவாரமாய் அவளுக்கு சாப்பாடு போட்டது. அரிசி, உப்பு, தண்ணி உடனடித் தேவைகள்.

தங்கச்சிமாருக்கு கொடுத்த சீதனக் காணியை இவளையே பராமரிக்கச் சொல்லிச் சொல்லியிருந்தார்கள். காணியில் உள்ள நூற்று முப்பது பனைகளில் ஓலைகளை வெட்டினால் நான்காயிரம் ஓலைகள் வரும். பதினொரு கள்ளுப் பனைகள் நிற்கின்றன. அவைகளைச் சீவலுக்கு விடலாம். பனங்காய், பனாட்டு, கிழங்கு, ஒடியல், ஊமல் இவைகளையும் விற்கலாம். எப்படியும் தன்னுடைய சீவியத்தை கொண்டோடி விடலாம் எனச் சிந்தாமணி நினைத்துக் கொண்டாள்.

அனல் தகித்தது. தண்ணீர் எடுப்பதற்குச் சிந்தாமணி புறப்பட்டாள். ஒழுங்கையின் முடிவில் ஆரம்பமாகும் வெள்ளாளர் குடியிருப்பில், விசாலம் வீட்டில் நல்ல தண்ணீர்க் கிணறு உண்டு. மெல்ல மெல்லப் பானையோடு ஒழுங்கையில் சிந்தாமணி நடக்க அவளை உரசுவது போல் ஒரு வாகனம் ஒழுங்கையால் விரைந்தது. இயக்கப் பொடியள் என்று சிந்தாமணி அனுமானித்துக் கொண்டாள்.

**(தொடர்ச்சி 36 ஆம் பக்கத்தில்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைராக்கியம்

## மு.அநாதரட்சகன்

அந்த மில்லக்கந்த தோட்டத்து மக்களுக்கு என்றும் அருள்பாலித்துக் கொண்டிருப்பது மாரியம்மன் கோவில் ஒன்றுதான்

அதன் வடக்கு வீதியைத் தாண்டி எதிரேயுள்ள புல்லு மலையைச் சுற்றி நடந்து நிரை நிரையாக அணி வகுத்தபடி வானுயர நிற்கும் றப்பர் மரக்காட்டைக் கடந்து வலது பக்கம் திரும்பினால் பெரிய வாய்க்கால் ஒன்று கிழக்கு மேற்காக நீண்டு வளைந்து ஓடிக் கொண்டிருந்தது.

அதுவும் மழைக்காலம் வந்து விட்டால் வாய்க்காலில் நீர் நிரம்பி முட்டி மோதி சலசலவென ஒலியெழுப்பி ஓடிக் கொண்டிருக்கும்.

தோட்டத்து நிர்வாகம் பொருத்திக் கொடுத்த குழாய்கள் சில மாதங்களாகப் பழுதானதால் அந்தத் தோட்ட டிவிசனைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு குடிக்க, குளிக்க, கழுவ எனப் பல தேவைகளுக்கும் இந்த வாய்க்கால் தான் இன்று வரை கை கொடுத்து நிற்கிறது.

மாலையாகி விட்டால், றப்பர் காட்டில் வேலை முடித்து ஆண், பெண், இளசு, சிறிசு என்ற பேதமில்லாமல் வந்து இங்கே தான் கூடுவார்கள்.

ஆண்களில் சிலர் அவசர அவசரமாக குளித்துக் கொண்டிருந்தார்கள். இளம் பெண்களோவெனில, வேகமாக நீரை அள்ளிக் கொண்டு நிமிர்வதும், மீண்டும் குனிவதும் உடலில் நீரைக் கொட்டுவதுமாக இருந்தார்கள். அப்படி அவர்கள் குனிந்து நிமிரும் போது உடலின் அங்கங்கள் முழுவதும் ஆடிக்குலுங்குவதை பார்த்து ரசிப்பது இளவட்டங்களுக்கு ஓர் அலாதியான காட்சி.

வழமை போல, இவற்றை எல்லாம் வாய்க்கால் கரை மேட்டில் புல் தரையில் இருந்த படி இளவட்டங்கள் சிலர் மனதில் எதையோ சுமந்து சுகித்தபடி பார்த்துத் தவமிருந்தார்கள்.

அந்த மனம் மயங்கும் மாலைப் பொழுதில் இலேசான இருள் மூட்டத்தையும் ஊடறுத்து பெண்கள் கூட்டத்திற்கிடையே யாரையோ குறி வைத்துத் தேடும் முயற்சியில் பல கோணங்களில் தன் பார்வையை வீசிச் சலிப்படைந்தான் குமார்

கூட்டத்தில் அவளை மட்டும் காணவில்லை. அவளையொத்தவர்கள் அவளின் தோழிகள் எனப் பலரிருந்தும் அவளை மட்டும் காணக் கிடைக்கவில்லை.

பல திசைகளிலும் சுழன்று தேடித் தேடி சோர்வடைந்த அவன் கண்களில் நீர முட்டியது. மனதில் இருள் சூழ்ந்தது.

தனக்குப் பக்கவாட்டில் திரும்பி சற்று தூரத்தில் பார்வையை எறிந்தான். சிறுது தூரத்தில் அவளின் குவாட்டசுக்கு நேரே எதிரிலுள்ள லயத்தில் குடியிருக்கும் நல்லான் புற்றரையில் உட்கார்ந்த படி பெண்கள் கூட்டத்தில் கண்களை மேய விட்டு இலயித்திருந்தான்.

"என்ன நல்லான் அண்ணே..." என்று அழைத்தவாறு நெருங்கி வந்து அவன் தோளில் கை வைத்தான்.

"யாரது... அட தம்பியா!... குமாரு... எப்படி?" என்று பீடிகையுடன் பார்த்தான் நல்லான்.

"ஆமா... அண்ணே நானும் பார்க்கிறேன்... நம்ம ஆளையே காணோமே... எங்க போயிருப்பா" குமாரின் குரலில் ஒரு ஆவல் குடி கொண்டது.

ஆ... நம்ம கங்காணி மக கலாவைப் பத்திக் கேட்டுக்கிறியா...? ஒனக்கு விசயமே தெரியாதா...? என்று சாவகாசமாக ஒரு கேள்வியைப் போட்டு விட்டு, நல்லான் மறுபடியும் அவன்பாட்டில் திரும்பி பெண்களை நோட்டம் விட்டான்.

"என்னாண்ணே இம்மாப் பெரியபோடு போடுறியே, எனக்கு ஒண்ணும் புரியலையே... என்ன நடந்திச்சு" என அங்கலாய்த்தான்.

"அவங்க வீட்டிலே அண்ணைக்குப் பகல் ஒரே களேபரம் தம்பி! நீ செஞ்சிட்ட வேலையாலை கங்காணியாரு அவளை செமத்தியா உதைச்சாரு இனிமே வூட்டை விட்டு வெளியே தலைகாட்டக் கூடாது என்று கண்டிச்சாரு தம்பி".

"என்னாண்ணே விசயம் அப்படியா போச்சு" என்றான்.

"ஆமா... கலாவை கொழும்புக்கு கூட்டிக்கிட்டுப் போயி, அவரு அக்கா மவனுக்கு பரிசம் போடப்போறதா கதைச்சாரு. அவளை அவனுக்கே கட்டிக் கொடுக்க முடிவு செஞ்சிட்டாரு.

இன்னைக்குக் கூட அது வேலையாத்தான் கொழும்புக்கு போயிட்டாரு" என்று தனக்குத் தெரிந்தவற்றை எல்லாம் கூறினான் நல்லான்.

தோட்டத்திலிருந்து கலா மில்லகந்த பாடசாலைக்குப் போவதற்கும், திரும்பி வருவதற்கும் உள்ள ஒரே பாதை மாரியம்மன் கோயிலைச் சுற்றி நீண்டு சென்று பிரதான பாதையைத் தொடும் பாதை தான்.

அதன் வழியே போவதென்றால் குமார் வேலை செய்யும் அந்த றப்பர் காட்டைத் தாண்டித்தான் போக வேண்டும். மழை காலத்தில் றப்பர் காட்டில் அட்டைகளோ அதிகம்.

கால்களைத் தேடித் தவமிருந்து றப்பர் பால் போல ஒட்டிக் கொண்டு இழுபடும். ஒரு தடவை கலா அவ்வழியில் நடந்து வர கால்களில் அட்டைகள் ஒட்டிக் கொள்ள அவளுக்கு உதவி செய்யப் போய், ஏற்பட்ட பழக்கமே இருவருக்கும்... நாளடைவில் நிக்கிய சந்திப்புகளாகி இருவரது மனங்களும் ஒட்டிக் கொண்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விசயம் அவளின் தகப்பன் கங்காணி இராமையாதேவரின் காதிலும் எட்டி விடுமளவுக்கு வளர்ந்து தோட்டம் பூராவும் பரவி விட்டது.

இதன் விளைவு, கங்காணியார் மகளின் படிப்பை நிறுத்தி தனது அக்காவின் தாரமிழந்த மகனுக்கு இரண்டாம் தாரமாக உறவு முறையில் திருமணம் செய்து வைக்க ஏற்பாடுகளில் மும்முரமாக இறங்கி விட்டார்.

"பார்வதி கலா என்ன பண்ணுறா தூங்கி விட்டாளா பாரு" காலையில் கொழும்புக்கு வேலையள் அலுவலாகப் போய் விட்டுத் திரும்பி வந்த கங்காணி ராமையாதேவர், தோளில் கிடந்த துண்டினால் முகத்தை நன்றாக அழுத்தி துடைத்துக் கொண்டே மனைவியிடம் வினவினார்.

"அவ எப்பவோ தூங்கிட்டா... வயதுக்கு வந்த பொண்ணு எப்படி எப்படியோ காத்து, வைச்சம் பாவிமகள் என்னமோ மனம் கெட்டுப் போய் நிக்கிறா..." நீண்ட பெருமூச்சொன்றுடன் கணவனின் அருகே வந்து உட்கார்ந்தாள் பார்வதி.

"ஆமா... நீங்க போன விசயம் என்னாச்சு, கொஞ்சம் வெவரமாச் சொல்லுங்க"

"நான் என்னத்தைச் சொல்ல! நம்ம குடும்பத்தில் சம்பந்தம் வைச்சிருக்க அவங்க எல்லாம் புரியமாத்தான் இருக்காங்க." ஆர்வத்துடன் கூறினார் கங்காணி இராமையா தேவர்

"நம்ம கலாவைப் பாக்கிறப்போ மனது துடிக்குதுங்க, அவ மனசுக்கு விரோதமா நாங்க பண்ணிற காரியத்தைப் பாத்தா பயமா இருக்குதுங்க"

மகளின் மன உணர்வுகளைப் புரிந்து கொண்டவளாகப் பார்வதி கணவரிடம் பேசினாள்.

"நீ என்னா கவலைப்படுறே! நாம் என்ன அவளை பாழுங்கெணத்திலயா தள்ளப் போறம். ஏதோ அவ பாவம் இப்படியாப் போச்சு"

வெளியே தொழிற்சாலையிலிருந்து ஒலிக்கும் இயந்திரங்களின் பேரிரைச்சலுடன் அஞ்சலையின் மனமும் இரைந்து கொண்டிருக்க, அறையில் தூக்கம் வராமல் பாயில் புரண்டு கொண்டிருந்தாள் கலா.

வெளியே அப்பாவும், அம்மாவும் தன்னைப் பற்றி பேசுவது தெளிவாகக் கேட்டது. அவற்றையெல்லாம் அவள் படுத்தபடியே விழித்தபடி உள்வாங்கிக் கெண்டாள்.

மாப்பிள்ளைக்கு கொழும்பில சொந்தமா ஒரு பெட்டிக் கடையாம். வசதியான சொந்த வீடு, வயல் நிலம் எல்லாமே இருக்கு அவன் பாவம் கல்யாணமான முதலாவது வருசத்தில பெண்டாட்டி இறந்துட்டா. இவ்வளவுக்கும் அவனுக்கு வயசா போச்சு இல்லையெண்ணாலும் நாப்பதுக்கு மேலை போவாது பார்வதி

"எனக்கு என்னமோ இதுல மனது சரிப்படல, என்ர பிஞ்சுமவள ரெண்டாந்தாரமாக கொடுக்க ஏத்துக்கலை"

அறைக்குள் படுத்திருந்த கலாவின் காதில்விழ பொறிதட்டிப் போனவள் போலத் துணுக்குற்றாள்.

"அப்படியானால் குமாரைப் பிரிந்து அந்த ஊரை வீட்டு ஒரே அடியாகப் போகத்தான் வேண்டுமா அதுவும் அம்மா சொன்னது மாதிரி ஒரு தாரமிழந்த நடுவயதை எட்டி விட்டவனுக்கு இரண்டாம் தாரமாக வாழ்க்கைப்பட வேண்டுமா...? முடியாது. என்ன ஆனாலும் பரவாயில்லை. நான் உடன்பட மாட்டேன்" என அவள் உள் மனம் கறுவிக் கொண்டது.

அவள் நினைக்காமலே குமார் அவள் நெஞ்சுக்குள் வந்து நின்றான். அவன் தன்னுள் ஒன்றாகிக் கலந்து ஊடுருவப்பக்கத்தில் நிற்பது போன்ற பிரமை.

அப்பா, அம்மா பேசுவதை அவனும் தன்னுடனியிருந்து கேட்டுக் கொண்டு நிற்பது போலவும் தக்க சமயத்தில் தலையிட்டும் தன்னைக் காப்பாற்றுவான் என்ற எண்ணம் வளர்ந்து அசையாத நம்பிக்கையாக அவளிடம் உறுதி பெற்று விட்டது.

இதுவரைக்கும் குமார் அவளைத் தீண்டியதில்லை. ஒரு வித புரிந் துணர்வுடனேயே நடந்து கொண்டான்.

செல்வக்குமார் ஒரு தினுசானவன் தோட்டத்து விவகாரங்கள் எதிலும் முன்னிற்பவன் அதுவும் சக தொழிளார்களின் நலன்களுக்காக உரத்துக் குரல் கொடுப்பவன் தோட்ட கமிட்டியில் அங்கம் வகித்து அதன் செயற்பாடுகளில் ஈடுபடுபவன். தொழிலாளர்களை அநியாயங்களில் இருந்து மீட்பதும் ஆதரவு கொடுப்பதும் தட்டிக் கேட்பதும் அவனுக்கு ஒரு விசுவாசமான ஒரு தொண்டு.

தோட்டத்து துரையிலிருந்து கங்காணி வரை எல்லாருக்கும் அவன் "பரம எதிரி" இது ஒன்றே போதும் தோட்ட மக்களிடம் அவனது செல்வாக்கை அறிந்து கொள்வதற்கு

"ஏங்க அந்த குமாருப் பயல் தானே தோட்டத்துல எதுக்கும் முன் வார பயல், தோட்டத்து ஆளுங்களட்ட நல்ல மதிப்பு அவனுக்கு இருக்கு. கலாவுக்கு அவனையே கட்டிக் கொடுத்தா என்ன" என்று பொறுமையுடன் கேட்டாள் பார்வதி.

"என்ன...? அவனுக்கு பெண்ணைக் கொடுக்குறதா, அந்த கீழ்சாதிலயத்துப் பயலுக்கா... தோளுல கிடக்கிற துண்ட எடுத்து கையில வைச்சுக் கிட்டுப் பேசற கீழ்சாதிப் பயலுவளட்ட சம்பந்தம் வைச்சுக்கச் சொல்றியா நீ. என்னோட வம்சம் என்ன... பரம்பரை என்ன தெரியுமாடி ஒனக்கு" ஆவேசம் வந்தவராகக் கத்தினார் கங்காணி ராமையா தேவர்.

"இந்த இடத்துலசாதி, சமயமென்னு யாரு அதைப் பெரிசா பார்கிறா! இங்க நமக்கு நல்லது கெட்டது வந்தாக்கா யாரு வரப்போறா, ஊரிலேந்து ஒங்கட உறவுக்காரங்க ஓடியாந்திடுவாங்களா...?" என நிதானமாகக் கூறினாள் பார்வதி.

"தேவர் குலமடி நாங்க. எங்க இருந்தாலும் நம்ம பரம்பரைக்கு தனியிடமிருக்கு தெரிஞ்சுக்கோ...!" என்று குலப்பெருமை பேசினார்.

"இல்லைங்க... இத்தனை தலைமுறையா நாங்க அவுங்களோட தாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையா ஒண்ணாத்தான் வாழுறம். அந்த உறவாலதான் போன குழப்பத்திலை எங்களையும் கூட்டிப் போய் பாதுகாப்பான இடத்தில வைச்சு உயிரைக் காப்பாத்தி னாங்க. காடையங்க தோட்டத்த தேடி வந்து அடிச்ச நேரத்தில் குமாரு பய நமக்கு செய்த ஒதவியை மறக்கலாமா?"

பார்வதியின் பதிலைக் கங்காணியால் ஜீரணிக்கவே முடியவில்லை. அவருக்கு என்ன கூறுவதென்றே புரியவில்லை.

"இங்க பாரு நீ என்னா சொன்னாலும் எங்க ஜாதி உறவு முறை வேரறுந்து போகாம நிலைச்சிக்கணும், அதனாலதா என்ட அக்கா மவனுக்கு பொண்ணைக் கொடுக்கிறதா இருக்கேன்" என்றார் முடிவாக.

அதற்கு மேலும் அவர் பேச்சைக் கேட்க முடியாதவளாக, மனம் பொறுக்காமல் கலா எழுந்து பின்புறமாகக் கிணற்றுப் பக்கம் போனாள். கிணற்றுக் கட்டில் அமர்ந்து தனக்கு நேர்ந்து விட்ட கதியை எண்ணி குலுங்கிக் குலுங்கி அழுதாள்.

எவ்வளவு நேரம் போனது என்று தெரியாமல் அந்த இடத்திலேயே அமர்ந்திருந்தாள்.

தோளில் ஜில் என்ற ஸ்பரிசம் தந்த உணர்ச்சியில் திடுக்கிட்டவளாகப் பரபரப்புடன் எழுந்தாள். அருகில்... மிக அருகில் நின்ற அவனைக் கண்டு முகம் சிவக்க தலை குனிந்த படி அழுதாள்.

"கலா... ஏ.... என்ன இது...!" அவளின் மோவாய நிமிர்த்தி அவள் முகத்தை பார்த்தான் குமார்.

"அப்பா... என்னய... கொழும்புக்கு கூட்டிப் போயி... உங்களைப் பிரிஞ்சி வாழ..." நெஞ்சுக்கு வேதனை தரும் பாரச் சுமையை ஒரேயடியாக அவனிடம் கொட்டித் தீர்க்கும் பிரயத்தனத்தில் அவனது வாயிலிருந்து வார்த்தைகள் தொடர்பின்றி அரைகுறையாகப் பிரசவித்தன.

கீழிறங்கிய துணிந்த குரலில் பேசினான் குமார், "கலா அவங்க என்னா சொன்னாலும், நம்மளை இனிமேல் யாரும் பிரிக்க முடியாது நீ பயப்பீடாத மாரியம்மா தந்த ரெண்டு கையிருக்கும் வரை நான் உன்னை காப்பாத்துவன். நீ பயப்படாத நம்மளை இனிமே யாராலும் பிரிக்க முடியாது. மாரியம்மன் மேலை ஆணையாச் சொல்லுறேன்.

அன்று ஞாயிற்றுக் கிழமை பொழுது விடிந்து வெகு நேரமாகி விட்டது. வழமைக்கு மாறாக அந்த தோட்டத்து லயங்கள் இன்னும் உறக்கத்திலே ஆழ்ந்திருந்தன.

அதிகாலையில் வேளைக்கு கண் விழித்து கிடைத்ததை வயிற்றில் போட்டு விட்டு சுறுசுறுப்புடன் பெரட்டுக் களத்தை நோக்கி நடப்பவர்கள் அந்தத் தோட்டத்து மக்கள்.

காலையில் ஐந்து மணிக்கு கேட்கும் மாரியம்மன் கோவில் மணியோசையுடன் நித்திரையிலிருந்து கண் விழித்துக் கொண்ட கங்காணி இராமையாதேவர். கண்களைக் கசக்கிய படி, எதிரே சுவரில் தொங்கிக் கலண்டரை உற்று நோகினார். மகளின் திருமணத்திற்கு இன்னும் ஓரிரு நாட்களே இருந்தன.

மகள் கலாவின் கலியாணம் பற்றிய சிந்தனையில் ஆழ்ந்து விட்டவர் மாப்பிள்ளைக்குத் தேவையான உடுப்புக்கள், மற்றும் வாங்க வேண்டிய சாமான்களை நினைவு படுத்தி அவற்றை இன்றே கொழும்புக்குப் போய் வாங்கி வர வேண்டும்.

மேலும் இந்த விசயம் குறித்து சம்பந்தியான அக்காவுடன் போனில் கதைக்க வேண்டும் என்பதையும் ஞாபகப்படுத்தியவாறு மீண்டும் சிந்தனையில் மூழ்கி விட்டார்.

"என்னா... இந்த அநியாயத்தைப் பாத்தீங்களா?" எனப் பதறியடித்தபடி கணவனிடம் ஓடி வந்தாள் பார்வதி.

"என்னாடி... பெரிசாச் சத்தம் போடறே. என்ன நடந்திச்சு" பரபரப்புடன் எழுந்தார்.

"கலாவைப் படுக்கையிலை காணேலிங்க! அவபடுத்த பாயிலை இந்தக் கடதாசி கிடந்திச்சு" என்றாள்.

மனைவியின் கையிலிருந்த கடதாசியைப் பறித்து வாசித்தார்.

அன்புடன் அப்பா, அம்மாவுக்கு,

இந்தத் தோட்டத்திலேயே பிறந்து வளர்ந்த என்னை கண்காணாத இடத்திலை கொண்டு போய் தள்ளப் பார்த்தீர்கள். குலப் பெருமை பேசி என்னைக் கிணற்றில் விழுத்தப் பார்த்தீர்கள். நான் எனது மனசுக்குப் பிடித்தவருடன் வாழ முடிவு செய்து விட்டேன். தயவு செய்து என் வாழ்வில் குறுக்கிட வேண்டாம்.

இப்படிக்கு

அன்பான மகள் கலா

மிகச் சுருக்கமாக உணர்ச்சிகளை வெளிப்படுத்தி எழுதியிருந்தாள்.

"ஐயோ.. பாவிமகள் என்னபை பிரிஞ்சு போக எப்படி மனம் வந்ததோ, போயிட்டாளே..." என்று அரற்றினாள் பார்வதி.

"என்ன காரியம் செஞ்சிடிச்சு... கூறுகெட்ட கழுதெ. நாம இந்த அவமானத்தை தாங்கிக்கிட்டு இங்க வாழக் கூடாது. அவள் கண் காணாத இடத்துல போயி வாழுவம்."

கங்காணி ராமையாதேவரின் வாயிலிருந்து வெளியேறிய வார்த்தைகள் சாதிக் கௌரவத்தை கட்டிக் காக்க எடுத்த பிரதிக்னையா? அல்லது மகளை ஒரேயடியாக முழுகி விட்ட மன வைராக்கியமா?

இல்லை.........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அகதி அந்தஸ்து

இ.இராஜேஸ்கண்ணன்

கிடுகு இடுக்கின் வழியே "கண்ணாடி - லாம்பின்" வெளிச்சத்தில் சாரதாவின் முகம் துலாம்பரமாக தெரிந்தது. முகத்தில் அப்பிப்போய் இருந்த யோசனையின் ரேகைகள் கூட தெளிவாகத் தெரிந்தன.

முற்றமெல்லாம் முழுதாய் பால்வார்க்கும் நிலாவொளியில் இல்லாத அர்த்தக் கிடக்கைகள் கிடுகிடுக்கின் வழியான அந்தப் பொட்டொளியில் பொதிந்திருந்தது.

"கொட்டகைக்கு" வெளியே, நிர்ச்சலனமாய் விரிந்து கிடக்கும் வானத்தை வெறித்துப் பார்த்தபடி யோசனையில் அமிழ்ந்திருந்த தியாகலிங்கத்துக்கு மனைவி சாரதாவின் கண்களிலிருந்து துளித்த இருசொட்டுகளும் இதயத்தின் சுவரில் எரிகுழம்பாகவே விழுந்தன

வீட்டை விட்டு "வெளிக்கிட்டு" ஒரு வருடத்துக்கு மேலாகிவிட்ட போதிலும் வாழ்க்கை இயல்புக்குத் திரும்பவில்லை என்பதற்கு அந்தக் கொட்டகையே சாட்சி கூறுகின்றது.

"அகதி" என்ற பெயரைவிட "இடம்பெயர்ந்தவர்" என்ற பெயர் ஓரளவு கௌரவமாகிவிட்ட போதிலும், அடையாளங்கள் மட்டும் அப்படியே மாறாதிருந்து கதியறுந்த நிலையை பிரதிபலித்து நிற்கின்றன.

இரண்டு பெண்பிள்ளைகளும் தாயுமாக கால்நீட்டிப்படுக்க இயலாத கிடுகு கொட்டகை வீட்டினுள்; தியாகலிங்கத்தின் அந்த சைக்கிளுக்கும், "நாயனத்துக்கும்" தனிச்சிம்மாசனம்.

பெரியவள் விடவேமாட்டாள். வாரத்தில் மூன்று நாள்கள் கிடுகு கொட்டகை மெழுகி புனிதமாக்கப்படும். "நாயனம்" வைப்பதற்கென தனியான ஒரு சிறுதிண்ணை. அதன்மேல் அளந்து இழைக்கப்பட்ட தடுக்கிலும் சிறிய பனையோலைப்பாய். அதன் மேல் மடித்துப் போடப்பட்ட கம்பளித்துணி. அதன்மீது "நாயனத்தின்" கம்பீரமான நிலை. அதனருகே நாள்தோறும் "ரயர்கள்" கழுவப்பட்டு துடைத்து ஏற்றி விடப்படும் அந்த "சைக்கிள்".

இரண்டு பிள்ளைகளையும் மனைவியையும் தவிர தியாகரிடம் இப்போதுள்ள விலைகூடிய சொத்துகள் அந்த நாதஸ்வரமும் சைக்கிளும் தான்.

தியாகலிங்கத்தை எல்லோரும் "தியாகர்" என்றுதான் அழைப்பார்கள். "தில்லானாத் தியாகர்" என்றொரு பட்டப்பெயரும் தியாகருக்கு உள்ளதை எல்லோரும் அறிவார்கள். தில்லானா மோகனாம்பாள் படத்திலே வந்த சிவாஜிகணேஷனின் நெளிவும் சுழிவுகள், பாவனைகளோடு நாதஸ்வரம் வாசிப்பது மட்டுமன்றி தில்லானா மோகனாம்பாள் படப்பாடல்களை ஒருவித பிசிறுமின்றி அப்படியே வாசித்தும் ரசிகர்களின் மனங்களைக் கொள்ளை கொண்டதனால் தான் இந்தப் பட்டப்பெயர்.

ஒரு காலத்தில் தியாகர் என்றால் சிறுபிள்ளைகள் கூட அவரை அறிந்திருந்தனர். கோயில் விழாக்கள், திருமணங்கள், மேடை நிகழ்ச்சிகள் எல்லாவற்றிலும் தியாகலிங்கத்தின் "குழல்" தான். தியாகரின் சுபபந்துவராளி, நாகபராளிகளுக்கு தலையசைக்க அவர் வாசிக்கும் இடங்களிலெல்லாம் பெரிய கூட்டமே இருக்கும். கீர்த்தனைகள், ஆலாபனைகள் முடிந்து அவர் வாசிக்கும் பழைய சினிமாப்பாடல் கேட்க முண்டியடிக்கும் இளம் ரசிகர்கள் ஒரு வகை.

"தியாகரை கலை ஞானத்துக்கு அவன் மட்டும் ஒரு நட்டுவனாயிருந்தால் அவன்ரை நாயனந்தான் நாடெல்லாம் கேட்கும்." என்று தியாகரின் குருவான "குழல்காரத் தங்கமணி" அடிக்கடி கூறிப் பெருமை கொள்வார்.

கலையின் மீது தியாகரிற்கு உள்ள நாட்டம் தனது வருவாயிலோ, வாழ்க்கையில் உயர்விலோ இருக்கவில்லை. நாதஸ்வரத்தை தொட்டு நாற்பது வருடங்களாகியும் பெரிதாக ஒன்றும் தன் பிள்ளைகளின் எதிர்காலத்திற்கு அவர் சேர்த்து வைக்கவில்லை.

நாதஸ்வரக் காரன் என்றால் தொப்பூழை முட்டும் நான்கு வடம் சங்கிலி; வாய்நிறைய வாசனை வெற்றிலை; கையிலே தங்க வளையற் சங்கிலி; இடுப்பில் அகன்ற கறுத்தப்பட்டி; முன்னே மேற்கரையை தொங்க விழுத்தி உடுத்தியிருக்கும் வேட்டி; தோளில் முழங்கால்வரை தொங்கும் பட்டுச் சால்வை என்ற பிரதிமையில் எதுவுமே இல்லாத பிரதிமைதான் தியாகர்.

இப்போதெல்லாம் தியாகரின் "நாயனம்" குரலிழந்து கிடந்தது. சாதகம் செய்யக் கூட தியாகர் அதனைத் தொடும் சந்தர்ப்பமே இல்லாது போய்விட்டது. அவரோடு ஒட்டியிருந்த தவில் வாத்தியக்காரர்களும் வேறு கூட்டுக்களையே விரும்புகின்றனர்.

அவர் நல்லாயிருந்த காலத்தில் செய்த கச்சேரிகளில் அவரின் இடதுகாலின் இலாவகமான அசைவினால் விடும் தாளத்தினையே கவனித்து தவில் வாசித்த கூட்டுக்கள் கூட இப்போது வேறு கூட்டுக்களோடு.

தியாகர் கையாலாகாத வெறும் கலைஞர் அல்ல. நல்லாயிருந்தவர்தான். எப்போது தியாகரின் மூத்த மகன் காணாமற் போனானோ அப்போதிருந்தே தியாகரின் நாதஸ்வரம் முகாரியைத் தவிர வேறு ராகம் வாசிக்க முடியாமல் மூச்சிழந்து கிடந்தது. சாடை "பூசிக்கொள்ளும்" வழக்கமும் தியாகரிடம் வந்துவிட்டது.

"நாயனக்காரன் அமங்கலமாகி விடக்கூடாது என்னெட்டை இருந்த மங்கலமெல்லாம் போச்சு. என்ரை ஒரே ஒரு ஆம்பிள்ளைப் பிள்ளையை கடவுள் பறிச்சுப் போட்டான். கோயில் சந்நிதானங்களில் மேடை ஏறி வாசிக்க எனக்கு மனம் வரவில்லை"

போன வருடங்களில் நடந்த எங்கள் ஊர் பிள்ளையார் கோயில் திருவிழாவில் "நாயனம்" வாசிக்க இப்படிச் சொல்லி மறுத்துவிட்டார் தியாகர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுவில்லில் இருந்து சென்று யாழ்ப்பாணத்தில் பிரபலமான பாடசாலை ஒன்றில் படித்த அவரது மூத்த மகன் மண்ணோடு எல்லாரும் இடம் பெயர்ந்து, மீண்டும் திரும்பி வந்து பாடசாலை சென்று வந்த சமயம் "தட்டாதெரு" சந்தியில் வைத்துப் பிடிக்கப்பட்டதாகவே எல்லோரும் பேசிக் கொண்டனர். ஐந்து வருடமாகியும் அவன் வரவில்லை. புதைகுழிகள் தோண்டப்பட்ட வேளையில் கூட தியாகர் போயிருந்தார். எதுவித பலனும் இல்லை"...

அந்த மகனின் இழப்போடு மனதை விட்டவர் தான். தன்னைத்தானே "அமங்கலம்" ஆக்கிக் கொண்டார்... இட மழை

இசைஞானம் தந்த வெகுமதிகள் எல்லாவற்றையும் தன் மகனது முன்னேற்றத்துக்கு முதலீடுகளாகவே தியாகர் தந்துவைத்தார்...

"என்ரை ரண்டு பொம்பிளை பிள்ளையளையும் நினைச்சுத்தான் இப்பவும் ஏதோ செய்யிறன். அதுகளும் இல்லாட்டி இந்தக் கட்டை எப்பவோ துலைஞ்சு போயிருக்கும்"

என்று தியாகர் சொல்வது இப்போதைய அவரின் இருப்பிற்கு அர்த்தம் கற்பிப்பதாகவே அமையும்.

நாதஸ்வரம் மௌனித்துவிடவுமே தியாகர் தனது தோட்ட நிலங்களில் தொலைந்து போயிருந்தார். துளை அழுத்திச் சுரம் சேர்த்த கைகள் "சோழியன்" மண் வெட்டியொடு சொந்தங் கொண்டாடியது பெணிபிள்ளைகளுக்காக உழைத்தார்.

தென்மராட்சியின் வாழ்வு வேரோடு சாய்ந்த வேளையில் தான் தியாகர் தன் குடும்பத்தோடு அந்த அகதிமுகாம் கொட்டகையுள் குறுகிப்போனார்.

தியாகருக்கு அந்தப் பகுதியிலே அறிமுகமானவர்கள் இருக்கத்தான் செய்தனர். ஆனால் அவர்களின் வீடுகளின் மேலதிக அறைகள் (அடிஷனல் றூம்ஸ்) "அல் ஷேஷ்யன்" வளர்ப்பு நாய்களோடு வருபவர்களைத்தான் அனுமதிக்கச் காத்திருந்தன. வயதான பெண்பிள்ளைகளோடு வந்ததால் முயற்சித்தார் முடியவில்லை. முகாம் தான் அவரின் குடும்பத்தை முழுதாக அனுமதித்தது.

இங்கெல்லாம் "அகதி முகாம்கள்" தான் "சமத்துவபுரங்களாகி" நிற்கின்றன. யாழ்ப்பாணத்தின் நிலவுடமைச் சமுதாய அந்தஸ்துகளை நிர்மூலமாக்கும் வல்லமைகள் சில அகதி முகாம்களுக்கு உள்ளதை தியார் உணர்ந்து கொண்டார்.

தியாகரின் குடும்பம் இருந்த அகதிகள் முகாம் கரவெட்டியின் கிழக்கே அந்த வயலோரக் கிராமத்தின் ஒரு குறிச்சியிலே இருந்தது. சில இடங்களில் அகதி முகாம்கள் அல்லோலகல்லோலப் பட்டவையாகவும் இருந்தன. கசிப்புக் காய்ச்சுதல், கடத்தல் பொருள் பதுக்குதல் தொடக்கம் கத்திக்குத்துவரை நடந்த முகாம்களிலிருந்து தியாகர் இருந்த முகாம் முற்றிலும் வேறுபட்டதுதான்.

இருந்தாலும் தனது பெண்பிள்ளைகள் சுதந்திரமாகப்படுத்துறங்க ஒரு இடம் பெற்றுத்தர முடியாது "சுதியிழந்த சுபபந்துவராளியாக" மாறிவிட்டதை எண்ணித் தன்னுள் கலங்கி நிற்பார்.

"என்ன செய்யிறதெடி ஆத்தை ஒரு மாதிரி சமாளிச்சுத்தான் போகவேணும். எல்லா இடமும் வீட்டிலை இருக்கிறதைப் போலை வசதிகள் வருமே. கொஞ்சம் "அட்ஜஸ் பண்ணிக் கொள்ளு"

தன் மனைவி சாராதா கூறும் அசௌகரியங்களை கேட்கும் போதெல்லாம் தியாகர் இதைத்தான் வாய்ப்பாடாகச் சொல்லி வைப்பார்.

சாரதா இப்போது கண்ணீர் விட்டதைப் போலத்தான் போன பொங்கல் நாளுக்கு முதனாளும் கண்ணீர் விட்டாள்.

"ஊரிலை எண்டால் எங்கடை வயலிலை வாற நெல்லரிசியிலை பொங்கல் பொங்குவம். தேங்காய், பால்பழம் எல்லாம் எங்கடை வீட்டான்தான். இங்கை எங்கை?... இஞ்சரப்பா... விடிஞ்சால் பொங்கல் ஒரு அரைக்கொத்து பச்சையரிசி போட்டாதல் பொங்கிறதுக்கு"....

"என்ன பேய்க்கதை கதைக்கிறாய் நீ"

சாரதா கூறியதை முடிக்கும் முன்னரே தியாகர் "மல்ரி பெரலாக" வெடித்தார். அவள் மௌனமானாள்.

"விசர் கதையள் பேசக் கூடாது... எனக்கென்ன ஆசையில்லையே... ஊரிலை எண்டால் பொங்கலென்ன பட்டிப் பொங்கலென்ன எல்லாம் செய்யலாம்... ஏதோ உன்ரை வீட்டு முத்தத்திலை பொங்கப் போறது மாதிரி வெளிக்கிடுறாய்... சரி அது தான் பறவாயில்லை காலமை காற்றுப்போன சைக்கிளை ஒட்ட வழியில்லாமல் நான் முழிசுறன் நீ கதைக்கிற கதையெண்டால்"...

முதுசொத்தை மட்டுமல்ல முற்றத்தையும் தொலைத்துவிட்ட கொதிப்பில் தியாகர் பொரிந்து தள்ளினார். இருப்புக்கள் தடுமாறியதால் இவர்களின் வாழ்வில் மரபுகள் வாழ்விழந்து நிற்கின்றன.

"சைக்கிள் ஓட்ட வழியில்லாமல்" என்ற வார்த்தையுடன் சாரதாவின் மரபுவழிப் "பொங்கல் விரும்பம்" அர்த்தமற்றதென்பதை உணர்ந்து, தன்னைச் சுதாகரித்துக் கொண்டாள். அன்று கண்ட கண்ணீரின்பின் இன்றுதான் சாரதாவின் கண்கள் உளத்தைக் கரைந்து உடைப்பெடுத்தன.

"சாரதா... இஞ்சரப்பா... இதிலை வா..." தியாகர் மனைவியின் தனிமையை குலைத்தார்.

"என்னப்பா... ஏன்?... பிள்ளையவளும் படுத்திருக்கிறாள்... நீ அழுறதைக் கண்டால் கவலைப்படுங்களெல்லே..."

தியாகர் மனைவியை தேற்ற முனைந்தார் ஆனால், அவளோ விம்மிப் பொருமினாள்.

"சேய்... இங்கை... நீ கவலைப்படாதை கடவுள் எங்களை கைவிடமாட்டான். எல்லாம் சரியாத்தான் வரும்."

தியாகர் சாரதாவின் தலையில் வாஞ்சையோடு இரண்டுமுறை தடவிக் கொடுத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னப்பா... அவை திடீரெண்டுதான் எல்லாத்தையும் சொல்லீனம்... வரீனம்... முதலிலை பிள்ளையைப் பாக்க வந்ததும் அப்பிடித்தான். இப்ப கலப்புக்கு நாளைக்கு வாறமெண்டு திடீரெண்டு சொன்னால்... கையிலை மடியிலை ஒண்டுமில்லை... எங்களையும் நாளை இண்டைக்கு வரட்டுமாம். எல்லாத்துக்கும் சிலவுக்கு என்ன செய்யிறது. பிள்ளைக்கு நல்ல ஒரு வாழ்க்கை வரேக்கை இப்பிடியாகக் கிடக்குது... ஊரிலை எண்டால்..."

"ம்".... சாரதாதான்.

"என்னப்பா பெருமூச்சு விடுகிறாய்?"...

"இல்லை... சம்பந்தக் கலப்புக்கே இப்பிடி முழிச வேண்டிக்கிடக்கு. சீதன பாதனங்களை எல்லாம் எப்பிடி?"...

"எங்கடை தோட்டந்துரவு, வயல் எல்லாத்தையும் இரண்டாப்பிரிச்சு பாதியை பெரியவளுக்கு எழுதுவம்... பாதியை சின்னவளுக்கு விடுவம் கிடக்கட்டும்... ஆனால் வீடு முழுசா எழுதட்டுமாம்"...

என்றவுடன் தியாகர் ஒருகணம் இறுகிப்போனார். சற்று நேர மௌனத்துள்,

"உந்த வெடியளுக்கை எல்லாம் வீடு என்னபாடு பட்டிருக்குமோ தெரியாது... என்ன நடந்தாலும் என்ரை ஆம்பிளைப்பிள்ளை இருந்திருந்தால் சின்னவளுக்கு அவனிருக்கிறான் தானேயெண்டு ஒருத்தினையும் யோசியாமல் பெரியவளுக்கு முழுவீட்டையும் எழுதிப் போடுவன் அதுதான் எங்களுக்கு குடுத்து வைக்க"...

மனைவியை தேற்றிய தியாகர் இப்போது நெஞ்சுக் கூட்டினுள் சுமையழுத்த தானும் பொருமினார்.

"இஞ்சரப்பா... பொருமாதையுங்கோ பெரியவளுக்கு வீட்டுப் பிரச்சினை யாலை குழப்பிவிடக் கூடாது. அவளுக்கு வீட்டை எழுதுங்கோ. ஊருக்குப் போன பிறகு ஒரு வயலை வித்தாதல் சின்னனா மற்றக்காணியிலை ஒரு வீடு போடலாம். "பாங்கிலை" கடனெடுத்தெண்டாலும் ஊரோடை போய் பிறகு அதைச் செய்யலாம். இப்ப பெரியவளின்ரை கருமம் முடியட்டும்...."

நல்ல மனைவி நல்ல அமைச்சர். தியாகரின் மனப்பாரம் சற்று இறங்குவதைப் போன்று இருந்தது.

"அதுசரி... நாளைக்குப் பின்னேரம் அவை வந்தால்... சிலவுக்கு இல்லாதது ஒரு பக்கம் கிடக்க... இங்கை இந்தக் கொட்டிலுக்கை என்ன செய்யிறது...? பத்துப்பேர் மட்டிலை வருவினமாம் புறோக்கர் சொன்னவர்"...

சாரதா கருமத்தில் கண்ணாகி உணர்ச்சியை அடக்கி அறிவுக்கு சந்தர்ப்பம் கொடுத்தாள்.

"இடப்பிரச்சினை சரி... அந்தக் கடை வச்சிருக்கிற தம்பு அண்ணையெட்டை கேட்டனான் தன்ரை வீட்டிலை கலியாணம் வரைக்கும் எல்லாம் செய்யச் சொல்லிப் போட்டார். நல்ல மனிசன். அவருக்கு எங்கடை குடும்பத்துக்கு தங்கடை வீட்டிலை இடந்தர வசதியில்லை எண்டு சரியான கவலை. பாவம்... அவரும் ஒரு சின்ன மண்வீடுதான் கட்டி வச்சிருக்கிறார்"

மனம் உள்ளவர்களுக்க இடமில்லை. இடம் உள்ளவர்களுக்கு மனம் இல்லை.

"இங்கை... நான் சொல்லுறன் எண்டு கோவிக்காதையுங்கோ... என்ரை தாலியிலை கிடக்கிற காசு ரண்டையும் வித்து... ஒருமாதிரி"...

"என்ன சாரதா கதைக்கிறாய். பிள்ளைக்கு நகை போடுறதைப்பற்றி அவை கதைச்சதுக்கு அதை நம்பித்தானே தலையாட்டின நாங்கள் பிறகு அதிலை கைவைச்சிட்டு கஷ்ரப்படுறதே?..."

தாலி கூட இப்போது பெண்ணைப் பெற்றெடுத்த தாய்க்கு பெண்ணின் திருமணத்தோடு போதும் என்ற பொருளாகி விடுகின்றது.

"அப்ப என்னப்பா செய்யிறது?"...

"கலப்புக்கு எவ்வளவு சிலவு வரும்?"...

"இப்ப உள்ள சாமான் விலையிலை அவை வாறதுக்கும், நாங்கள் போறதுக்கும் சேத்து குறைஞ்சது மூவாயிரமெண்டாலும்..."

சாரதா ஆகக் குறைந்த "எஸ்ரிமேற்" சொன்னாள். விரலுக்கேற்ற வீக்கத்துக்கு ஏற்றதொரு "எஸ்ரிமேற்"

இரண்டு மூன்று நிமிடம் மௌனமாகவே இருந்து ஆழமாக யோசித்தார் தியாகர். ஒரு செருமல் செருமி மௌனத்தை கலைத்துக் கொண்டு,

"சாரதா... நான் சொல்லுறப்படி செய்வம். நீ மாட்டனெண்டு சொல்லக் கூடாது. பிள்ளையின் வாழ்க்கை விஷயம். நாங்கள் வேறை இடத்தை காசுகேட்டு அலைஞ்சு நாளைக்கு கிடைக்காவிட்டால் எல்லாம் சீரழிஞ்சு போகும்"...

தியாகர் விஷயத்தை அணுகும் தயக்கத்தில் நீட்டினாரே ஒழிய... அவரின் நா தளதளத்தது.

"என்னப்பா சொல்லுங்கோவன்" சாரதா.

"இல்லை..... நாயனகார சண்முகம் நாயனம் ஒண்டு விலைக்கு வேணுமெண்டவன். என்ரை நாயனமும் சும்மாதானே"...

"நான் சம்மதிக்கமாட்டன். நாயனத்தை விக்கிறது உங்களை வித்து கலப்பு நடத்திறது மாதிரியெல்லே... என்னப்பா நீங்கள்....

அது வந்த வரலாறு தெரிஞ்சும்"...

சாரதா அழுதே விட்டாள்.

"உங்களாலை முடிஞ்சால் அந்தச் சயிக்கிளை வித்து சம்பந்தக் கலப்புக்குச் சிலவழியுங்கோ விடுங்கோ"... நாயனத்தை விடுங்கோ"...

தியாகரின் நாயனத்துக்கும் அவரது ஆண் பிள்ளைக்கும் ஒரே வயது. இந்த வருடத்தோடு இருபத்தெட்டு வயது முடிகின்றது. தியாகரும், சாரதாவும் பெற் றெடுத்த முதற்பிள்ளை ஆண்பிள்ளை. அவன் பிறந்து முப்பத்தோராம் நாளில் "துடக்குக் கீழிவு" அறிந்தவர்களுக்குச் சொல்லிச் செய்தார் தியாகர். அன்று பிள்ளையின் கைகளில் உறவினர்கள் திணித்த அன்பளிப்புக் காசுதான் அந்த

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாதஸ்வரம்.

"சாரதா... என்ரை பழைய நாதஸ்வரம் பழுதாகிப் போச்சு, தம்பியின்ரை முப்பத்தொண்டிலை வந்த காசிலை ஒரு நாயனம் வாங்கினால், அதை வாசிச்சே வாற வருவாயிலை தம்பியை படிப்பிச்சு ஒரு டாக்குத்தராக்கிப் போடுவன்"...

தியாகர் அப்போது கூறிய வார்த்தைகள் இன்றும் பசுமை பாய்ச்சி சாரதாவின் மனதிலே உள்ளது.

"சாரதா என்ரை கதையைக்கேள்... அழாதை. என்ரை ஆம்பிளைப்பிள்ளை இருந்தால் அது உழைச்சுத் தங்கையாருக்குச் சீதனம் குடுக்காதே?... அதுமாதிரி நினையன்... நாயனத்தை வித்தால் பாதிப்பு இல்லை. சைக்கிளை வித்தால் என்ரை தேங்காய் வியாபாரம் எப்பிடி நடக்கும். யோசிச்சுப்பார். பிறகு சீவியப்பாட்டுக்கு என்ன செய்யிறது?"...

சாரதாவை சமாதானப்படுத்துவதற்கு இவ்வாறு சொன்னாலும் தன் கலையோடு ஆண்மகனின் நினைவுகளையும் காசுக்காக விற்பது தியாகரின் மனதை ஊடுருவி எரித்தது. சுதாகரித்துக் கொண்டார். இருவரும் நீண்ட நேரம் மௌனத்துள் தோய்ந்தனர். இறுதியில்,

"சாரதா... கவலைப்படாதை என்ரை ஆம்பிளைப் பிள்ளையை கலியாணம் முடிச்சுக் குடுத்து, சீதனம் வாங்கி, அந்தச் சீதனக் காசிலை பெரியவளின்ரை கலப்பு நடக்கிறதா நினைச்சுக் கொள்... எழும்பு போய் படு. நாளைக்கு வேலையள் கிடக்கு..."

அறுதியான முடிவோடு எழுந்தாரர் தியாகர். இரவு ஊர்ந்து... அதிகாலையிலேயே நாதஸ்வரத்தை எடுத்துக் கொண்டு நாயனகார சண்முகம் வீடு நோக்கி சைக்கிள் வலித்தார்.

அன்று பிற்பகலில் கடைக்காரத் தம்புவின் வீட்டில் ஆரவாரத்துடன் சம்பந்தக்கலப்பு. மாப்பிள்ளை வீட்டார் விரும்பியவாறான உபசரிப்புகள். இட்லி, சாம்பார், சட்னி என்பவற்றோடு வடை, வாழைப்பழம், பாயாசம் என்று மாப்பிளை வீட்டுக்காரரின் மனம் நிறைய உபசாரம்.

"அப்ப என்ன... நாளைக்கு பொம்பிளை வீட்டுக்காரர் மாப்பிளை வீட்டை வருவினம் தானே... நாங்கள் வெளிக்கிடுவம்"...

புறோக்கரின் நிறைவுரையுடன் கலப்பு நிறைவுற்றது.

மறுநாள் அதிகாலையில் கிழக்கை இறுகப் போர்த்திருந்த இருள்முகிலில் சிக்கி சூரியஒளி சிறைப்பட்டிருந்ததால் ஆறரையாகியும் விடியாதது போல இருள் படிந்த வேளையில் புறோக்கர் "முகாமிற்கு" வந்தார்...

"என்ன புறோக்கர் வெள்ளாப்போடை"... கரவின்றியே கேட்டார் தியாகர்.

"ஒரு முக்கியமாகன விஷயம் அது தான்"... என்று கீழ்ஸ்தாயியில் இழுத்தார் புறோக்கர்.

"என்ன சொல்லுங்கோ... பின்னேரம் வேளைக்கு வரவேணுமோ... இல்லாட்டி வேறை ஏதாவது பேச்சு கலியாண விஷயமோ?"....

"சேச்சே".... விழுங்கினார் புறோக்கர்

"ஒரு சின்னப் பிரச்சினை"....

"பிரச்சினையோ?"... தியாகர் குழம்பிப்போனார்

"ஓமோம்... நீங்கள்ள பார்த்த வேலையாலை மாப்பிளை வீட்டுக்காரர் என்னை பேொட்டு திப்பிலி ஆட்டுதுகள்"...

"என்ன சொல்லுறியள்... என்ன வேலை பாத்தநாங்கள் எனக்கொண்டும் விளங்கேல்லை" தியாகர் பரபரத்தார்.

"பின்னை என்ன?... நீங்கள் ஆர்...கடைகார தம்பன் ஆர்?.... ஒண்டும் விசாரிக்காமல் அலுவல் பார்க்கிறதே?... உங்களையும் கடைகார தம்பனின்ரை ஆக்களெண்டெல்லே அதுகள் நினைக்குதுகள். உங்களைப் பின்னேரம் வரவேண்டாமாம் பிறகு எல்லாம் கதைக்கலாமாம்"...

புறோக்கர் நழுவும் தோரணையிலே காரமாக கதைத்தார்.

"என்ன புறோக்கர் கலப்புச் செய்ய முகாமிலை எங்கடை கொட்டகை காணாது அதாலை தம்பு அண்ணை இடந்தந்தாரே ஒழிய... நான்தான் அவரை இடம் கேட்டனான்... அதுக்கு அவை அப்பிடியே நினைக்கிறது. கைநனைச்சு, வாய் நனைச்சுப் போனாப்போலை தான்... உதென்னை, உதிலை என்ன கிடக்கு தம்பு ஆரெண்டாலும் என்ன?... தருணத்திலை ஒராளெட்டை உதவி கேக்கிறதில்லையே?... அவையென்ன எங்களோடையோ?... தம்புவொடையோ கலப்புச் செய்யினம்?... தியாகர் கோபமாகவே பேசினார்.

"இல்லை பாருங்கோ... அவை சந்தேகப்படீனம்... உங்களோடை முகாமிலை இருக்கிறவை அரைவாசிப் பேரும் தம்பன் அவையின்ரை ஆக்களாம் அவையோடை இருக்கிறதாலை உங்களைச் சந்தேகப்படுறதிலை பிழையில்லை"

தரகர் நடுவராகித் தீர்ப்பளித்தார்.

"புறோக்கர்... என்ன பிழையில்லை எண்ணுறியள். உதென்ன நியாயம்... ஒரு மாதிரிச் சரிப்படுத்துங்கோ... சொல்லி "சேப்" பண்ணுங்கோ உங்களுக்கு எங்களைத் தெரியும் தானே"...

மீண்டும் தியாகர் ஏக்கத்துடன் பரபரத்தார்.

"அண்ணை... நான் எல்லாம் சொல்லிப் பாத்திட்டன். அவை விரும்பினமில்லை. உங்களை வரவேண்டாமாம்... சொல்லி விட்டவை. ஆளுறிஞ்சு பழகிறதில்லையே?... எல்லாத்தையும் பிழைக்க விட்டிட்டியள்"...

தியாகருக்கு உடலெல்லாம் வெடவெடத்தது. வியர்த்துக் கொட்டியது. ஏமாற்றம் நெஞ்சை அடைப்பது போலிருந்தது. சாரதாவை திருப்பிப்பார்த்தார். அவள் இடிந்து போய் இருந்தாள். இரண்டாந்ததரம் தன் ஆண்பிள்ளை காணாமற் போய்விட்டதொரு உணர்வு. எங்கிருந்தோ ஒரு நாதஸ்வர ஒலி முகாரியை காதுகளில் சேர்த்தது. குழந்தைபோல தியாகர் விம்மி விம்மிக் கரைந்தார்.

அகதி வாழ்வில் கூட உயர்ந்தரக அல்ஷேஷன்கள் இருந்துவிட்டால் அந்தஷ்து தானா வந்துவிடும்?...

தியாகரின் உள்ளம் உறைந்து போனது. •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிரிலும் மேலானது...

க.பரணீதரன்

நெற்றிப் பொட்டில் அடித்தது போல ஓர் அதிர்வு. சட்டென்று கண்கள் விழித்துக் கொள்கின்றன. வெளியே மழை தூறிக் கொண்டிருக்கிறது. சாதாரண மழைக்கும் தாக்குப் பிடிக்க இயலாத கூடாரம். அதற்குள் மூன்று குடும்பங்கள். குஞ்சுகுருமான்களால் நிறைந்த இரண்டு குடும்பங்கள். மூன்றாவது குடும்பம் இவனும் அவளுந் தான். அந்தக் குடும்பங்களுக்கு இடம்விட்டு ஓர் ஓரமாக இவனும் அவளும் கூடாரத்துள் ஒதுங்கி இருந்து கொண்டார்கள். கூடாரத்தின் உச்சியில் இருந்து மழைநீர் துளித்துளியாக அவள் அருகே வந்து விழுகிறது. பாத்திரம் ஒன்றை எடுத்து, துளி விழும் இடத்தில் வைத்து விட்டு அவளைப் பார்க்கின்றான். அவள் ஆழ்ந்த உறக்கம். எந்த இரவு அவள் அமைதியாகத் தூங்கி இருக்கிறாள்? கடந்த இரவும் அவள் தூங்காமல் சலித்தாள்! விடிகாலையில் தான் அவள் உறங்கி இருக்க வேண்டும். இந்த மழைத் தூறல் அவள் தூக்கத்தைக் கலைக்கவில்லை. பாவம்! அவள் தூங்கட்டும். அவளைப் பார்க்கப் பார்க்க இவன் உள்ளம் இன்று ஏனோ கவலையால் சஞ்சலமடைகின்றது.

எப்படி இருக்க வேண்டியவள்? ஆனால்... இன்று இந்தக் கூடாரத்துள் கிடக்கின்றாள்.

வன்னிக்கு வராதிருந்தால் அவளைச் சந்திக்க வேண்டி நேர்ந்திருக்காது. கல்விப் பொதுத் தராதரம் சித்தி அடைந்த பின்னர் குடும்பக் கஷ்டம் உத்தியோகம் தேட வைத்தது. எட்டுப் பிள்ளைகள் உள்ள குடும்பத்தை, சிறிய ஒரு வயலும் எரு ஏற்றிப் பறிக்கும் வண்டிலும் மாடும் காப்பாற்றுமா? குடும்பக் கஷ்டத்தை உணர ஆரம்பித்து விட்ட மூத்த பிள்ளைக்கு எப்படிப் படிக்க முடியும்? வேலை தேடி அலைந்து கொண்டிருந்தபோது அதிர்ஷ்டவசமாக அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றில் வேலை கிடைத்தது. அந்த வேலையை வன்னி மண்ணில் செய்யுமாறு நிறுவனம் பணித்தது.

வன்னியில் வாழ வேண்டி நேர்ந்தபோதும் அவள் வீட்டுக்கு அண்மையிலா தங்கி இருக்க வேண்டும்?

அவளைக் கண்டு கொள்ளும் சமயங்களில் எல்லாம் அவள் மேல் ஓர் ஈர்ப்பு. அந்த நாட்டத்துக்கான காரணம் என்ன என்று விளங்கவில்லை. இது பருவத்தின் கவர்ச்சியா? அல்லது முற்பிறப்பின் வழிவந்த பூர்வ சொந்தமா?

உள்ளத் தவிப்பை மனந்திறந்து அவளுக்கு எடுத்துச் சொல்லும் வாய்ப்பு இவனுக்குக் கிட்டவில்லை. மனதில் குமைந்து கொண்டிருந்தான். இவனை விளங்கிக் கொள்ள இயலாத பிஞ்சுப் பிள்ளையல்ல அவள். ஆனால், இவன் எண்ணத்துக்கு இசைந்து வரும் மனம் அவளுக்கில்லை. இவன் ஏ9 பாதை பூட்டியதும் தனி மரமானான். வீட்டுக்குப் போய் வர முடியவில்லை. கடிதத் தொடர்புகளும் இல்லாமல் போனது. இவன் மீளுவதற்கு மார்க்கமில்லாது சிறைப்பட்டுப் போனான். இவனுக்கு இருந்த ஒரேயொரு மகிழ்ச்சி அவளைக் கண்களால் காண்பது தான்.

ஒரு தினம் இவன் வற்றாப்பளை அம்மன் கோயிலுக்குச் சென்றிருந்தான். அங்கு, தன் இதயத்தில் குடிகொண்ட அந்தத் தேவதையைச் சந்திக்க நேரும் என்று இவன் எதிர்பார்க்கவில்லை. தோழிகளுடன் பொங்கலுக்கு அவள் வந்திருந்தாள். இந்தச் சந்தர்ப்பத்தைத் தவற விடக் கூடாதென்று உறுதியாகத் தீர்மானித்துக் கொண்டான்.

இவன் தானாகவே வலிந்து சென்று “தர்சினி” என மெல்ல அழைக்கின்றான். அவள் சற்றுத் தரித்து நின்று இவனைத் திரும்பிப் பார்க்கின்றாள். இவனுக்கு நெஞ்சு “படபட“ என்று அடிக்கிறது. அவளோடு என்ன பேசுவதென்று தெரியவில்லை. “நா“ எழ மறுக்கிறது. சிறிது நேரத்தின் பின்னர் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு, “என்னைத் தெரியுமா, தர்சினி?” என்கின்றான்.

அவள் மௌனமாக மெல்லச் சிரிக்கின்றாள்.

அவள் நின்று பேசிக் கொண்டிருப்பதைக் கவனிக்காது தோழிகள் நகர்ந்து போய்க் கொண்டிருக்கிறார்கள்.

“பாதை மூடின பிறகு நீங்கள் ஊருக்குப் போகவில்லையோ?”

அவள் நக்கலாகக் கேட்கின்றாளா? அல்லது அனுதாபப்படுகின்றாளா? இவனுக்குப் புரியவில்லை. ஆனாலும் சந்தர்ப்பத்தை நழுவ விடாமல் சொல்லு கின்றான்.

“பாதை மூடினதுக்கு நன்றி சொல்ல வேண்டும்”

“ஏன்?” அவள் அதிசயமாகச் சட்டென்று கேட்கின்றாள்.

“பாதை திறந்திருந்தால் தர்சினி இப்ப கம்பஸுக்குப் போய் இருப்பியள். நான் தினமும் உங்களைக் காண முடியாது”

“நீங்கள் எல்லை மீறிப் போகிறியள்”

“நான் என்ரை உள்ளத்தைத் திறந்து சொல்லுறன்”

“நான் உங்கடை நிலைமையைக் கண்டு அனுதாபப்படுகிறன். ஆனால், உங்கடை எண்ணம் நிறைவேறக் கூடியதல்ல”

அவள் சொல்லிவிட்டுத் திடீரென அங்கிருந்து கிளம்பிப் போகின்றாள்.

மழைத் தூறல் சற்று ஓய்ந்து விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் நினைவில் ஆழ்ந்து கிடந்த அவனை, பக்கத்துக் கூடாரத்து மோகன் எழுப்புகிறான்.

"கோபி... கோபி... எழும்படா, உன்னை வரச் சொல்லி "இருக்கினம்". கூப்பிடுறாங்கள்" என்று கோபியின் பக்கத்துக் கூடாரத்துள் இருக்கும் மோகன் எழுப்புகிறான்.

திடுக்குற்று எழும்புகின்றான். இவன் அரையிற் கட்டிய சாரத்தைச் சரி செய்து கொண்டு தலையைக் கையால் நீவிக் கொண்டு அழைப்பு வந்த தலைமைக் காரியாலயத்தை நோக்கி ஓடுகின்றான்.

"நீ தான் கோபியோ?" என்கிறார் முகாம் பொறுப்பாளர்.

"ஓம் ஐயா" என்றவாறு தலையசைக்கிறான் இவன்.

"உனக்கு உன்ரை வீட்டில இருந்து ஒரு "போன் கோல்" வந்திருக்கு. ஐந்து நிமிசந் தான் பேசலாம். சரியா... இந்தா, பிடி..." என்று "ரிசீவரை"க் கொடுக்கிறார்.

"கோபி... ராசா, நான் அப்பா கதைக்கிறன்டா"

நீண்ட காலத்திற்குப் பின்னர் அப்பாவின் குரலைக் கேட்டதில் இவனுக்கு இனம் புரியாத ஒரு மகிழ்ச்சி. ஆனந்தக் கண்ணீர் கண்ணில் இருந்து சொரிய... "அப்பா..." என "நா" தடுமாற அழைக்கின்றான்.

"அப்பன், சுகமாக இருக்கிறியே ராசா"

"ஓம்! அப்பா! வீட்டிலை எல்லோரும் சுகமே, அப்பா?"

"எல்லாரும் சுகமாக இருக்கினம் ராசா, நீ உயிரோட இருக்கிறியோ இல்லையோ என்று தெரியாம நாங்கள் பட்ட அவஸ்தை அந்தப் பிள்ளையாருக்குத் தான் தெரியும்; கொம்மா பித்துப் பிடிச்சவள் போலக் கோயில் குளம் என்று திரிகிறாள். தங்கச்சியவை, தம்பியவை உன்னை நினைச்சு நினைச்சு எந்த நேரமும் விம்முதுகள். முந்த நாள் தான் பெரியப்பான்ரை பெடியனுக்கு நீ முகாமிலை இருப்பதா யாரோ சொன்னவையாம். அதைக் கேட்ட பிறகு தான் போன உயிர் திரும்பி வந்துது, ராசா. எப்பிடி இருக்கிறாய் ராசா. உனக்கொரு பிரச்சினையும் இல்லையே"

"எனக்கொரு பிரச்சினையும் இல்லை... நான் சுகமாத் தான் இருக்கிறன் அப்பா... ஆனால்..."

"என்ன ராசா? சொல்லு!"

"என்னெண்டப்பா சொல்லுகிறது?"

"என்ன ராசா, சொல்லு. என்னெண்டாலும் அப்பாட்டை ஒளிக்காமல் சொல்லு ராசா. எனக்கு என்ரை பிள்ளை தான் முக்கியம். என்ரை உயிர் நீ தான்ரா ராசா"

"அப்பா, நான் தனியாக இல்லை"

"அப்ப... சிநேகிதர்மாரோடை இருக்கிறாயாக்கும். அந்தக் கவலை ஒண்டும் உனக்கு வேண்டாம். உன்னை முகாமை விட்டு வெளியாலே கெதியா எடுக்கப் போறன். அதுக்கு வழி இருக்கு. எவ்வளவு காசு போனாலும் பரவாயில்லை. என்ரை காணியை வித்தெண்டாலும் உன்னை எடுக்கிறதாக முடிவு செய்து போட்டன்"

"அப்பா, கலியாணஞ் செய்யாத இளந்தாரிமார் இஞ்சை வாழமுடியாத ஒரு சூழ்நிலை இருந்தது"

"ஓமோம்... குமர்ப் பிள்ளைகளுக்கும் அப்பிடி ஒரு நெருக்குவாரம் இருந்ததாகக் கேள்விப்பட்டன்!"

"அது தான் அப்பா..."

"என்ன சங்கதி, சொல்லன்"

"நான் கலியாணஞ் செய்யவேண்டி வந்திட்டுது!"

"அதே சங்கதி! நீ கலியாணஞ் செய்த படியால் தான் உன்னை நாங்கள் உயிரோடை பார்க்கப் போகிறம். இதைச் சொல்லுறதுக்கே பயந்தனி ராசா. அது சரி, ஏன் என்ரை மருமேளைப் பற்றி நீ ஒண்டும் சொல்லவில்லை?"

"நல்ல வசதியான குடும்பம். ஏக்கர்க் கணக்காய் நிலபுலம் இருக்கு. வசதியான பெரிய வீடு. தகப்பன் அதிபராக இருந்தார். தாய் ரீச்சர். அண்ணன்மார் இரண்டு பேரும் இன்ஜினியர்மார். வெளிநாட்டிலை இருக்கினம்"

"என்ன சொன்னாலும் நீ என்ரை பிள்ளையல்லே ராசா. பிடிச்சாலும் புளியம் கொம்பாகப் பிடிச்சிருக்கிறாய். என்ரை மருமேள் என்ன வடிவான பிள்ளையே ராசா"

"நல்ல வடிவு"

"எனக்குத் தெரியும். சின்னனிலையே எல்லாத்திலும் நீ வடிவு பாக்கிற ஆள். இப்படியான நல்ல குடும்பம். நாங்கள் செம்பு தண்ணி எடுக்கக்கூடிய ஆக்களாத் தான் இருக்கும். அப்பிடித் தானே!"

"..............................."

"என்ன பேச்சு மூச்சைக் காணன்... அது சரி, எங்கடை ஆக்களே?"

"என்னப்பா கேட்கிறியள்?"

இந்தச் சமயம் பார்த்து, "இந்தா, நேரம் சரி" என்கிறார் முகாம் பொறுப்பாளர். இவன் சேட் பையில் இருந்து நூறு ரூபாத் தாள் ஒன்றை எடுத்து இரகசியமாக மேசை மீது வைத்து விட்டுத் தொடர்கின்றான்.

"என்ன சின்னப் பிள்ளை மாதிரிக் கதைக்கிறாய்... அது தான் தம்பி கேட்கிறன், அவ எங்கட சாதியே..."

"அது வந்து..."

"வந்தும் போயும்... என்ன ஒரு மாதிரி இருக்கிறாய்"

"அவை என்னைத் தங்கடை மகளுக்குக் கட்டி வைக்க விரும்பவில்லை"

"அடே அப்பா! எங்களை விடப் பெரிய சாதிக்காரர் போலக் கிடக்குது. அப்ப ஏன் உன்னைக் கட்டி வைச்சவை"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தங்கடை பிள்ளையின்ரை உயிரையும் காப்பாத்திறதுக்காகத் தான்"

"டேய்! நான் சிவசேகரமணியக்காரன்ரை பூட்டன்ரா! உன்னைக் கட்ட மறுக்கிறதுக்கு... அவ்வளவு பெரிய ஆக்களோ!"

"கரைச்சல் வருமெண்டு..."

"என்னடா கரைச்சல்? பிள்ளை ஆரடா... சொல்லித் துலையன்"

"மேளமடிக்கிறவை..."

"ஆரடா... கோயிலுக்குப் போய் அடிக்கிறவங்களோ..."

"இல்லையப்பா... செத்த வீட்டுக்கு..."

"என்ன துணிச்சலடா உனக்கு, நீ இப்படியொரு கலியாணத்தைக் கட்டிப் போட்டுத் தைரியமாய் எனக்குச் சொல்லுறாய். எனக்கு வாற கொதிக்கு"

"அப்பா, கோபப்படாதையுங்கோ, அவை நல்ல ஆட்கள். நல்ல படிச்ச குடும்பம், நல்ல பண்பானவை, மரியாதை தெரிஞ்சவை, நல்ல பணக்காரர், இதை விட வேறு என்ன வேணும்"

"டேய்! என்ன பெரிய ஆட்கள் எண்டாலும் அவங்கள் பறை அடிக்கிறவங்கள் தானே. எங்கட கோடிக்குள்ளே உள்ளவங்களை நீ எங்கட வீட்டுக்குள்ளே கொண்டு வரப் போறியோ?"

"அப்பா, அவள் என்னைக் கல்யாணம் செய்ததாலை தான் இப்படி இந்த முகாமிலை கஷ்டப்படுகிறாள். நான் உயிரோட வன்னியில் இருந்து வந்ததுக்கு அவள் தான் காரணம்.

"டேய்! எனக்கு எந்தக் கதையும் சொல்லாதை. முடிவாகக் கேட்கிறன். அவளை விட்டுட்டு நீ வாறியோ? அப்படி வாறாய் என்றால் நாங்கள் உன்னை வெளியாலை எடுக்கிறம்"

"என்னை நம்பி வந்தவளை, என்ரை உயிரைக் காத்தவளை எப்பிடி அப்பா விட்டிட்டு வாறது!"

"எப்பிடி வருவாயோ எனக்குத் தெரியாது. முடிவாக என்ன சொல்லுகிறாய்?"


"அப்பா, எங்கள் இரண்டு பேரையும் எடுக்கிறதெண்டால் எடுங்கோ. இல்லை எண்டால் அவளை விட்டு நான் வரமாட்டன்"

"உது தான் உன்ரை முடிவோ?"

"இது தான் என்ரை முடிவு"

"எட நாயே! வன்னியிலையே நீ செத்து, நான் குடமுடைத்துக் கொள்ளியும் வைச்சு விட்டதாய் நினைச்சுக் கொள்ளுறன்..."

இவன் தொலைபேசித் தொடர்பைச் சட்டென்று அறுத்து விட்டு முகாம் கூடாரத்தை நோக்கிப் போகின்றான். •





ஈழத்தில் இருந்து ஒரு மாதத்தில் 3 இதழ்களை வெளியீடு செய்யும் ஒரேயொரு இதழ் ஜீவநதி என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். இந்த ஆண்டு இந்தத் தொடர்ச்சி பேணப்படும்.

சென்ற இதழின் சில அட்டைகளில்(சி.ரமேஷ், புக்லப் இல் விற்பனை செய்யப்பட்ட பிரதிகளில்) துரைசிங்கம் அவர்களின் படம் தவறுதலாக மாறி அச்சிடப்பட்டுள்ளது என்பதை வருத்தத்துடன் தெரிவித்து கொள்கின்றோம்.

சித்திரை மாத ஆவணச் சிறப்பிதழ் - "ஈழத்து அரசியல் நாவல்கள் - 2" ஆக வெளி வரவுள்ளது என்பதை வாசகர்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேறையாக்கள்

## அனோஜன் பாலகிருஷ்ணன்

ராஜேந்திரன் :

மெலிதாக வியர்த்தது. மழைவரும் போல் இருந்தது. நேற்றுப் பெய்த மழையில் குட்டைகளில் தேங்கியிருந்த நீர் வற்றத் தொடங்கியிருந்தது. நடக்கும்போது பாதையில் இருந்த செம்மண் செருப்பில் ஒட்டியது.

சாய்ந்து வீழ்ந்திருந்த தென்னமரக் குற்றியில் காளான்கள் முளைவிட்டு இருந்தன. இரு புறங்களிலும் தொட்டாற்சிணுங்கிச் செடிகள் நிறையவே இருந்தன. தூறல் எடுக்கும்போல் இலேசாகக் குளிர்காற்று வீசியது. முகில்கள் மெலிதாக கறுத்திருந்தன. கையில் குடையிருந்ததால் பதட்டம் இன்றி நிதானமாக நடந்தேன். இன்னும் அரைமைல் நடந்தால் வீடு வந்துவிடும்.

ஒரேயொரு கொய்யாமரம் சற்று விநோதமாகக் ஒரு சில கிளைகளுடனும் காய் பிஞ்சுகளுடனும் நின்று கொண்டிருந்தது. கொய்யாமரங்களைப் பார்க்கும்போது அவள் நினைவு மெல்லிய வலியுடன் வரும். மகிழினி.... அவளை எங்கெல்லாம் எத்தனை தடவை தேடினேன். என் இதய அறையின் ஆழத்தில் மிக மிக இரகசியமாக இன்னும் நீச்சல் அடிப்பவள்.

அப்போது நான் இருந்த வீட்டுக்கு கொஞ்சம் தள்ளி மகிழினி வீடிருந்தது. வாடகை வீட்டில் அவர்கள் இருந்தார்கள். அவள் வீட்டுப் போர்ட்டிக்கோ முடக்கடியில் ஒரு கொய்யாமரம் பரந்து சுதந்திரமாக கிளைகள் விட்டு விருட்சமாக வளர்ந்திருந்தது. என் வீட்டு வராண்டாவில் இருந்து பார்க்கும்போது இரட்டை ஜடையுடன் மார்பில் புத்தகத்தைக் கட்டிபிடித்துக்கொண்டு மென்மையாக நடந்துபோவது தெரியும். அவளை அடிக்கடி பார்ப்பது சுவாரசியமாகவிருந்தது.

நான் உயர்தரம் கணிதப்பிரிவில் படித்துக் கொண்டிருந்தேன். மகிழினி என்னை விட ஒருவயது. குறைவு, கலைப்பிரிவில் படித்துக் கொண்டிருந்தாள். யாழ்ப்பாணப் பல்கலைகழகத்தில் புவியியல் பாட டெமோவான என் அக்காவைப் பின்னேரங்களில் சந்திக்க வருவாள். நிறையநேரம் பாடஞ் சம்பந்தமாகக் கதைப்பார்கள். சிலசமயம் என்னைப் பார்த்து மெலிதாகப் புன்னகைத்து இருந்தாள். கீழுதட்டைப் பற்களால் கவ்விக்கொண்டு சொக்கையில் குழி விழ அவள் மெலிதாச் சிரிக்கும் போது எனக்குள் சில ஹோர்மோன்கள் கொஞ்சம் அதிகமாகவே சுரக்கும்.

டியூஷனுக்குப் போக அவசரவசரமாகப் புறப்படும்போது காத்தடிக்க பம்ப் வேண்டும் என்று வாசலில் வந்து கேட்டாள். அக்கா இன்னும் வரவில்லை.

"சுகந்தி அக்கா.... அக்கா..." என்றாள் நான் நிற்பதை கவனியாததுபோல்.

"அக்கா இன்னும் வரவில்லை.... அஞ்சரை ஆகும் வர..."

"ஓ........பம்ப் ஒருக்கா தருவீங்களா....?" என்றாள் கேட் தூண் அடியில் நிண்டு கொண்டு.

"அத என்னட்டையே கேட்டு இருக்கலாமே. அதுக்கு ஏன் அக்காவ கூப்பிடுறீங்க?"

போய் எடுத்து வந்து கொடுத்தேன். எதுவும் சொல்லாமல் மௌனமாக வேண்டினாள்.

"உங்களிட்ட சைக்கிள் இருக்கா?" என்றேன்.

"இல்லை... அப்பாண்ட சைக்கிளுக்கு..."

அவளை நினைக்கும்போது சில வினோத உணர்வுகள் பிறக்கும்.

அடிவயித்தை யாரோ கவ்விப் பிடிப்பது போல் இருக்கும். மகிழினி மேல் காதல் துளிர்விட்டுச் செழுமையாகப் படர்ந்து வளர்ந்தது. இரசாயன பாடக்கொப்பியை திறக்கும்போது அவளின் நினைவுகள் இரசயனமாற்றங்களாக என்னுள் எழும். மகிழினி நினைப்பில் தாள்கள் முழுவதும் பென்சில் வளையங்களை வரைந்து கொண்டே இருப்பேன்.

வெயில், கொழுத்திக் தள்ளினாலும் மகிழினி வீட்டின்முன் நிற்கும்போது இனிய சங்கீதக் கச்சேரி ஒன்றைக் கேட்டுக்கொண்டிருப்பது போலத் தோன்றியது. அவள் வீட்டு கேற்றத் திறக்கும்போது கொக்கத்தடி சரிந்து என் தோளில் விழுந்தது.

"ஐயையோ... சொறி சொறி.... கவனிக்கல" என்று பதறியடித்து கொக்கத்தடியை விலக்கினாள். மெல்லிய தடியாக இருந்ததால் வலிக்கவில்லை. ஒரு சிறிய வாங்கில் ஏறிக் கொய்யா மரத்தில் இருந்த பழத்தைத் தட்டும்போது தவறி என் மேல் விழுந்ததைப் புரிந்துகொண்டேன். அவளுக்கு உயரம் போதவில்லை.

"இல்ல பரவாயில்லை, என்ன கொய்யாபிடுங்குறீங்களா?.... நல்லவேளை கண்ணுல குத்தமா விட்டீங்க" என்றேன். ஒரு மாதிரி சிரித்தாள். "பம்ப் தருவீங்களா?... எண்ட சைக்கிலுக்கு காத்து அடிக்கணும்..."

"ஐயோ.. மறந்துபோனனே... அம்மா அப்பவே கொடுக்கச் சொன்னா நான் தான் தரேல..."

அவள் உள்ளே ஓடினாள். நான் வாங்கில் ஏறி கிளையை கொக்கியில் மாட்டி இழுத்து கையில் அந்த கொய்யா கிளையோடு வர பறித்தேன்.

"அட... நீங்க பிடுங்கிட்டீங்களா?... இந்தாங்கோபம்... சொறி நான் தர மறந்துட்டேன்... ரொம்ப தாங்ஸ்"

அவள் அம்மா பின்னால் வந்தாள்.

"என்ன ராஜூ...." கையில் ஏதோ நாவலுடன் வந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பம் வேண்ட வந்தனான் அன்டி..."

"மகிழ் நீ கொடுக்கலையா.. அப்பவே சொன்னனான் இரவல் வேண்டின ஒரு பொருளை உடனயே கொடுக்கணும் என்று.. இந்தப் பிள்ளை இப்படிதான்..."

அவள் அம்மாவை முறைத்தாள்.

"இல்ல பரவாயில்லை அன்டி..."

அவளிடம் கொய்யாவைக் கொடுத்து விட்டு பம்மை வேண்டிக்கொண்டு வீடுவந்தேன். இதற்கு முன்னர் இத்தனை அருகில் அவளை நான் பார்த்தது இல்லை. அந்தப் பரவசத்தில் இருந்து விடுபட அதிகநேரம் பிடித்தது. அவள் நண்பிகளுடன் கதைத்துக்கொண்டு, என் வீட்டைக் கடந்து செல்லும்போது அவள் மட்டும் விசேஷமான நிறங்களில் தெரிவாள். மௌனமாக அவள் புன்னகைப்பது எனக்கு மட்டும் புரிந்து கொண்டேயிருந்தது.

பல சமயம் அவள் வீடுவரும்போது என்னை பார்த்து மெலிதாகச் சிரிப்பாள். பதிலுக்கு நான் இளிப்பேன். எங்கள் வீட்டு ஒழுங்கைத் திருப்பத்தில் ஒரு குட்டி பிள்ளையார் கோயில் இருக்கும். அதன் பின் ஒரு சிறிய ஆழமான கிணறு இருக்கும். அங்கேதான் அப்பா தண்ணி அள்ளுவார். மகிழினி ஒவ்வொரு பின்னேரமும் தண்ணியள்ள குடத்துடன் செல்வாள். அப்பாக்கு வயசாகுது எதுக்கு தண்ணியள்ள அவர் போய் கஷ்டப்படனும் என்று அன்றில் இருந்து நான் கடமை உணர்ச்சியுடன் புறப்பட்டேன். அப்பா நம்ப முடியாமல் விநோதமாகப் பார்த்தார்.

சில சமயம் அவளுக்கும் சேர்த்து தண்ணி அள்ளிக் கொடுப்பேன். அவளுடன் வெட்கப்பட்டு, சிலிர்த்து, கோவப்பட்டு, தனிமைப்பட்டு என்று உரையாடல்கள் நீண்டுகொண்டிருந்தன.

"எப்படி எக்ஸாம்?... நல்லா செய்தீங்களா?"

"ம்ம்ம்... பரவாயில்லை..."

அப்போதுதான் உயர்தரம் முடிந்திருந்தது. திருப்தியாகவே செய்திருந்தேன்.

"நீங்க நல்லா செய்து இருப்பிங்க... டபுள்மத்ஸ்ல உங்களுக்குதான் நெடுவலும் ஹயஸ்ட் வாறது என்று துளசி அக்கா சொல்லுறவா...." என்றாள் குடத்தை இடுப்பில் தாங்கியவாறு.

"துளசியா? அவாட்ட எதுக்கு என்னை பத்திக் கதைக்குறநீங்க..." துளவு என் பாடசாலை நண்பி.

அவள் முகம் சிவந்தது.

"இல்ல சும்மாதான்..."

"வேற என்ன சொன்னவா?"

"ஒன்றும் சொல்லலை..." அவள் விருட் என்று சென்றுவிட்டாள்.

என் அக்கா திருமணம் நல்லாவே நடந்தது. மகிழினியின் அம்மா, அப்பா எல்லோரும் வந்திருந்தார்கள். மகிழினியை முதல்முதல் புடவையில் கண்டேன். மாநிறமான அவளுக்கு சிவப்பு சேலை தனி வடிவை கொடுத்தது. இரட்டைச் சடை இல்லாமல் கூந்தலாக விட்டிருந்தாள். இது எல்லாமே எனக்கா...! உள்ளே சந்தோஷித்தேன்.

அவன் மீது காதல் படர்ந்து சென்றுகொண்டிருந்தது. சின்னச் சின்ன குறுகுறுப்புகளுடன் அவள் நினைவுகள் இப்போது என்னுள்ளே வியாபித்தன. என் பரீட்சை பெறுபேறுகள் வெளிவந்தவுடன் மகிழ் வீட்டை பூரிப்புடன் சொன்னபோது கற்கண்டு தந்தார்கள், ஆனால் அவள் அப்பா அன்று சொன்னது இன்றும் எனக்குள் கசத்துக்கொண்டுள்ளது.

அவள் வீட்டு கேற்றடியிற் செல்லும் போது அவள் அம்மா கூப்பிட்டாள்.

"ராஜேந்திரன் உங்களோட அங்கிள் ஒருக்கா கதைக்கனுமாம். ஒருக்கா வர்றீரா?"

போனேன், மகிழ் இல்லை. அவள் அப்பா டவுனுக்குள் கடை வைத்திருந்தார். அடிக்கடி வெத்திலை போடுவார். அருகில் போகும்போது அதன் வாசம் வீசியது. ஒரு பிளாஸ்டிக் கதிரையை காட்டி இருக்க சொன்னார்.

"தம்பி நீங்க இப்படி செய்யிறது நல்லாயில்லை...." என்றார்

"என்ன..." என்றேன் திடுக்கிட்டு.

"மகிழினி மேல விருப்ப படுறியலா..."

"...." உதறியது.

"நாங்க கவனிச்சுட்டுதான் இருக்கிறம்... நீங்க அவாவோட அதிகமா மினக்கடுறியள்... தண்ணி அள்ளப் போகேக்க தனியப் போய் கதைகுறியள்... இது எல்லாம் சரியில்லை. அப்படி ஒரு எண்ணம் இருந்தா விட்டுடுங்க..."

"அங்..." வியர்த்தது. ஒரு வேளை மகிழ் ஏதும் சொன்னாளா... ச்சே ச்சே அப்படி இருக்காது.

"நீங்க வேறயாக்கள் நாங்கள் வேறயாக்கள்... கடைசிவரை இது சரி வராது, உங்க அப்பாவோடயோ அம்மாவோடயோ நாங்கள் ஒண்டும் பிரச்சனைப்பட விரும்பேல நீங்கள் கெட்டிக்கார பிள்ளை... நல்ல ரிசல்ட் வேற ஏயெல்ல எடுத்திருக்குறீங்கள்... ஒருக்காச் சொன்னா விளங்கும்" என்று வெத்திலைக்கு சுண்ணாம்பு தடவியவாறு சொன்னார். அவள் அம்மா கதவடியில் நின்றாள்.

அவள் வீட்டை விட்டு வெளியில் வரும்போது கொய்யமரத்தில் இருந்த அணில் கத்திக்கொண்டேயிருந்தது.

அதற்கு அப்புறம் அவளை நான் காண்பது அரிதாகவேயிருந்தது. அவளைக் காணும்போது அவள் அப்பா சொன்னது நினைவுக்கு வரும், "நாங்கள் வேறையாக்கள் நீங்கள் வேறையாக்கள்".

அவர்கள் சொந்த இடம் இது இல்லை. மகிழ் ஒரேயொரு பிள்ளை. நல்ல தண்ணி, நல்ல படிப்பு வேண்டும் என்று இங்கே வந்தார்கள். அன்னம் தளிர்க்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேளாண்மை செய்யும் குலத்தில் வந்ததாகச் சொல்லும் திமிர் பலசமயம் தென்பட்டது உண்டு. அவர்கள் வீட்டில கொத்தனார் வேலைக்கு வரும் நபர்களிடம் சிரட்டையில் தண்ணீர், தேத்தண்ணி கொடுப்பதை அவஸ்தையோடு பார்த்திருக்கின்றேன். அவர்கள் வீட்டு இடப்பக்கம் இருக்கும் போஸ்ட் மாஸ்டர் வீட்டில் நடக்கும் விஷேசங்களுக்குச் சென்றுவிட்டுச் சாப்பிடாமல் வருவதைக் கவனித்து இருக்கின்றேன். கூர்ந்து கவனித்தால் அவர் அப்பா வெத்திலைகூட அங்கே போட்டது இல்லை. ஏன் என்று துலாவும்போது தெரிந்தது, போஸ்ட் மாஸ்டரின் அப்பா சலவைக்கடை வைத்திருந்தாராம்.

என் அக்கா வீட்டுக் கலியாணத்தில் சாப்பிட்டார்களா இல்லையா என்று எனக்கு தெரியாது, கவனிக்கவில்லை. துளசியைக் காணும்போது ஒரு சமயத்தில் மகிழினியைப் பற்றி கேட்டேன். அவள் வீட்டை விட்டு வெளியே போவது குறைவு. காண்பது இல்லை என்றாள். வெளியே சொல்லமுடியாத வலிகளினால் புரண்டேன். யோசிக்க இன்னும் ஒன்று புரிந்தது. போர்டிக்கோவைத் தாண்டி உள்ளே அவர்கள் ஒருபோதும் என் அக்காவைக்கூட அனுமதிந்தது இல்லை, மெலிதாக ஒரு தாழ்வு மனப்பான்மை சுடர்விட்டது.

நில அளவியல் பிரிவில் பல்கலைக்கழகத்திற்குத் தேர்வாகி மொறட்டுவை சென்றுவிட்டேன். அதன் பின் அவளை நான் காணவேயில்லை. விடுமுறைக்கு வரும் போது அவள் வீடு வெறிச்சோடியிருக்கும். கொய்யாமரம் மட்டும் இப்பொழுதும் காய்த்து இருந்தது. அதற்குப் பிறகு நாங்கள் வீடுமாறிவிட்டோம். கடைசிவருடம் இறுதிப்பரீட்சை எழுதிவிட்டு வரும்போது துளசி சொன்னாள் மகிழுக்கு கலியாணம் முடிந்து விட்டதாம், சொந்தத்தில் செய்ததாகச் சொன்னாள், இப்பவும் அதே வீட்டில்தான் இருக்கின்றாளாம். ஆர்வம் காட்டாதது போல் கேட்டாலும் நிறைய வலித்தது. நான் அவளை ஒன்றும் அத்தனைத் தீவிரமாகக் காதலிக்கவில்லையே, இந்த வினோத வலி அவமானப்படுத்தப்பட்டதன் வெளிப்பாடா?, குளிர்ந்த தட்டையான வாளை அடிவயிற்றில் செருகிக் கிண்டியது போல் வலித்தது.

கசக்கும் நினைவுகளோடு கடக்க வீடுவந்தது. அதே கொய்யாமரம் நின்றது. அந்த வீடு மகிழ்வீடுதான். கேந் அதே மாதிரியிருந்தது. வேலி இல்லாமல் மதில் முளைத்திருந்தது. கேற்றைத் திறக்கத் தயங்கினேன். என்னதான் படித்து அடுத்தகட்டம் போனாலும் அன்று ஏற்பட்ட தாழ்வு மனப்பான்மையைக் கழுவமுடியவில்லை. அவள் அப்பா கேற்றடியில் வைத்தே அனுப்பிவிடுவாரா? கொழுக்கியை இழுத்து கேற் மீது தட்டினேன். அவள் வந்தாள். முகத்தை ஊடுருவிப்பார்க்க ஒரு கணம் மிரண்டு விட்டு சமாளித்துத் தயங்கி வந்தாள்.

மகிழினி:

பூவரசு மரத்தில் புனில்கள் கத்திக்கொண்டிருந்தன. மழை வரும்போல் இருந்தது. அவசர அவசரமாக பின் கொடியில் இருந்த உடுப்பை எடுத்து வீட்டில் வைத்துவிட்டுவர முன் கேற்றடியில் யாரோ நின்றார்கள். வாசலில் வந்து பார்க்க அது அந்த முகம். ஒரு கணம் அது ராஜூவா என்று நம்பமுடியவில்லை. மெல்லிய தயக்கமும் இருந்தது. அந்த இளமையான நினைவுகள் உள்ளே பரவ அவசர அவசரமாக அதைத் தவிர்க்க எண்ணித் தோற்றேன்.

அவர் அப்போது எங்கள் வீட்டுக்குப் பக்கத்தில் இருந்தார். உயர்தரத்தில் புவியியல் பாடம் எடுத்ததால் அவர் அக்காவிடம் சிலசமயம் பாடஞ் சம்பந்தமாகக் கதைக்கச் செல்வேன். இவர் மிகவும் அமைதியாக இருப்பார். திருட்டுத்தனமாக அடிக்கடி பார்ப்பார். என்னை நேர பார்த்துக் கதைக்க மாட்டாராம். அக்கா இல்லாத சமயம் புலி, பார்த்து இளிப்பார்.

பள்ளிக்கூடம் முடிந்து போகேக்க அவர் வீட்டு கேற்றடியில் நின்று பார்ப்பார். சிலசமயம் பார்க்கப் பாவமா இருக்கும். அது ஏன் என்றே தெரியா...

துளசி அக்கா இவர் கிளாஸ்மேட். அவா என் தூரத்து உறவு, அடிக்கடி வீட்டை வருவா. இவரைப் பத்தி அடிக்கடி கதைப்பா. ரொம்ப நல்லவராம். நல்லா படிப்பாராம். ரொம்ப டீசென்ட்டாம். கேட்கக் கேட்கச் சந்தோஷமாகவும் ஆர்வமாகவும் இருக்கும்.

அண்டைக்கொருநாள் அப்பாண்ட சைக்கிளுக்கு காத்து இல்லை, பம் வேண்ட அவர் வீட்டை போனேன். சுகந்தி அக்கா நிற்கமாட்டா என்று தெரியும். இவர் தான் நின்றார். எப்படி பம் கேக்குறதென்று புரியவில்லை. வெக்கமாக இருந்தது. அவர் அக்காவைக் கூப்பிட இவர் முழுசி அடிச்சுக்கொண்டு வந்தார். வீட்டிலை யாரும் இல்லை போல். தைரியமாகக் கதைத்தார். முதல் முதல் அவர் கதைத்தது அப்போதுதான் என்று நினைக்கின்றேன். அட இவர் கதைப்பாரா என்பதே ஆச்சரியமாக இருந்தது!

அப்பா டவுனுக்குப் போக, அம்மா பம்மைக் கொடுக்க சொன்னாள். போக ஏதோ மாதிரியிருந்தது போகவில்லை.

வீட்டுக் கொய்யாமரத்தில் அணில்கள் புசுபுசுவென்ற வாலுடன் ஓடித் திரிவதைப்பார்க்க ஆசையாக இருக்கும். நிறைய கொய்யாவை அவை கொறிக்கும். ஒரு ஸ்டூலை எடுத்து ஏறி கொக்கத்தடியால் அந்த கொய்யாவை பறிக்க முயன்றேன். எட்டவில்லை. அப்பதான் இவர் பம்மைக் கேட்கும் சாக்கில் கேட்டை தயக்கமாக திறந்துகொண்டு வந்தார். எனக்கு பதட்டமாக இருந்தது. பாவாடையோடு நான் நின்ற நிலையை எண்ணி வெட்கமாக இருந்தது. அவசரமாக இறங்க அவர் மேல் கொக்கத்தடிய போட்டுவிட்டேன். எனக்கு ஒரு மாதிரிப் போய்விட்டது. பம் கேட்டார். வீட்டுக்குள் ஓடிப் போய் எடுத்துக் கொடுக்கப்போனேன்.

"ஏன் இப்படி ஓடுற..." அம்மா ரமணிசந்திரன் நாவல் படித்து கொண்டிருந்தாள், நிமிர்ந்து கேட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பம் கொடுக்கலை அம்மா... அதான் வேண்ட சுகந்தி அக்காண்ட தம்பி வந்திருக்குறார்..." என்றேன்.

"இப்படியா பொடியங்கள் முன்னால ஓடுவ?.. ஒழுங்கா போ..."

பம்மை கொடுக்க, அம்மா வந்தாள். தான் அப்பவே கொடுக்கச் சொன்னான் என்று ஏதோ சொன்னாள். பொய்க் கோபமாக அம்மாவைப் பாத்தேன்.

பாடசாலை முடிந்து போகும்போது அடிக்கடி என்னைக் குறுகுறுவென்று பார்ப்பார். ஐயோ.. ஏன் இப்படி வெட்கமே இல்லாமல் பாக்கிறார் என்று சிலசமயம் கோவமா அல்லது வேறு ஏதும் உணர்ச்சியா என்று தெரியாத ஒரு வினோத உணர்வு எழும். பாவமாகவும் இருக்கும். வெக்கமாகவும் இருக்கும். எனக்கே சிரிப்பு வரும். மெல்ல மெல்ல காதல் துளிர் விட்டது. அவர் என்னை விழுங்குவது மாதிரி பார்ப்பதிலேயே அவரும் என்னை விரும்புவது அப்பட்டமாக தெரிந்தது. வேண்டுமென்றால் இவரே சொல்லட்டும். நான் ஒன்றும் சொல்லமாட்டன். பிடிவாதமாகத் தீர்மானித்தேன்.

அடிக்கடி துளசி அக்காவிடம் இவரைப் பத்தி கேட்பேன். முதல்ல சாதாரணமாக சொன்னவங்க நான் நோண்டி நோண்டிக் கேட்க ஒரு மாதிரி முதல்ல பார்த்தா. அதோட கேக்குறதை நிப்பாட்டிட்டன். அவர் அக்காவுடன் கதைக்கும் போது கொஞ்சம் கொஞ்சமாக காதல் தவிப்புகள் ஊடுருவின. கள்ளம் செய்வது போல உணர்ந்தேன். ஒவ்வொரு நாளும் தண்ணி எடுக்க பிள்ளையார் கோயில் கிணத்தடிக்குப் போவன், வழமையா இவற்ற அப்பாதான் அங்க தண்ணியள்ள வருவார். இவர் வீட்டு கேற்றில நின்று நான் குடத்தோட போறதைப் பார்ப்பார். அதுக்குள்ள இளிப்பு வேற... ஏன் இவர் இன்னும் தண்ணியள்ள வரல என்று நினைக்க இவர் கிணத்தடிக்கு வந்து சேர்வார். சிரிப்பாகவிருந்தாலும் அவஸ்தையான இன்பமாக இருக்கும். அது ஏனோ பிடித்திருந்தது. ஒவ்வொரு நாளும் அவரைப் பார்க்க முடியும் என்று இனம் புரியாத வெட்கம் இருந்தது. நான் எப்படி மாறிவிட்டேன். அடிக்கடி கண்ணாடியைப் பார்த்தேன். வெட்கப்பட்டேன்.

ஏதேதோ சாக்குவைத்து அடிக்கடி கதைத்தார். அவர் கதைக்கும்போது அவர் கண்கள் ஊடுருவுவதை தவிர்க்க முடியவில்லை. காதல் உணர்வு வளர்ந்து கொண்டேயிருந்தது.

"இங்கவா... என்ன இது.....?"

"என்னம்மா?"

"இங்க... அந்த ராஜூ வீட்டை ஏன் அடிக்கடி மினக்கிடுற...?"

"எ..எ..." அம்மா ஏன் அப்படி கேட்டாளோ தெரியவில்லை.

"இங்க பாரு அவனிட்ட கொஞ்சம் தள்ளியிரு... அவை வேறையாக்கள் தெரியும்தானே, சும்மா.. அங்க போய் கிடக்காத, உன்னையும் பனைமரத்தில ஏறப் பழக்கிடுவாங்கள், ஒன்னுகிடக்க ஒன்னு ஆகிடபோது... நீ அந்த ராஜூ பொடியனோட அடிக்கடி கதைக்குற மாதிரி தெரியுது.. இது எல்லாம் அவையளோட வேண்டாம்..."

அம்மா இப்படி நக்கலாகச் சொல்லும்போது தூக்கிவாரிப்போட்டது. எந்த மனிதத்தன்மையும் இல்லாத பெண் என்று அம்மா பற்றித் தோன்றியது.

அன்று ஏனோ நித்திரை வரவேயில்லை... ச்சே ஏன் இப்படி மட்டமாக இருக்கிறார்கள். தமிழ் சிங்கள பிரச்சனை அதுக்குள்ளே யாழ்ப்பாணி மட்டுறால் எண்டு அடிபாடுவேறு, அப்புறம் யாழ்ப்பாணத்துக்குள்ள நீ அது நான் இது என்று சாதி பிரிவினைகள். ஒரே சாதிக்குள்ளயும் நீ அவ்விடம் நான் இவ்விடம் என்ற முறுகல். அவன் இந்தக் கோயிலுக்கு வரக்கூடாது, நாம அங்க போக கூடாது, இவையளுக்கு இந்த தம்பிளர்ல கொடுக்ககூட... ச்சே... ஏன் நமது தமிழர்க்கு இப்படி அடிப்படையிலேயே ஆயிரம் பிரச்சனை? நமக்கு எதிரி உள்ளேயும் வெளியேயும்! வடக்கு கிழக்கை ஒன்றாக ஆக்கணும் என்று கோஷம் போட்டால் அதையும் இன்னொரு கோஷ்டி மறுக்கும். சிங்கள அரசுக்கு ஒன்றுமட்டும் புரியவில்லை. வடக்கு கிழக்கை ஒன்றா இணைத்தால், கொஞ்ச காலம் ஒன்றாக இருந்துவிட்டு தாங்களே அடித்துப்பிடித்து ரோட்டில் உருண்டுபிரண்டு பிரிந்து விடுவார்கள்... ஹ்ம்ம்...

அவர்கள் அக்கா வீட்டு கலியாணம் நடந்தது. இவர் தான் மாப்பிள்ளை தோழன், ஷேவ் செய்து நஷனல் எல்லாம் போட்டு நிற்பவரைப் பார்க்க நல்லாத்தாள் இருந்தது. இவரையே பார்த்துக் கொண்டேயிருந்தேன். என் பர்வையை அவர் கண்டுகொண்டதாகத் தெரியவில்லை. அந்த விநோத உணர்வு சுவாரசியமாக இருந்தது. தவிர்க்க முடியவில்லை.

அப்பாவும் அம்மாவும் சாப்பிடவில்லை. சுருக் என்று இருந்தது. எதற்கு இந்த வெளிப் பாசாங்கு? சிரித்துக் கதைப்பது, தங்கட வேலை நடக்கணும் என்றா மட்டும் ஜாதி தெரியாது. ஏதோ ஒரு பக்கத்தில் ரொம்பவே வலித்தது.

அம்மா கத்தினாள் "ஏன் நீ அங்க சாப்பிட்டனி? உனக்கு எங்க இருந்து இந்தத் திமிர்? போகேக்கவே சொன்னான் இல்லோ... போய் இருந்திட்டு சாப்பிடாம வரணும் என்று..."

"ஏன் இப்படிக் கேவலமாக இருக்குறீங்க.... ச்சா வெக்கமாக இருக்கு... மனிசரா நீங்க...." புட்டுப் பானையை தூக்கியேறிந்தேன்.

"ஏய் என்ன என்ன...? என்னடி நினைச்சிட்டு.. நானும் பாக்குறன் நீ அவனயே பாத்திட்டு இருக்குற, இளிக்குற அங்க..."

"ஓம் நான் அவர விரும்புறன்..." நான் திடும் என்று சொன்னதை, நானே நம்பாமல் சுதாகரிக்க முதலில் அம்மா குடுமியை பிடித்து அறைய அப்பா குறுக்க வர... வீடு நிறையவே அல்லோகலப்பட்டது.

நிறைய அழுதேன்... இப்ப நினைக்கும்போதும் வலித்தது... அந்த சோகம் இப்பவும் கண்ணில் வடிந்தது. அதற்கு பிற்பாடு என்னை அங்கே போகவிடுவதில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டையே இருந்தேன். அப்பா மிகவும் சஞ்சலப்பட்டார். நீ சொந்தத்தில் தான் கலியாணம் பண்ணணும் அது தான் பாதுகாப்பானது, இப்போ உனக்கு ஒன்றும் புரியாது என்றார். அப்போது புரியவில்லை, இப்போது அது புரிந்தது...

சிலசமயம் அவரை காணும்போது அவர் தெரியாதமாதிரிப் போவார். ஏன் அப்படி என்று புரியவில்லை. ஒருவேளை அப்பா அம்மா ஏதும் சொன்னார்களா அவருண்ட வீட்டை? பாவம் அவர்! விரும்புறாரா இல்லையா ஒன்றும் வெளிப் படையாக பேசவேயில்லை. நான் தான் ஏதும் பிழையாக விளங்கிக்கொண்டேனா? ஹ்ம்ம்.... மெலிதாக குற்ற உணர்விருந்தது. அவர் பல்கலைக்கழகம் போய்விட்டார். கொஞ்ச நாள்ல அவர்கள் வீடு மாறி போய்விட்டார்கள்.

அவர் இல்லாத கிணத்தடி ரொம்பவே வெறுப்பூட்டியது. அதன் நினைவுகள் சுழன்றவண்ணம் இருந்தது. விடுபட முடியவில்லை. சோகம் வடிந்தபடியே இருந்தது. அவரை எங்கேயாவது பார்க்கமாட்டமா என்று ஏங்கியது உண்டு. துளசி அக்கா வரும்போது அவரை பத்திக் கேக்க விருப்பம், ஆனால் கேக்கவில்லை.

அதன்பின் மாமா மகன் அகிலனை கலியாணம் பண்ணப் பேச்சு வார்த்தை தொடங்கியது. என்னை எதுவும் கேக்கவில்லை. அவர்கள் விருப்பப்படியே எல்லாமும் செய்துகொண்டேன். இனிமையாகவே அந்த பந்தம் அமைந்தது. அகில் எங்கள் வீட்டிலேயே இருந்தார். அப்பாவும் அம்மாவும் ஊருக்குப் போய்விட்டார்கள். மெல்ல மெல்ல அந்த வாழ்க்கையும் பழக்கமானது. ரொம்ப நாள் ஆகியும் குழந்தப் பேறு கிடைக்கவில்லை. நான்கு வருடங்களுக்குப் பிறகு கருத்தரித்து அவன் பிறந்தாள்.

நிளைவுகளில் இருந்து விடுபட்டு ராஜேந்திரனைப் பார்த்து புன்னகைத்தேன். அவர் தயங்கிநின்றார்ர. கூப்பிட உள்ளே வந்தார். மழை பலக்க தொடங்கியது...

"எப்படி இருக்குறீங்க? என்னை தெரியுதா?" என்றார். போர்டிக்கோவுக்கு உள்ளே வரத் தயங்கினார்.

"அட வாங்க வாங்க, உள்ள வாங்க, ஏன் அங்க நிக்குறீங்க" மெதுவாக உள்ளே வந்தார்ர. முன் ஹோலில் பிரம்பு நாற்காலியில் அமரவைத்தேன்.

"எப்படி இருக்குறீங்க.....?" அவர் கஷ்டப்பட்டுப் புன்னகைத்துக் கேட்டார்ர.

"...ம்ம்... இருக்குறம்.. அக்கா எப்படி? நீங்க இப்ப எங்க இருக்குறீங்க?"

"அக்கா.. இருக்குறா.. ரெண்டு பிள்ளைகள்.... உங்கட அப்பா அம்மா எங்கே..?" என்றார்.

"அவங்கள் ஊருக்கு போட்டாங்க.. அங்க தான் இப்ப... நானும் ஹஸ்பண்டும்தான் இங்க.. அம்மா அடிக்கடி வருவா.. நானும் நேற்றுதாள் போனா..."

"ஓ... அவர் எங்க?"

"வெளில் போட்டார், இப்ப வந்திடுவார். நீங்க இப்ப எங்க? கலியாணம் ஆச்சா?"

"சிங்கப்பூர்ல வேலை... லீவுக்கு வந்தன், சும்மா ஒருக்கா உங்களை பார்த்துட்டு போலாம் என்று வந்தன்... கலியாணம் இன்னும் பண்ணிக்கவில்லை..."

"ம்ம்..நான் தான் வேண்டாம் என்றன்.. இந்தமுறை செய்து வைக்குறது தான் என்று வீட்டுகாரர் விடாப்பிடியாக நிக்கினம்..." என்று மெலிதாக சிரித்தார்.

மாபிள்கப்பில் தேத்தண்ணி கொடுக்க ஒரு கணம் என்னை ஊடுருவிப் பார்த்து வேண்டிக்கொண்டார். என் பார்வையை தவிர்த்தது புரிந்தது.

குழந்தை அழுது கேட்டது...

"உங்க குழந்தையா.. சொல்லவேயில்லை.. எப்ப பிறந்தது. இதபத்தி நீங்க கதைக்கவேயில்லை! பார்க்கலாமா?"

தயங்கியவாறு அவரை தொட்டிலுக்கு அழைத்துச்சென்றேன். ஆர்வமாக பார்த்த அவருக்கு அந்த வித்தியாசம் உடனே தெரிந்திருக்க வேண்டும். அவர் முகமாறுதல் அபத்தமாகக் காட்டி கொடுத்தது. என்னிடம் ஏதும் கேக்கவில்லை.

இடுப்புக்கு கீழ் பகுதி வளைந்து நெளிந்து இருந்தது. டொக்டர்கள் மரபணுக்கள் சம்பந்தமாக நிறைய சொன்னார்கள். ஒன்று மட்டும் தெளிவாக புரிந்தது. அப்பா அப்போது சொன்னதும் புரிந்தது, இரத்த சொந்தத்தில் செய்தால் சில சமயம் இப்படித்தான் ஆகும் என்றார்கள். என் பிள்ளை ஊனமாகப் பிறந்திருந்தது. ●

---

**அ.தேவதாசனின் "கண்ணி" 21 ஆம் பக்கத் தொடர்ச்சி...**

விசாலத்தின் மகள் வலு அன்பாக சிந்தாமணியை வரவேற்றாள். விசாலாட்சி யின் புருசன் வவுனியாவில் ஒரு சாப்பாட்டுக் கடையில் வேலை செய்தான். விசாலாட்சி மிளகாய் ஆய புல்லுச் செதுக்க என்று கூலி வேலைக்கு போவாள். வீட்டில் பணத் தட்டுப்பாடு வரும்போது, அப்போதெல்லாம் விசாலம் சிந்தாமணியிடம் ஓடி வந்துதான் காசு மாறுவாள்.

"எங்க அம்மா இல்லையா?" எனச் சிந்தாமணி கேட்க விசாலாட்சியின் மகளின் கண்கள் கலங்கின. "நாங்கள் இடம்பெயர்ந்து போய் வன்னியில இருக்கயுக்க காய்ச்சல் வந்து அம்மா மோசம் போயிட்டா" என்றாள். இப்போது அவளும் அவள் புருசனும் மட்டும்தான் இங்கேயிருக்கிறார்களாம்.

சிந்தாமணி அவ்விடத்திலேயே ஒரு ஒப்புச் சொல்லி மெதுவாய்ப் பாடினாள். பின் எழுந்து "பிள்ள ஒரு குடம் தண்ணி அள்ளிக் கொள்ளுறன்" என்றவாறு கிணற்றை நெருங்கினாள். விசாலத்தின் மகள் இன்னும் அழுது முடியவில்லை. கண்ணைக் கசக்கிக் கொண்டே வேகமாக ஓடி வந்து "பொறு சிந்தாமணி" என்று சொல்லிவிட்டு தண்ணீர் அள்ளி சிந்தாமணியின் பானையிலோ சிந்தாமணியிலோ தண்ணி வாளி படாதவாறு மிகக் கவனமாக, நுட்பமாக, தட்டாமல் முட்டாமல் ஊற்றினாள். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத்து சாதிய இலக்கியத்தின் இன்றைய நிலை

**இன்பமகன்**

1. அறிமுகம்

"சாதி இப்போது எங்கு இருக்கிறது? கல்வி கற்று பொருளாதார விருத்தியை அனைவரும் பெற்றுவிடும் போது சாதி இல்லாது போய்விடும். யாரும் சாதி பற்றிப் பேசத் தேவையில்லை; எழுதத் தேவையில்லை. அப்படிப் பேசுவது, எழுதுவது சாதியை நினைவில் வைத்திருக்க உதவும்" - இப்படியாக பொதுவெளியில் பலர் பேசுவதைக் கேட்கக் கூடியதாக உள்ளது. இவ்வாறான வாதங்களின் உண்மைத் தன்மையை ஆராய்கிறது இக் கட்டுரை.

ஒரு நோயாளி தனக்கு நோய் இருக்கிறது என முதலில் ஏற்றால் மட்டுமே அதற்கான வைத்தியத்தை மேற்கொள்ள முடியும். தனக்கு நோய் கிடையாது என்பவனுக்கு வைத்தியம் செய்ய முடியாது. சித்த சுவாதீனம் உடையவன் தனக்கு நோயில்லை என வாதிடுவதால் தான் அவனுக்கு வைத்தியம் செய்வது சவாலாக உள்ளது. சாதிய சமூகத்தில் தான் நாம் இப்போதும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்ற பிரக்ஞை எமக்கு வேண்டும். அந் நிலையைத் துணிவோடு ஏற்கும் பட்சத்தில் மட்டுமே சாதியப் பிடியிலிருந்து விடுபடக் கூடிய முன்னெடுப்புகளை மேற்கொள்ள முடியும்.

எம் சமூகத்தில் எழுபதுக்கு முன்பிருந்த சாதியத் தீண்டாமை ஒடுக்கு முறை இப்போது கிடையாது என்பது சத்தியமான உண்மை. ஆயினும் தற்போது அதுசில இடங்களில் இறுக்கமாகவும் சில இடங்களில் நீர்த்துப்போன வடிவிலும் உள்ளது. என்பதனையும் ஏற்றாக வேண்டும். சாதி இன்னும் ஒழியவில்லை அது உறங்கு நிலையில் உள்ளது.

2. சாதிய அதிகார மாற்றம்

"மனித வரலாறு வர்க்கப் போராட்டங்களின் வரலாறு" என மாக்சியம் கூறுகிறது. வர்க்க சமுதாய அமைப்பில் எதிரி வர்க்கத்தின் இருப்பு இல்லாது ஒழிக்கப்படுவதன் மூலம் அமைப்பு மாற்றத்தினை ஏற்படுத்த இயலும். மேலை நாடுகளில் சொத்துடைய வர்க்கத்தை உடைமை நீக்கம் செய்து விட்டால் அது சொத்தற்ற வர்க்கமாகி சாதாரணமாகிவிடும். ஆனால் சாதியப் பண்பாடு உள்ள நாடுகளில் பொருளாதார மேம்பாடு கொண்ட ஒரு வர்க்கத்தை (அவ் வரக்கம் ஏதோவொரு சாதியாக இருக்கலாம்) உடைமை நீக்கம் செய்யும் போது அது சொத்தற்ற வர்க்கமாக மாறினாலும் அது தன் சாதி அடையாளத்தைத் துறப்பதில்லை. அந்த அடையாளம் பிறப்பினால் வந்தது. இவ்வித்தில் தான் நாம் வரலாற்றைத் திரும்பிப் பார்க்க வேண்டியுள்ளது.

சங்க காலத்தில் தமிழகத்தில் பௌத்த சமண மதங்கள் அதிகாரத்தில் இருந்துள்ளன. கி.பி.3ம் நூற்றாண்டில் களப்பிரர் என்ற அந்நிய சமூகத்தவர் ஊடுருவி அரசைக் கைப்பற்றி ஆண்டனர். அவர்கள் சமண சமயத்தை அதிகாரத்தில் வைத்தனர். சமணம் இறுக்கமான வணிகச் சாதி நலன் பேணும் மதமாக இருந்தமையால் வணிகச் சாதி பொருளாதார வளம் பெற்ற ஆளும் வர்க்கமாகவும் திகழ்ந்தது. பாண்டிய பல்லவ அரசர்கள் வணிக சாதியின் நலன் பேணுபவர்களாக சமண சமயத்தைத் தழுவியிருந்தனர். இந் நிலையில் கி.பி.5ம் நூற்றாண்டில் காரைக்கால் அம்மையார் மூலம் சிவனை முழுமுதற் கடவுளாக கொண்ட சைவ சமயத்தை எழுச்சி கொள்ள வைக்க நிலவுமைச் சமூகம் முயன்றது. இருநூறு ஆண்டுகள் கடந்து 7ம் நூற்றாண்டில் நாவுக்கரசர் ஞானசம்பந்தர் போன்றோரால் பக்திப் பேரியக்கம் முடுக்கி விடப்பட்டது. விவசாயிகளை அணிதிரட்டியதன் மூலம் பக்திப் பேரியக்கம் பலமடைந்தது. அரசர்கள் சமயண சமயத்தைத் துறந்து சைவ சமயத்திற்கு மாறுவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டனர். வணிகச்சாதி அதிகாரத்திலிருந்து தூக்கியெறியப்பட்டு விவசாய சாதியான வெள்ளாளரிடம் அதிகாரம் கைமாற்றப்பட்டது. நிலப் பிரபுத்துவ சமூகம் தனது அதிகாரத்தை உறுதிப்படுத்திக் கொண்டது. கி.பி.9ம் நூற்றாண்டில் சோழர் காலம் பிறக்கிறது. சோழப் பேரரசு பிராமணருக்கு நிதர்த்து வெள்ளாள சாதியினரைப் புனிதப்படுத்தி கல்வெட்டுகளில் பொறித்து வைத்தது. அதேவேளை அதிகாரமிழந்த வணிகச் சாதியினர் தம் சாதி அடையாளத்தைக் கைவிடவில்லை. "கெட்டாலும் செட்டி" என தம் சாதிய புனிதப் படிமத்தைப் பேணிவந்தனர். அதேபோல ஈழத்தில் வெள்ளாளர்கள் பொருளாதார அதிகார மட்டத்தில் மேல் நிலையில் உள்ளனர். ஆலய அர்ச்சகர்களாக சொத்தற்ற வர்க்கமாகவே பிராமணர்கள் இங்கு உள்ளனர். அவர்கள் வர்க்க நிலையில் கீழே இருந்தாலும் பண்பாட்டுத் தேசியத்தில் மேல் நிலையில் உள்ளனர். தமக்கான புனிதப் படிமத்தைப் பேணுகின்றனர். ஏனைய சாதியினரும் அவர்களது அவர்களது புனிதத்தை ஏற்கின்றனர்.

பொருளாதார பலம், அரசியல் அதிகாரம் எந்தச் சாதியிடம் இருந்தாலும் பண்பாட்டு ரீதியிலான புனிதப் படிநிலையில் அவற்றால் சிறு சலனத்தைக் கூட ஏற்படுத்த இயலுவதில்லை. ஒவ்வொரு தனிச் சாதியும் அதற்கு மேலடுக்கில் உள்ள சாதிகளின் புனிதத்தை விரும்பி ஏற்பதோடு, அதற்கு கீழடுக்கில் உள்ள சாதிகளை இழிவாகப் பார்க்கிறது. ஒரு சாதி ஏனைய மாற்றுச் சாதிகளை அந்நியமாக உணர்கிறது. எச் சூழலிலும் ஒரு சாதியானது அதற்கே உரிய புனிதத்தையோ இழிவையோ கொண்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருக்கிறது. "கல்வி கற்று பொருளாதார விருத்தியை அனைவரும் பெற்றுவிடும் போது சாதி இல்லாது போய்விடும்" என்ற நிலைப்பாடு இவ்விடத்தில் கேள்விக்குள்ளாகிறது.

### 3. இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம்

*1954* இல் தோற்றம் பெற்ற இச் சங்கத்தில் இடது சாரிகளும் தமிழ்த் தேசியத்தின் முற்போக்காளர்களும் அங்கம் வகித்திருந்தார்கள். சாதியத் தகர்ப்புக் குறிக்கோள் அச் சங்கத்தின் அடிப்படை அம்சமாக இருந்தது. பின்னாளில் "தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம்" தோற்றம் பெற்று வீறுநடை போட்டு முன்னேறுவதற்கு அச்சங்கத்திலிருந்து வெளிப்பட்ட இலக்கியப் படைப்புகளும் உந்து சக்தியாக அமைந்திருந்தது.

ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்க்கைக் கோலத்தை மண்வாசனையோடு பலரும் இலக்கியமாக்கினர். படைப்பாளிகள் வெவ்வேறு சாதிகளிலிருந்து வந்தாலும் ஐக்கியப்பட்டு ஓரணியில் நின்றனர். கே.டானியல், என்.கே.ரகுநாதன், பசுபதி, அ.ந.கந்தசாமி, சுபைர் இளங்கீரன், சில்லையூர் செல்வராஜன், செ.கதிர்காமநாதன், டொமினிக் ஜீவா, நீர்வை பொன்னையன், மு.செல்லையா, தெணியான், செ.கணேசலிங்கன், முரகையன், பெனடிற் பாலன், செ.யோகநாதன், புதுவை இரத்தினதுரை, முருகு கந்தராசா, இ.சிவானந்தன், சி.பற்குணம், நந்தினி சேவியர், க.தணிகாசலம், டானியல் அன்ரனி, சுபத்திரன், சாருமதி, வி.எம்.குகராஜா, ஜெயக்குமார், குழந்தை ம.சண்முகலிங்கம், மௌனகுரு ஆகிய இலக்கியவாதிகள் ஒடுக்கப்பட்ட மக்களின் மீட்சிக்காக பங்காற்றியுள்ளனர். இவர்களுள் கே.டானியல் மாத்திரமே பஞ்சமர் வரிசை நாவல்களைப் படைத்துள்ளார். ஏனையோர் சாதிய இலக்கியங்களைத் தனிந்துப் படைத்தவர்கள் அல்லர். தலித் இலக்கியப் பிதா மகனாகக் கருதப்படும் கே.டானியல் வர்க்கப் பார்வையைக் கடந்து, சாதிய உணர் வோடு இலக்கியப் படைப்புக்களைத் தருகின்ற போது வெள்ளாளர் சாதி மீதான காழ்ப்பு வெளிப்படுகிறது. அவரின் அப்போதைய சூழலிலிருந்த கோபம் நியாயமாகப் பட்டாலும் சமூகத்தை விஞ்ஞானப் பார்வையின்றிப் பார்ப்பது பயனற்றதாகி விடுகிறது. எந்தவொரு சாதியையும் எதிரிச் சாதியாக கட்டமைத்தல் தகாதது. எதிர்ச்சாதி என ஒன்று கிடையாது! இருப்பினும் செ.கணேசலிங்கனின் "நீண்ட பயணம்" என்ற நாவல் சோசலிச யதார்த்தவாதப் படைப்பாக அமைந்திருக்கிறது. காலத்தின் தேவையாக, எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. எஸ்.அகஸ்தியரின் "எரி நெருப்பில் இடைபாதை இல்லை" என்ற நாவலும் அவ்வாறான ஒன்றே. அதற்கு அடுத்த பாய்ச்சலாக வெளிவந்த நாவல் தெணியானின் "பொற்சிறையில் வாழும் புனிதர்கள்." சாதியப் பண்பாட்டில் உயர்ந்த நிலையில் இருக்கும் பிராமணர் வர்க்க நிலையில் தாழ்வாக உள்ளனர். அவர்களின் துயரம் இந் நாவலில் வெளிப்படுகிறது.

### 4.ஆயுதப் போராட்ட காலத்தில் சாதியம்

எழுபதுகளில் தனித் தமிழீழக் கோரிக்கையை முன்வைத்து இளைஞர்கள் ஆயுதம் ஏந்திப் போராட ஆரம்பித்ததும் பேரினவாத ஒடுக்குமுறை தமிழர் தாயகம் பூராகவும் கட்டவிழ்த்து விடப்பட்டது. தமிழர் இளைஞர் அனைவரும் சாதி பேதம் பாராது தாக்கப்படனர். சாதி வேறுபாடுகளைக் களைந்து இளைஞர்கள் ஓரணியில் நின்று போரிட்டனர். இந்நிலையில் தேசியவாதம் முன்னிலைக்கு வர சாதியம் பின்னிலை அடைந்தது. இன விடுதலையின் பின் சாதிய விடுதலை பற்றிச் சிந்திக்கலாம் என ஒத்திப்போடப்பட்டது. எண்பதுகளின் பின் ஆக்க இலக்கிய வாதிகள் பலரும் தேசியத்துக்குள் மூழ்கி இலக்கியம் படைத்தனர். பெரும்பாலும் போரிலக்கியாகவே அமைந்திருந்தன. போராளிகளின் வீரதீரச் செயல்கள், போரால் மக்கள் படும் இன்னல்கள் படைப்புகள் ஆயின. சாதியம் பற்றிய உரையாடல்கள் பெரிதும் அற்றுப் போயிருந்தன. சமூகம் புதுவித சமத்துவம் பெற்று இயங்கத் தொடங்கியது. சாதியச் சிக்கல்கள் உறங்கு நிலைக்குச் சென்றன. சாதி குறித்து பொதுவெளியில் இழிவாகப் பேசுவது தடை செய்யப்பட்டிருந்தது.

### 5. போரின் பின் சாதியம்

தற்போது போர் நிறைவடைந்த நிலையில், சுயநிர்ணய உரிமையோடு கூடிய சமஷ்டி என்ற கோரிக்கையில் தமிழ்த் தேசியம் தொடர்ந்து இயங்கி வருகின்றது. தமிழர் தாயகத்தின் மீதான சிங்களப் பேரினவாதத்தின் பிடி இன்னும் தளரவில்லை. ஏதொவொரு வடிவில் பேரினவாதத்தின் பிடி தளர்ந்து தமிழர் தரப்பிடம் சுயநிர்ணய உரிமை கிடைக்கும் பட்சத்தில், தேசிய பிரச்சினை தீர்க்கப்பட்டதும் சாதியம் மேற்கிளம்பி முதன்மைப் பிரச்சினையாக வரும். அதுவரை சாதியம் பின்னிலையில் இருக்கும் "சாதி இப்போது எங்கு இருக்கிறது?" எனக் கேட்பவர் அனைவரும் அதிர்ந்து நிற்பர். ஆயினும் இப்போது சாதியம் தன்னை அடையாளம் காட்டாமலும் இல்லை. எடுத்துக்காட்டாக வரணியில் ஒரு கோயிலில் ஊர் கூடித் தேரிழுக்கும் நிகழ்வில் தீண்டாமை காரணமாக Excavator (JCB) இயந்திரத்தைக் கொண்டு அப்பணி நிறைவேற்றப்பட்டதைக் குறிப்பிடலாம்.

### 6. போரின் பின் சாதிய இலக்கியம்

*2009*ல் போர் ஓய்ந்தபிறகு சாதிய இலக்கியம் சொல்லிக்கொள்ளும் படியாகப் படைக்கப்படவில்லை. நீ.பி.அருளானந்தம் அவர்களின் "துயரம் சுமப்பவர்கள்", "இந்த வனத்துக்குள்" என்கிற இரு நாவல்கள்; தெணியான் அவர்களின் "குடிமைகள்", "ஏதனம்", "மூவுலகு" என்கிற இரு நாவல்கள்; நா.யோகந்திரநாதன் அவர்களின் "இடிபடும் கோட்டைகள்" ஆகியன தனியே சாதியம் பேசும் நாவல்களாக உள்ளன. அவற்றுள் குடிமைகள், இடிபடும் கோட்டைகள் ஆகியன அறுபது காலப்பகுதியைப் பிரதிபலிக்கின்றன. "ஏதனம் என்ற நாவல் வித்தியாசமான உருவத்தில் வெளிவந்தது. காலத்தின் போக்கில் நீரருந்தும் பாத்திரம் ஒன்றின் மாற்றம் குறித்துப் பேசுகிறது. வெளியாகிய அனைத்து நாவல்களும் சிறந்தவை. அவற்றுள் "துயரம் சுமப்பவர்கள்" (வவுனியா மண்ணின் தோட்டிகள் வாழ்வு பற்றிப் பேசுகிறது); "குடிமைகள்" (யாழ் மண்ணின் நாவிதர்களின் வாழ்வு பற்றிப் பேசுகிறது); "இந்த வனத்துக்குள்" (ஈழத்தின் குறவர் சமூக வாழ்வு பற்றிப் பேசுகிறது) ஆகிய மூன்றுமே அரச இலக்கிய விருது பெற்றவை எனினும் போரின் பின் நிலவக் கூடிய சாதியத்தை குறிப்பிடுவதாக எந்தவொரு நாவலும் வெளிவரவில்லை என்பதை உறுதியாகக் கூற முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதைகள் கூட பரந்தளவில் படைக்கப்பட வில்லை.

ஈழத்தில் சாதிய இலக்கியம் படைப்பதில் ஒரு தேக்க நிலை காணப்படுகிறது. இத் தேக்க நிலைக்குரிய காரணங்கள் ஆராயப்பட வேண்டும்.

7. தொகுப்புரை

*1.* சாதிய இலக்கியம் என்று கூறும் போதே, "சாதியைப் பற்றி ஏன் இந்தக் காலத்தில் பேசுகிறீர்கள்?" எனக் கேட்டு முகஞ் சுழிக்கின்றனர். சாதியின் பெயரை நேரடியாகக் குறிப்பிடுவதை அநாகரிகம் எனக் கருதும் நிலை காணப்படுகின்றது. அது ஒரு வளர்ச்சியே எனத் துணிந்து கூற முடியும். எல்லோருக்கும் கெட்ட வார்த்தைகள் தெரியும்; ஆனால் பேசுவதில்லை. அவற்றைப் பேசுவது இழி செயலாகப் பார்க்கப்படும். அதே போல பொது வெளியில் சாதியின் பெயரைப் பயன்படுத்துவதும் இழி செயலாகப் பார்க்கப்படுகின்றது. போர்க்காலத்திற்கு முன்னர் சாதியின் பெயர் நேரடியாகப் பயன்படுத்தப்பட்டதுஎன்பது கருத்திற்கு கொள்ள வேண்டும். அதற்கு மேல், கீழடுக்குச் சாதிகளை குறிப்பிடுவதற்கு முன்னர் பயன்படுத்தப்பட்ட, "எளிய சாதிகள், கண்ட நிண்ட சாதிகள், தீண்டாச் சாதியள்..." என்ற வழமை தற்போது இல்லை. மாறாக "மற்றாக்கள், அந்தப் பக்கத்தில இருக்கிற ஆக்கள், சீவல் தொழில் செய்யிற ஆக்கள்; சலவைத் தொழில் செய்யிற ஆக்கள்" என்று தொழில் குறிப்பிட்டுப் பேசுகின்றனர். அந்த ஊரில் அத்தொழில்களைச் செய்பவர்கள் ஒருவர் கூட இல்லாத நிலையிருந்தாலும் அப்படி தொழில் கூறி சமூகத்தை அடையாளப் படுத்து கின்றனர். மேலும் வெவ்வேறு சாதியினரிடையே வர்க்க உறவு காணப்படு கின்றது. "பழகலாம்; சம்பந்தம் செய்ய முடியாது! என்ற அளவிற்கு உறவாடுகின்றனர். சாதியிடைக் கலப்பினை சாதிய அடுக்கில் மேல் நிலையில் இருப்பவர் மட்டுமல்ல, கீழ் அடுக்கில் இருப்பவரும் விரும்புவதில்லை என்பதை கருத்திற் கொள்ள வேண்டும். ஒருவுன் தன் வீட்டிற்கு அருகே இருக்கும் மாற்றுச் சாதியினை அந்நியனாக உணர்கிறான். தொலைவிலிருந்தாலும் தன்சாதிக்காரனை உறவினனாக உணர்கிறான். அதன் காரணமாகவே பத்திரிகைகளில் மணமகன் - மணமகள் தேடும் விளம்பரம் வெளியாகும் போது, "பேசக் கூடாது!" என பலரும் கூறும் "சாதி" பச்சையாகக் குறிப்பிடப்படுகின்றது. இச் செயலை இலகுவாக எடுக்க முடியாது. சாதிய ஒழிப்பு பண்பாட்டுத் தளத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

*2.* ஒவ்வொரு சாதிக்குள்ளும் வர்க்க வேறுபாடுகள் இருக்கின்றன. அறுபதுகளில் மேலடுக்குச் சாதிகளுக்குள் வர்க்க வேறுபாடு காணப்பட்டது. சொத்தின் அடிப்படையில் ஏற்படும் சொந்தம் அது. அவ் வர்க்க வேறுபாட்டை செ.கணேசலிங்கன் அவர்கள் "சடங்கு" என்ற நாவலில் காட்டியிருக்கிறார். சிறந்த நாவல் அது. அக்காலப்பகுதியில் கிழடுக்குச் சாதிகளுக்குள் வர்க்க வேறுபாடு பெரிதாக இல்லை பெரும்பான்மையானோர் விவசாயக் கூலிகளாகவும் பாட்டாளிகளாகவுமே இருந்தனர். தற்போது பொருளாதாரம், கல்வி ஆகியவற்றில் விருத்தி பெற்றதால் அவர்களிடையே வர்க்க வேறுபாடு தோன்றியுள்ளது. அக மணங்கள் தவிர்க்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக பறையடிக்கும் தொழிலிலிருந்து விடுபட்டவர் தம் சாதிக்குள் அதே தொழிலைச் செய்யும் குடும்பங்களுக்குள் கௌரவம் என்ற பெயரில் திருமணம் செய்வதைத் தவிர்த்து விடுகின்றனர். தமக்குள் "புனிதம்" பேணி தம் சமூகத்தின் ஒரு பகுதியை விலக்கி வைக்கின்றனர்.

*3.* ஆரம்ப காலங்களில் இலக்கியத்தில் கடவுள் பற்றி மட்டுமே பேசப்பட்டது. நிலவுடைமைச் சமூகத்தில் கடவுளையும் கடவுளின் மண்ணுலகப் பிரதிநிதியான மன்னனையும் பற்றிப் பேசப்பட்டது. கடவுளையும் மன்னனையும் தவிர்த்து முதலில் வணிகர் பற்றிப் பேசியது சிலப்பதிகாரம். கோவலன் - கண்ணகி வணிகர் சாதியைச் சேர்ந்தவர்கள். ஒக்ரோபர் புரட்சியில் பாட்டாளி வர்க்கம் அதிகாரத்தை கைப்பற்றிய பின் உலகில் பெரும் மாற்றம் நிகழ்கிறது. சாதாரண மனிதர்களைப் பற்றிப் பேசும் இலக்கியங்கள் தோன்றுகின்றன. ஈழத்தில் விளிம்புநிலை மனிதர்களையும் அவர்களின் வாழ்வியலையும் கூறும் இலக்கியங்கள் தோன்றுகின்றன. அவைகள் இழிசனர் இலக்கியம்" என பண்டிதமரபினர் நிராகரித்தனர். ஆயினும் அவற்றின் வளர்ச்சியை அவர்களால் தடுக்க இயலவில்லை. அக்காலத்தில் படைக்கப்பட்ட செ.கணேச லிங்கனின் "நீண்ட பயணம்" நாவல் ஒரு மைல்கல் எனக் கொள்ளலாம். அந் நாவலானது க.பொ.த உயர்தர தமிழ்மொழிப் பாடப்பரப்பில் சேர்க்கப்பட்டது. அதனை வகுப் பறையில் கற்பிக்கப்படும் போது உளவியல் நெருக்கடி தோன்றுவதாகக் கூறப்படு கின்றது. அந்நாவலில் சாதியின் பெயர்களும் அவர்களின் வாழ்வியலும் வெளிப்படை யாகக் கூறப்பட்டிருப்பது சங்கடங்களை ஏற்படுத்திவிடுகின்றன. கம்பராமா யணத்தையும் கலிங்கத்துப் பரணியையும் கற்க விரும்பும் மாணவர்கள் ஐம்பது ஆண்டின் முன் நடந்தவற்றைக் கற்க ஏன் விரும்பவில்லை? அதனூடு இழையோடு உளவியலைப் பார்த்தால், ஐம்பது ஆண்டுகளின் முன் நிகழ்ந்த சாதிய ஒடுக்கு முறை பற்றிக் கற்கின்ற போது, கீழடுக்குச் சாதியிலிருந்து வந்த மாணவர் அவமானமாக உணர்கின்றனர்; மேலடுக்குச் சாதியிலிருந்து வந்த மாணவர் பெருமையாகவும் உணர்கின்றனர். அப்படியாயின் அப்பாடத்தை வகுப்பறையில் கற்பிக்காது விட்டு விடுவதா தீர்வு? ஏன் வரலாற்றைக் கற்க மறுக்கின்றனர்? வரலாற்றைப் புரிந்து கொள்ளாத சமூகம் வளர்ச்சியடைய முடியாது அல்லவா. அப்படியாயின் எம் சமூகத்தில் நிகழ்ந்திருக்கக் கூடிய மாற்றம்தான் என்ன? மாணவரிடையே வெளிப்படும் இந்த உணர்வு வெளிபாட்டின் பொருள் என்ன?

*4.* சாதியமானது இரண்டு பகுதிகளாக இயங்குகிறது. ஒன்று வீட்டுக்குள் நிலவும் சாதியம்; மற்றது பொதுவெளியில் நிலவும் சாதியம். பொது வெளியில் பேசக்கூடாது என தடை விதித்து நாகரீகப் போர்வைக்குள் வாழும் சாதியம் வீட்டுக்குள் மிகவும் இறுக்கமாகவே உள்ளது. பொதுவெளியில் சாதிய சமத்துவம் என்பதே உச்சநிலை; அதற்கு அப்பால் சாதிய ஒழிப்பு நிகழாது. வீட்டில் மாற்றம் நிகழ வேண்டும். அப்போது தான் சாதிய ஒழிப்பு என்பபுது சாத்தியமாகும். "வீட்டுக்குள் நீங்கள் என்னவும் செய்யுங் கள்; பொது வெளியில் வேண்டாம்" என்ற தத்துவமே இப்போது காணப்படுகின்றது. உதாரணமாக, பொதுவிடத்தில் ஒரு சந்தையை அமைத்துவிட்டு, "இது குறித்த சாதிக்குச் சொந்தமானது" எனப் பெயர்ப்பலகை இட்டால் போர்க்கொடி தூக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார்கள். "என் மகளுக்கு இன்ன சாதி மணமகன் தேவை" என விளம்பரம் செய்தால் மௌனமாக இருப்பார்கள். சாதியம் தொடர்பாக பொதுவெளியில் என்னதான் மாற்றம் செய்தாலும் வீட்டுக்குள் நிலவும் சாதியம் ஒழியும் வரை சாதி ஒழிப்பு சாத்தியமல்ல.

5. தற்போது கீழடுக்கிலுள்ள சாதிகளின் பெரும் பகுதியினர் கீழ் மத்தியதர வர்க்கத்துக்குள் நகர்ந்துள்ளனர். ஆகமக் கோயில்களை அமைத்து பொதுப் பண்பாட்டைப் பின்பற்றி பொதுவெளியில் கலந்து தமது அடையாளங்களைப் பொதுமைப்படுத்த விரும்புகின்றனர். பச்சை குத்தப்படுதலைத் தவிர்க்க விரும்புகின்றனர். ஆயினும் இன்னொருதரப்பு பச்சை குத்துவதற்குத் தயாராகவே உள்ளது என்பதும் மறுக்க முடியாத உண்மை. இந்த யதார்த்தநிலை இலக்கியப் பரப்பிற்கும் பொருந்தும்.

6. தமிழக தலித் இலக்கியப்பக்கம் திரும்புவோம். எழுத்தாளர் இமயம் அண்ணாமலை ஓர் நேர்காணலில், "... இலக்கியம் என்றால் இலக்கியம் தான். அதில் என்ன தனியே தலித் இலக்கியம்? பிராமணரைப் பற்றி எழுதம் போது பிராமண இலக்கியம் என்று கூறுவதுண்டா? பொருளாதார பண்பாட்டு அடிநிலை மக்களைப் பற்றி எழுதும் போது ஏன் தலித் இலக்கியம் எனப்படுகின்றது?" என்ற சாரப்படக் கேள்வி எழுப்பியிருந்தார். தலித் இலக்கியம் என பேசுபொருளால் மாத்திரம் அடையாளப்படுத்த்ப்படுவதோடு நின்று விடாது, அதைப் படைக்கும் படைப்பாளியையும் தலித் படைப்பாளி என அடையாளப்படுத்தப்படுகின்றார். அப்படிப் பச்சை குடுத்தப்படுவதை தற்போது இலக்கியவாதிகள் பலரும் விரும்புவதில்லை.

> //புதிய தலைமுறை தலித் கவிஞர்கள் தங்கள் மொழியையும் உள்ளடக்கத்தையும் பொதுமைப்படுத்தவும் விரித்துக்கொள்ள விழைகிறார்கள். இதன் உளவியல் பரிமாணம் ஆழமானது. முத்திரை குத்தப்படுதல், மாதிரியாக்குதல் இவற்றிலிருந்து விடுபட விரும்புகிறார்கள். தலித் தன்னிலையோடு தனிப்பட்ட தன்னிலையையும் வெளிப்படுத்த நினைக்கிறார்கள். அடையாளங்களை ஏற்க மறுத்தலும் ஏற்று மறுத்தலும் நேர்மறையான சாதகமான விடயங்களாகக் கருத லாம். அடையாளங்களை ஏற்க மறுப்பதென்பது பொது வெளியில் கலப்ப தாகவும் ஏற்று மறுத்தல் என்பது இந்த அடையாளத்திலிருந்து காத்திரமான செயல்பாடுகள் நிகழ்கிறதாகவும் பொது வெளிக்கு அறிமுகப்படுத்துகிறது; கூடவே அடையாளங்கள் குறித்து பொது புத்தி வைத்திருக்கும் கருத்தியல்களை அவை மீறுவதாகவும் அது நிகழ்கிறது.//(காலச்சுவடு 221 இதழ்)

மேற்கூறிய கருத்தை ஈழ இலக்கியப்பரப்பிற்கும் பொருத்திப் பாரக்கலாம்.

7. சாதியத்தை துறந்த தேசியவாதம், தேசிய வாதத்தை துறந்த சாதியம் இரண்டுமே முழுமை பெறாது. புதிய படைப்பாளர் பலரும் தேசியவாதம் பற்றியே எழுதிவிரும்புகின்றனர். பேரினவாதத்திற்கோ அரசிற்கோ சவால்விட்டு எழுதும் போது பெயரும் புகழும் கிடைக்கிறது. மாறாக சாதியம் பற்றி எழுதும் போது பச்சை குத்தப்படலும் புகழிழப்பும் வந்து சேர்கின்றன. சமூக அமைப்பை கேள்விக்கு உட்படுத்துவதை ஒவ்வாமை மனோபாவத்தோடு பார்க்கின்றனர். ஆகையால் சாதியம் பற்றி எழுதுவதற்கு இளைய படைப்பாளிகள் தாமாக முன்வர வாய்ப்பு மிகக் குறைவு. ஐம்பதுகளில் தோன்றிய முற்போக்கு எழுத்தாளர் சங்கம் போல ஒன்று தற்போது உருவாக்கப்பட்டு, சாதியம் பற்றிய விரிவான உரையாடல் செய்யப்பட வேண்டும். இல்லையேல் மூத்தவர்கள் மறைந்து விட இளையவர்கள் யாரும் சாதி பற்றி எழுத முற்படமாட்டார்கள் என்பதே யதார்த்தம் சான்று கூறும் உண்மையாகும்.

8. எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படாது இருக்கும் பட்சத்தில் சாதி அதன் வழியே ஒழிந்துவிடுமா எனக் கேட்டால், இல்லை! என்பதே பதிலாகும். இப்போது தோன்றியிருக்கும் சாதிய சமநிலை அனைத்துச் சாதிகளுக்கும் சௌகரியமாக அமைந்திருப்பதால் சாதியம் பற்றிப் பேசாதிருக்க விரும்புகின்றனர். தற்போது தேர்தல் அரசியல், நிர்வாகத்துறை போன்ற அனைத்திலும் சாதிய நுண் அரசியல் காணப்படுவது யாவரும் அறிந்ததே. கீழடுக்குச் சாதியினர் தமக்குரியவற்றைக் கேட்காத வரைக்கும் யாவும் சுபமே. அப்படிக் கேட்டு அவர்கள் தம்மை அடையாளப்படுத்த விரும்பப் போவதில்லை. மேலடுக்குச் சாதியினர் இப்போது இருப்பது போலவே இருப்பதே சிறந்தது எனக் கருதுகின்றனர். ஆகையால் சாதிய இலக்கியம் பொதுவெளியில் வரவேற்கப்படுவதில்லை. சாதிய ஒழிப்பு என்பது உடனடியாகச் சாத்தியப்பட்டுக் கூடியதல்ல. தீண்டாமை ஒழிப்பு சாதிய சமத்துவம் - சாதிய ஒழிப்பு என்ற படிமுறையில் நிகழ வேண்டும். இப்போது எமது சமூகம் தீண்டாமை ஒழிப்பு சாதிய சமத்துவம் என்ற இடைநிலைப் படியில் உள்ளது. சாதிய சமத்துவத்தோடு திருப்தியடைய முடியாது. அது சாதிய இருப்பைப் பாதுகாத்தபடி இருக்கும். இல்லாத ஒன்றை இருப்பது போல் கருதுவது மாயை. சாதியமும் ஒரு மாயைதான். ஆனால் அது எம் மரபணுவில் ஊறியிருக்கிறது. முன் பின் பழக்கமற்ற ஒருவரைக் காணும் போது மனிதன் என்ற உணர்வே ஏற்படுகிறது. அதுவே எம் வீட்டின் அருகிலுள்ள மாற்றுச் சாதியினைக் காணும் போதும் ஏற்பட வேண்டும். அந்த உளவியல் மாற்றம் நிகழும் வரையில் பண்பாட்டுத் தளத்தில் இயங்க வேண்டிய தேவை ஜனநாயக முற்போக்கு சக்திகளோடு இலக்கிய வாதிகளுக்கும் உண்டு. தற்போதைய சூழலில் காணப்படும் சாதியச் சிக்கல்கள் பலவற்றை இங்கே குறிப்பிட இயலும் எனினும் ஆக்க இலக்கிய வாதிகளுக்கு இடையூறு ஏற்படாவண்ணம் விலகி நிற்கிறேன். சம்பவங்களைக் கலைப்படைப்பாக வழங்கும் போது ஈழத்து சாதிய இலக்கியமானது புதிய பரிமாணம் பெறும் என்பது என் நம்பிக்கை.

உசாத்துணை:

1. சாதி தேசம் பண்பாடு கலாநிதி.ந.இரவீந்திரன்
2. சாதிச் சமூக வரலாற்றில் வர்க்கப் போராட்டம் - கலாநிதி.ந.இரவீந்திரன்
3. காலச்சுவடு (இதழ் 221)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# ஜீவநதி வெளியீடுகள்*






















































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org